கல்கி

KALKI
7.9.86
ரூ. 1.50




அமரர் கல்கி:

"சரித்திர நாவல்களில் சரித்திரம் படைத்தவர்!"

– கலந்துரையாடல்

ஃபாரெக்ஸ்® முதன்முதல் தேர்வு!



ஏனெனில் புதிய மேம்பட்ட ஃபாரெக்ஸ்® முதன்முதலாக திட உணவிற்கு மாறும் குழந்தைக்கென இன்றியமையாத உட்பொருள்கள் சரியான அளவுகளில் சேர்க்கப்பட்டதாகும்.

குழந்தையின் வளர்ச்சிக்கும் மென்மையான செரிக்கும் சக்திக்கெனவும் சரியான அளவில் புரதங்களும் கொழுப்புச் சத்துக்களும் அடங்கியதாகும் ஃபாரெக்ஸ்.

குழந்தையின் இரத்தத்தை ஆரோக்கியமாக வைக்க இதில் போதுமான அளவு இரும்புச் சத்தும் உள்ளது.

குழந்தையின் எலும்புகளும் பற்களும் திடமாக வளருவதற்கு உகந்த விகிதத்தில் கால்ஷியம்-ஃபாஸ்ஃபரஸ் அடங்கியதாகும் ஃபாரெக்ஸ்.

இவை தவிர, புதிய ஃபாரெக்ஸ் கலப்பதற்கு எளிதானது...சுவையிக்கது.



பால் சேர்க்கத் தேவையில்லை!
நீருடன் கலந்து கொடுத்தால் போதும்.

புதிய மேம்பட்ட **ஃபாரெக்ஸ்®**



அடி வாங்கியவர் பேசுகிறார்:

"இந்தியை ஆதரிக்க உரிமை கிடையாதா?"

"தமிழ்நாட்டிலுள்ள திராவிடக் கட்சிகள் 'இந்தி எதிர்ப்பு' என்ற ஆயுதத்தை வைத்தே தங்கள் அரசியலை நடத்திக் கொள்ளப் பார்க்கின்றன" என்று ஆவேசமாகப் பேசுகிறார் இந்தி ஆதரவு மாநாடு நடத்தி நாற்காலி வீசப்பட்டதால் அடி வாங்கிய பத்திரிகையாளர் கயிலை மன்னன்.

"தமிழ்நாட்டிலே முதன்முதலாக இந்தி ஆதரவாளர் மாநாடு நடத்தியவன் நான்தான். இந்தி வேண்டுமா, வேண்டாமா என்று ஒரு தேர்தல் நடத்தினால் 'வேண்டும்' என்று கூறுபவர்கள்தான் அதிகம் இருப்பார்கள் என்று தெரிய வரும்" என்று சொல்லும் கயிலை மன்னன், இனி தெருக்களில் இந்தி ஆதரவுக் கூட்டங்கள் நடத்தப் போகிறாராம்!

மாநாடு அன்று மண்டப வாயிலில் கவிஞர்கள் மு. மேத்தா, முத்துலிங்கம், செல்வி அருள்மொழி போன்றவர்கள் மாநாட்டை எதிர்த்துக் காட்டுத்தனமாகக் கத்தினார்களாம். புலமைப்பித்தன் அரசவைக் கவிஞராக இருப்பதால், அவர் அரசாங்கக் காரிலேயே வந்து கோஷம் போட்டுவிட்டுச் சென்றாராம்!

மாநாட்டுக்கு வந்திருந்த சில மாணவர்களின் குறுக்குக் கேள்விகளுக்குப் பதிலளித்துக் கயிலை மன்னன் பேசிக் கொண்டிருக்கும்போது கவிஞர் வா.மு. சேதுராமன் ஒரு பெட்டியோடு மேடைக்கு முன்னால் வந்து நின்று கொண்டு, 'நாசமாகப் போக' என்று பெட்டியை ஓங்கி அடிக்க, கயிலை மன்னனைக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்த மாணவர்களில் ஒருவர் நாற்காலியை எடுத்து வேகமாய் வீச, மைக் மீது நாற்காலி பட்டு, மைக் கயிலை மீது சாய, தலையில் சிவப்புத் திரவம். ஆனாலும் கலங்கவில்லை கயிலை; மாநாடு இறுதிவரை நடந்து முடிந்தது.

"கருத்தோடு கருத்து மோதலாமே தவிர வன்முறையைக் கையாளுவது எந்த விதத்தில் நியாயம்? என்று கேட்கிறார் கயிலை. இந்தி எதிர்ப்பு என்று சொல்ல அவர்களுக்கு உரிமை உள்ளபோது, இந்தி ஆதரவு என்று சொல்ல இந்த ஜனநாயக நாட்டில் எனக்கு உரிமை இல்லையா....?"— ஆணித்தரமாய்க் கேட்கும் கயிலை மன்னன் வாதத்தில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

'நாசமாய்ப் போக' என்று மேடையில் பெட்டியை அடித்த கவிஞர் வா.மு. சேதுராமன் இரண்டு நாட்கள் கழித்து, 'உங்களுக்கு ஏற்பட்ட துன்பத்துக்கு வருந்துகிறேன். நீங்கள் சீக்கிரம் குணமடையப் பிரார்த்திக்கிறேன்' என்று கயிலைக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்!

—ப்ரியன்.

எம்.ஜி.ஆரின்



வாசகர் பட்டி மன்றம்:

வாசகர் தீர்ப்பு

ஜெயலலிதாவுக்கு ஆதரவாக	59%
வீரப்பனுக்கு ஆதரவாக	36%
இருவரையும் ஆதரிக்காமல்	5%

ஜெயலலிதாவுக்கு ஆதரவாக முதல் பரிசு பெறும் கட்டுரை:

இன்றைக்குத் தமிழகம் உள்ள நிலையில் ஓர் அரசியல் கட்சி மிகப் பிரகாசமாக இருக்க வேண்டுமெனில், அதன் தலைமைப் பொறுப்பில் உள்ளவர் எல்லா வகைகளிலும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டியது மிக, மிக அவசியம். அத்தன்மைகள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றுத் தனித் தன்மையுடன் விளங்குபவர் கலைச்செல்வி ஜெயலலிதா அவர்களே.

1. தாம்கலந்துகொள்ளும்நிகழ்ச்சிகளில் மக்களைக் கவர்ந்து வசீகரிக்கும் தன்மையும், தம் பேச்சைக் காத்திருந்து கேட்கும் ஆர்வத்தையும், தற்போதைய தலைவரைப் போல் எதிரிகளையும் பிரமிக்கச் செய்யும்படி இலட்சக்கணக்கான மக்கள் கூட்டத்தைக் கூட்டும் ஆற்றலும் படைத்தவர்.

2. மாற்றுக் கட்சியினர் கூறும் குற்றச்சாட்டுக்களுக்கும், விடுக்கும் சவால்களுக்கும், அவிழ்த்துவிடும் புளுகு மூட்டைகளுக்கும் தக்க முறையில் சரியான, தெளிவான, அறிவுபூர்வமான பதில்களைச் சலசலப்புக்களுக்கு அஞ்சாமல் கூறும் ஆற்றல் படைத்தவர்.

3. ஆட்சிப் பொறுப்பு அல்லது கட்சிப் பொறுப்பில் இருக்கும்போது மட்டும் பதவி அதிகாரத்தில் பிரகாசித்து, அந்தப் பதவிகள் இல்லாத போது இருக்கும் இடத்தைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் இல்லாமல், மக்கள் மனத்திலே எப்பொழுதும் மதிப்பும், செல்வாக்கும் மிக்கவர்.

4. கிளைத் தலைவர்கள், தொண்டர்களிடையே அவ்வப்போது ஏற்படும் சிறு மாறுபட்ட கருத்துக்களையும், பல்வேறு சூழ்நிலைகளில் ஏற்படுகின்ற பிரச்னைகளையும் பரிவோடு பரிசீலித்துத் தட்டிக் கொடுத்து அமைதியான முறையில் தீர்க்கும் மனப்



பாங்கு படைத்தவர். தவிர தலைவர் எடுக்கும் முடிவுதான் சரியானது என அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி, கட்டுக் கோப்புடன் அரவணைத்துக் கட்சியை நடத்திச் செல்லும் தாய்மைக் குணம் கொண்டவர்.

5. ஆங்கில மொழியில் இவருடைய புலமையும், சரளமான பேச்சுத் திறமையும் அகில இந்திய ரீதியில் அனைத்து மாநிலக் கட்சிகளுடனும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், பிரச்னைகளில் உள்ள உண்மை நிலையை அறிந்து கொள்ளவும், முடிவெடுக்கவும் உதவும்.

6. மத்தியில் உள்ள அனைத்துப் பிரிவு அமைச்சர்களிடமும் — குறிப்பாகப் பிரதமரிடம் — இவர் கொண்டுள்ள செல்வாக்கு அபரிமிதமானது தமிழகத்திற்கு மிக, மிக அவசியமானதும் கூட.

7. பொது வாழ்வில் நேர்மையுடன், ஊழலின் நிழல் கூடத் தன் மேல் படாமல் கண்ணியத்தைக் காப்பாற்றி வந்துள்ளார். தலைவரின் நம்பிக்கையைப் பெற்று இதயக் கனியின் இயக்கமாக உள்ளவர்.

இவை அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற ஜெயலலிதாவே அ. இ. அ. தி. மு. க.வைத் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்திச் செல்லத் திறமை பெற்றவர். சிங்கக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் பொறுப்பு சிங்கத்துக்கு மட்டுமே கிட்டும். நரிகளுக்கு அல்ல!

— துறையூர். திருமதி. ஆர். வளர்மதிரத்தினம்.

மதுரையில் ஜெயலலிதா பேசிய ஒரு கூட்டத்தில் அமைச்சர். திருச்சி சௌந்தரராஜன் "ஸ்பீக்கர் ஹாரனைத்" தூக்கிப் பிடித்துக் கொண்டு சாதாரண தொண்டரைப் போல் நின்றது, அமைச்சர்களும் ஜெயலலிதா முன் மகுடிப் பாம்பாகத்தான் ஆகிறார்கள் என்பதனைத் தெளிவாக்கியது. அந்த வழியில் திரு. ஆர். எம். வீரப்பனும் திருச்சி. சௌந்தரராஜனைப் போன்ற ஓர் அமைச்சர் தான். அவரும் ஜெயலலிதா முன் மகுடிப் பாம்பாகத்தான் ஆட முடியுமே தவிர அவருக்கு நிகராக எம். ஜி. ஆரின் வாரிசாக

வாரிசு யார்?

எக்காலத்திலும் ஆக முடியாது.

— திருச்சி, அ. சாகுல் அமீது.

எம். ஜி. ஆரின் வாரிசு வருகின்றார் என்றால் பெரிய பெரிய அதிகாரிகள் முதல் கடைசித் தொண்டன் வரை பயபக்தியோடு காத்திருந்து காரின் கதவைத் திறந்து விடுவது யாருக்காக? பல மைல்கள் கடந்து, பல மணி நேரங்கள் தவமிருந்து, பாதங்களைப் பாலாபிஷேகம் செய்ய மக்கள் காத்திருந்தது யாருக்காக? வரலாறு காணாத வகையில் கவர்னரின் பதவிப் பிரமாண வைபவமே இல்லாமல் ஒரு மாநிலத்தின் முதல்வராக இயங்கி வருவது யார்? கொள்கைத் தங்கம், சிந்தனைச் செல்வி ஜெயலலிதாவேதான் எம். ஜி. ஆரின் நேற்றைய, இன்றைய, நாளைய வாரிசு.

— மேட்டுப் பாளையம், எஸ். ராமஸ்வாமி.

அண்ணா எப்படி எம். ஜி. ஆரைப் பயன் படுத்திக் கொண்டாரோ, அவ்வழியில் அதற்கும் ஒருபடி மேல் சென்று எம். ஜி. ஆர். ஜெயலலிதாவை ஆளாக்கிப் பொறுப்புக்கள் தந்து தயார் நிலையில் வைத்திருக்கிறார். இத்தனைக்கும், ஆத்திரத்தில் ஜெயலலிதா பேசிய பேச்சுக்களுக்கும், வரம்பு மீறி தில்லியிடம் தொடர்பு கொண்டதற்கும், 'பந்தா'வில் அமர்க்களப்படுத்தியதற்கும், வேற்று நபராயிருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும்? இதுவே எம். ஜி. ஆர்., ஜெயலலிதாவுக்குத் தனி ஸ்தானம் தந்திருக்கிறார் என்பதை ஊர்ஜிதப்படுத்துகிறதே! 'ஜெயலலிதாவை யாரும் விமர்சிக்கக் கூடாது' என்று மற்றவர்கட்கும் தடை விதித்ததை யோசித்துப் பார்க்க வேண்டும்.

— ஜெயந்தி, சென்னை.

கட்சிக்காரர்கள் இரு பதவிகளை வகிக்கக் கூடாது என்று உத்தரவு போட்ட எம். ஜி. ஆர்., ஜெயலலிதாவுக்கு மட்டும் கொ.ப.செ. பதவி, சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழு உறுப்பினர் பதவி, எம். பி — நாடாளுமன்றக் கட்சித் துணைத் தலைவர் பதவி என்று வாரி வழங்கியதை எண்ணிப் பாருங்கள். பொதுக் கூட்டங்களுக்கு ஜெயலலிதா பேசப் போகும் போது தனக்கு அளிக்கப்படுவது போல வரவேற்பும் போலீஸ் பாதுகாப்பும் அளிக்கப்பட வேண்டும் என்று உத்தரவு போட்டதையும் யோசியுங்கள். எம். ஜி. ஆர். ஜெயலலிதாவுக்கு அளித்துவரும் முக்கியத்துவத்தை நன்கு உணர முடியும். அ. தி. மு. க. தொண்டர்கள் தங்கள் தலைவரைத் திரைப்படங்களில் இணங்கண்டு கொண்டவர்கள். அவரோடு இணைந்து அதிக படங்களில் (28 படங்கள்) நடித்த கதாநாயகியாதலால் எம். ஜி. ஆர். ரசிகர்கள் ஜெயலலிதாவையே அடுத்த தலைவராக ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருக்கிறார்கள்.

— புதுவை, ஆர். கலைவாணன்.

அரசியல் போஸ்டர்களைக் கவனியுங்கள். எம். ஜி. ஆர். எப்படி 'போஸ்' கொடுக்கிறாரோ, அதே பாணியில் ஜெயலலிதாவின் 'போஸ்'ும் போஸ்டர்களில் காணப்படும். கூட்டங்களில் சிறுவர்களைத் தூக்கிக் கொஞ்சுவது, தாய்க்குலங்களைக் கவர்வது போன்றவை கூட எம். ஜி. ஆரின் பாணியில் அமைந்திருக்கும். அவர் 'புரட்சித் தலைவர்' என்று அழைக்கப்பட்டால் அவர் வாரிசாம் இவர் 'புரட்சித் தலைவி' என அழைக்கப்படுவார். இதுபோல் எம். ஜி. ஆருக்கும் வீரப்பனுக்கும் ஏதாவது ஒற்றுமைகள் இருக்கிறதா என்று பார்த்தால், ஊஹூம்.

எம். ஜி. ஆரோ, வீரப்பனோ தங்கள் பேச்சில் அண்ணாவைப் பற்றிக் கூறி நாங்கள் அவர் வழியில் ஆட்சி செய்கிறோம் என்பார்கள். இவர்கள் அண்ணாவின் வாரிசு என்று தங்களைக் கூறிக் கொள்பவர்கள். ஆனால் ஜெயலலிதா அண்ணாவைப் பற்றி அதிகமாகப் பேசாமல், பேச்சுக்குப் பேச்சு புரட்சித் தலைவர் துதிபாடி, அவரது வழியில் நாம் தொடர்ந்து செல்வோம் என்று கூறுவதிலிருந்தே இதோ எம். ஜி. ஆரின் வாரிசு உருவாகி விட்டது என்பது நமக்கு நன்றாகவே புரியும்.

— மதுரை, தே. காந்தி.

வீரப்பனுக்கு ஆதரவாக முதல் பரிசு பெறும் கட்டுரை:

1. கட்சி ஆரம்பிக்கும் போது முதற் கொண்டு, எவ்வித லாப நஷ்டமும் பார்க்காமல் தலைவரின் உடன் இருந்தவர். அன்றிலிருந்து இன்றுவரை (இனியும்) எம். ஜி. ஆரின் நிழலாக ஏற்றத்திலும் தாழ்விலும் இருப்பவர். ஆனால் ஜெயலலிதாவோ, படவுலகம் ஒதுக்கித் தள்ளியதால், வேறு



வழியில்லாமல், பழைய நட்பை எண்ணி, ஆதாயத்தை எதிர்நோக்கிக் கட்சியில் சேர்ந்தவர்.

2. ஒழுங்காகப் போய்க் கொண்டிருந்த அ. தி. மு. க. என்னும் படகில் கோஷ்டி பூசல், குழப்பம் என்னும் ஓட்டை எப்போது ஏற்பட்டது? ஜெயலலிதா சேர்ந்தவுடன் தானே? அப்படிப்பட்டவரா எம். ஜி. ஆர். வாரிசு?

3. எம். ஜி. ஆர். உடல்நலமின்றி, மிகக் கவலைக்கிடமாக இருந்த போது, யார், யார் எப்படி அறிக்கை விட்டார்கள் என்பதை நாட்டினர் நன்றாகவே அறிவர். ஆர். எம். வீ. எதிர்க்கட்சியினரின் பிரசாரத்தை முறியடிக்கும் வகையில் அமெரிக்காவில் தலைவர் ஆஸ்பத்திரியில் இருக்கும்போது எடுத்த, உணர்ச்சி வசப்பட வைக்கும் புகைப்படங்களை யுக்தியோடு எடுத்து, நாடெங்கும் பிரசாரத்திற்குப் பயன்படுத்தப் போய், தேர்தல் முடிவு அ. தி. மு. க. வுக்கு அமோக வெற்றியாக அமைந்தது. அச்சமயத்தில் பதவி ஆசையால் ஜெயலலிதா விட்ட அறிக்கைகள், வாரிசாகத் தகுதி வாய்ந்த ஒருவர் விடக் கூடிய அறிக்கைகளா? இல்லவே இல்லை. உன் நண்பனை கஷ்டகாலத்தில் அறியலாம் என்பர். ஆம், அச்சமயத்தில் ஜெயலலிதாவின் சாயம் வெளுத்து விட்டது.

4. ஒருவரின் வாரிசு உரிமை, ஆரம்ப காலம் தொட்டு, தோளோடு தோளாக நின்று, ஏற்ற இறக்கங்களிலும் உடன் உழைத்தவர்களையே சேரும். ஆர். எம். வீ. இதற்குப் பொருத்தமானவர். ஜெயலலிதாவோ இடையில் வந்ததுமில்லாமல், கோஷ்டி சேர்த்து, மாற்றுக் கட்சியில் கூட அவ்வப்போது சேரப் போவதாகத் திரைமறைவில் மிரட்டியவர்.

5. இன்று நாடு உள்ள நிலையில், வல்லவர் ஒருவர், அனுபவம் பெற்ற ஒருவர்தான் ஆட்சியில் இருக்க வேண்டும். அதிகாரிகளைக் கீழ்த்தரமாக நடத்தி, ஆணவத்தையும், ஆடம்பரத்தையும் ஒருங்கே காட்டுகிற ஜெயலலிதாவிற்கு வாரிசு உரிமையைக் கொடுத்தால் நாடு என்னவாகும்?

6. ஜெயலலிதா மக்கள் ஆதரவு பெற்றவர் என்கின்றனர். இது முற்றிலும் தவறு. எம். ஜி. ஆரின் ஆதரவு பெற்றவரே மக்கள் ஆதரவு பெற முடியும். எம். ஜி. ஆருக்காகத் தன்னலம் கருதாது உழைக்கும் ஆர். எம். வீக்கே எம். ஜி. ஆரின் ஆதரவு.

— காரைக்குறிச்சி, இரா. செண்பகராஜ்.

மேலவை ஒழிப்பினால் தம் அமைச்சர் பதவிக்கு ஆட்டம் காணும் நேரத்தில் கூட வாய் திறந்து தலைவருக்கு எதிராக, ஏன் வேண்டுகோளாகக் கூட ஒரு வார்த்தை பேசாதவர் திரு. வீரப்பன். அண்மையில் மதுரையில் நடைபெற்ற எம். ஜி. ஆர். இரசிகர் மன்ற மாநாட்டில், திட்டமிட்டு ஒதுக்கப்பட்ட நேரத்திலும் கூடப் பொறுமையினைக் கடைப்பிடித்துத் தரையில் அமர்ந்தேனும் மாநாட்டினைச் சிறப்பிக்க வேண்டும் என்ற எண்ணம் படைத்த திரு. இராம வீரப்பன் அவர்களைத்தான் எம். ஜி. ஆர். வாரிசாக நியமனம் செய்வாரே தவிர, செல்வி ஜெயலலிதாவையல்ல.

— நாகர்கோவில், ப. குமாரசுவாமி.

திரு. ஆர். எம். வீ. அவர்களின் பேச்சுத் திறனுக்கு ஒரு சின்ன உதாரணம். 1980 பொதுத் தேர்தல் வானொலிப் பிரசாரத்தில், 'அ. தி. மு. க. அரசைவிட, குடிநீருக்காகத் தி. மு. க. அரசு அதிகம் செலவழித்தது' என்ற தி. மு. க. வின் பேச்சுக்கு, மறுநாள் பதிலளித்துப் பேசுகையில் ஆர். எம். வீ. அவர்கள், 'அதில் வீராணம் திட்டத்தையும் சேர்த்துத்தானே!' என்று போட்டாரே ஒரு போடு! அதை யாரால் மறக்க இயலும்? அ. தி. மு. க. திராவிடப் பாரம்பரியத்தில் வந்த கட்சி. அதற்குத் திராவிடப் பாரம்பரியத்தில் வந்த ஒருவர்தான் உண்மையான வாரிசாக இருக்க முடியுமே தவிர, ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்த செல்வி ஜெயலலிதா அல்ல!

— திருத்துறைப் பூண்டி.
பொன். செந்தமிழ்ச் செல்வி.

தளபதி இல்லாத அணிவகுப்பாக, சென்ற பொதுத் தேர்தலில் அ. தி. மு. க. தேர்தல் களத்தில் குதித்த தருணத்தில் கட்சியைக் கட்டுக் கோப்புடன் நடத்திச் சென்று வெற்றிக் கனியைப் பறித்து எம். ஜி. ஆரது பாதங்களில் சமர்ப்பித்திட்ட 'திரு. ஆர். எம். வீ.யை எம். ஜி. ஆரின் வாரிசு' என அழைப்பதில் பெருமை கொள்ளல் வேண்டும்.

— போடிநாயக்கனூர், எஸ். சையது முகமது.

தமிழ் மக்களின் அன்பைப் பெற்றவர். கலை உலகத்தில் பல்லாண்டுகள் எம். ஜி. ஆருடன் பணிபுரிந்தவர். தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களும் அவருக்கு அத்துப்படி. தொண்டர்களுடன் தொண்டராய்ப் பணிபுரிவார்; வழிகாட்டுவார்; தலைவராக விளங்குவார்!

— திருக்காட்டுப்பள்ளி, சி. அரசப்பனார்.

நாட்டுக் கோட்டை நகரத்தாருக்கே உரிய அமரிக்கை, நா வன்மை, நாற்பது ஆண்டு கால அரசியல் அனுபவம். எம். ஜி. ஆர். இவரது இலாகாவைப் பறிமுதல் செய்தார். ஆனால் அப்போதும் கூட பதற்றப்படவில்லை வீரப்பன். அறிக்கைகள் விடவில்லை. என் தலைவன் இட்ட பணியைச் செய்வதே கடமை என்று உண்மையான தொண்டனுக்குரிய லட்சணத்தோடு அமைதி காத்தாரே! இவரைத் தவிர யார் சரியான வாரிசு?

— திருப்பூர், லட்சுமி நடராஜன்.

சந்திப்பு: ஸ்மிதா பாடீல்



* "வெகுநாள் ஆசை"

பளிச்சென்று வெள்ளையில் காஞ்சிபுரம் பட்டுச் சேலை, கழுத்திலும் காதிலும் புடைவைக்குப் பொருத்தமாக முத்து நகைகள்; அதிகம் ஒப்பனை செய்யப்படாத முகம். சற்றே மேடிட்ட வயிறு.... இந்தத் தோற்றத்தில்தான் ஆறுமாத கர்ப்பிணியாகத் திருவனந்தபுரத்தில் சூரியா ஸ்டேஜ் ஃபிலிம் சொஸைடி நடத்திய திரைப்பட விழாவுக்கு வந்தார் ஸ்மிதா பாடீல்.

தன் 'இமேஜ்' பற்றித் துளிக்கூடக் கவலைப்படாமல், கர்ப்பமாய் இருக்கும்போதுகூடப் பொது இடங்களுக்கு வந்து, பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட இவரைப் பார்க்கப் பார்க்க அதிசயமாய் இருந்தது. இந்த ஆண்டு மத்தியில் திருவனந்தபுரம் வருவதாகச் 'சூரியா'வின் செயலாளரிடம் 1985லேயே வாக்குக் கொடுத்துவிட்டாராம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக,. வந்து விழாவைத் துவக்கி வைத்ததோடு, சற்றும் கூச்சமோ, தயக்கமோ இல்லாமல் மேடை ஏறியும் பேசினார்.

விழா முடிய ஸ்மிதாவையும் 'சிதம்பரம்' திரைப்படத்தின் இதர கலைஞர்கள் குழுவையும் சுற்றித்தான் ஏகக் கூட்டம். ஸ்மிதாவின் கணவர் ராஜ் பாபர் பின்னணிக்குத் தள்ளப்பட்டிருந்தார். அதை அவர் சிறிதும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

'சிதம்பரம்' படத்தைத் திரையிட்டபோது ஸ்மிதாவும் ராஜ் பாபரும் ஏனைய பார்வையாளர்களுடன் திரைப்படத்தைப் பார்த்தார்கள். அதன் முடிவில் 'சிவகாமி' — ஸ்மிதாவுடன் பார்வையாளர்கள் கலந்துரையாடல் நிகழ்த்தினார்கள்.

"அரவிந்தன் மிகவும் கூச்ச சுபாவம் உள்ளவர்" என்று ஆரம்பித்தார் ஸ்மிதா. "அவரது படங்களை மிகவும் விரும்பிப் பார்த்திருக்கிறேன். அவர் இயக்கிய படம் ஒன்றில் நடிக்க வேண்டும் என்று எனக்கு வெகுநாட்களாக ஆசை. நானே ஒரு

* சிதம்பரம் திரைப்படக் கலைஞர்கள் குழு



* "பம்பாயில் சகஜமாகப் பழக முடியாது"



முறை அவரிடம் போய் அவர் இயக்கும் படத்தில் நடிக்க விரும்புவதாகச் சொன்னேன். எனது முதல் மலையாளப் படமே அரவிந்தனின் படமாக அமைந்ததில் எனக்கு மிகவும் சந்தோஷம். அந்தப் படத்திற்குத் தேசிய விருது கிடைத்திருப்பது குறித்து அதைவிட சந்தோஷம் என்றார்.

"இந்த விழாவை என் வீட்டு வைபவமாக நினைத்துப் பங்கேற்க முடிந்தது. இங்கே எல்லோரும் எவ்வளவு சகஜமாகப் பழகுகிறார்கள்!" என்று ஆச்சரியப்பட்ட ஸ்மிதா, பம்பாய்ப் பட உலகைப் பற்றி அங்கலாய்த்துக் கொண்டார்:

"அங்கெல்லாம் (பம்பாயில்) இப்படி எளிமையாகப் பழகி விட முடியாது. இப்படி இப்படி நடிக்க வேண்டும் என்று விதி வகுப்பது போல் இன்னின்னருடன் இப்படி இப்படிப் பழக வேண்டும், பேச வேண்டும் என்றும் எழுதப்படாத சட்டங்கள் இருக்கின்றன. இங்கே இருக்கிற மாதிரி 'ரிலாக்ஸ்டா'க இருந்து விட முடியாது.

விருந்தின்போது மோர்க்குழம்பை ஒரு பிடி பிடித்தார் ஸ்மிதா. "இட்லியும் சாம்பாரும் ரொம்பப் பிடிக்கும். நான் ஒரு வெஜிடேரியன்" என்றார்.

'சிதம்பரம்' படத்தில் ஸ்மிதாவுடன் நடித்த கோபி பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு இடது கையும் காலும் விளங்காமல் படுத்த படுக்கையாய் இருந்தார். ஸ்மிதா திருவனந்தபுரத்திற்கு வந்ததுமே ராஜ் பாபருடன் கோபியைத்தான் பார்க்கப் போனார். பிறகு பத்மநாபசுவாமி கோயிலுக்குப் போய் தரிசனம் செய்தார். 'குருவாயூரப்பன் படம் வேண்டும்' என்று கேட்டு வாங்கிக் கொண்டார்.

"இயற்கை எழிலும் வளமும் நிறைந்த இந்தக் கேரளத்தையும் இந்தப் பகுதி மக்களின் அன்பான உபசரிப்பையும் பிரியவே மனமில்லை. அடுத்தமுறை ஒரு வாரமாவது தங்குகிற மாதிரி திட்டமிட்டுக்கொண்டுதான் வருவோம்" என்றபடி கணவருடன் விடைபெற்றார் ஸ்மிதா.

— ராஜி கிருஷ்ணமூர்த்தி

அடுத்த இதழ்

தென்னாற்காடு மாவட்டத்தில் கல்கி—I




* அழகிய பிச்சாவரத்தை அலங்கோலமாக்காதீர்கள்!

* நிலக்கரிச் சுரங்கங்கள்: பிரச்னைகளுக்கும் சுரங்கங்கள்



* மலைவாசி மக்களுடன் ஒருநாள்

மாதம் ஒரு மாவட்டம்



இந்த மாதம் கோயமுத்தூர் மாவட்டம்

கல்கி ஏற்கும் சமுதாயப் பணி

'**மா**தம் ஒரு மாவட்டம்' என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து, அந்தந்த மாவட்டத்திலுள்ள பொதுப் பிரச்னைகளையும் தனிப்பட்டவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் நேரில் சென்று விசாரித்துக் கடைசியில் அந்தந்த மாவட்டக் கலெக்டர்களிடம் விவாதித்து, அவற்றுக்கான பதில்களைப் பெற்றுப் பிரசுரித்துக் கொண்டிருக்கும் கல்கியின் சமுதாயப் பணி பற்றி உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரியும்.

அந்த வரிசையில் ஒன்பதாவது மாவட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதுதான் கோயமுத்தூர் மாவட்டம்!

தமிழ்நாட்டின் 'மான்செஸ்டர்' என்று அழைக்கப்பட்டாலும் — பருத்தி என்றாலே அனைவருக்கும் கோயமுத்தூர் மாவட்டம்தான் நினைவுக்கு வரும் என்றாலும், கோயமுத்தூரில் பிரச்னைகளே இல்லை என்று அர்த்தமாகி விடுமா என்ன? மில் தொழிலாளர்களின் போராட்டம்தான் எத்தனை காலமாய் நீடித்தது!

எனவே, கோயமுத்தூர் நகரத்தில் மட்டுமல்ல; கோயமுத்தூர் மாவட்டம் முழுவதிலுமுள்ள பிரச்னைகள் அல்லது உங்கள் ஊர்ப் பிரச்னைகள் இல்லையெனில் தனி மனிதர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் ஆகியவற்றோடு, அரசியல்வாதிகளுடைய — அமைச்சர்களுடைய — அதிகாரிகளுடைய மெத்தனப் போக்குகளையும் சமூக விரோதிகளுடைய அட்டூழியங்களையும் சுருக்கமாக எழுதி, உங்கள் முழு முகவரியோடு கல்கி அலுவலகத்திற்கு அனுப்புங்கள். இவற்றோடு உங்கள் மாவட்ட வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும் உங்கள் மாவட்டத்தில் நிகழ்ந்துள்ள சாதனைகளையும் சேர்த்தே எழுதலாம்!

கல்கி அலுவலகத்திற்கு வரும் உங்கள் ஒவ்வொருவருடைய கடிதமும் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு, அவற்றில் முக்கியமானவற்றைத் தேர்ந்தெடுத்து, அக்டோபர் மாதம் இரண்டாவது வாரத்தில் நமது கல்கி பிரதிநிதிகள் கோயமுத்தூர் மாவட்டம் முழுவதிலும் சுற்றுப்பயணம் செய்வார்கள்; உங்களைச் சந்தித்துப் பேசுவார்கள். அவர்கள் வரும் தேதி பற்றிய முழு விவரங்களும் தனித்தனிக் கடிதங்கள் மூலம் பின்னர் தெரிவிக்கப்படும்.

அதன் பிறகு, கல்கி பிரதிநிதிகள் கோயமுத்தூர் மாவட்ட கலெக்டரைச் சந்தித்துத் தாங்கள் சேகரித்த பிரச்னைக்குரிய விஷயங்களைப் பற்றி விவாதித்துப் பதில்களைப் பெறுவார்கள். அவையெல்லாம் நவம்பர் மாதக் கல்கி இதழ்களில் செய்தியாகவும், பேட்டிக் கட்டுரைகளாகவும், புகைப்படங்களாகவும் பிரசுரமாகும்.

எல்லாவற்றையும் பிரசுரித்துவிட முடியாது என்றாலும், நியாயமான பிரச்னைகள் அத்தனையும் கலெக்டரிடம் எடுத்துச் சொல்லப்படும். அப்படிச் சொல்வதன் மூலம் அரசின் கவனத்தையும் அதிகாரிகளின் கவனத்தையும் திருப்புவதோடு, மக்களிடையிலும் இன்றைய யதார்த்த நிலையை உணர்த்தி ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியுமல்லவா! எனவே உடனடியாக எழுதுங்கள்.

கோயமுத்தூர் மாவட்டம் பற்றிய பிரச்னைகளும், குறைகளும், அநீதிகளும் தவிர, சாதனைகளும் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி: 20.9.86.

உறையின் மேல் 'மாதம் ஒரு மாவட்டம் — கோயமுத்தூர்' என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.

— ஆசிரியர்



கல்கி

1986 செப்டம்பர் 7
மலர் 45 இதழ் 6
அக்ஷய ஆவணி 22



கித்வாய் பவனில் துப்பாக்கியுடன்!

"ஹல்லோ டிரங்க் புக்கிங்கா?"

"இல்லீங்க டைரக்டரி என்கொயரி."

"அட ஆண்டவனே!"

"ஆண்டவன் உதவ மாட்டாருங்க! அஸிஸ்டென்ஸுக்கு 199 போடுங்க."

"அதுவும் கிடைக்கலையே! அஸிஸ்டன்ஸ் கிடைக்கக் கொஞ்சம் அஸிஸ்ட் பண்ணுங்களேன்!"

"ஸூபர்வைஸர் நெம்பர் தரேங்க. அங்க டிரை பண்ணுங்க." ....

"ஹல்லோ! ஸூபர்வைஸரா?"

"ஆமா, என்ன வேணும்?"

"டிரங்க் புக்கிங் பண்ணணுமே."

"180 போடுங்க."

"அது கிடைக்கலையே!"

"அடக் கடவுளே!"

"அவர் உதவமாட்டாராம் ஸார்! நீங்களாவது உதவக் கூடாதா?"

"சரி, சரி; யாருக்குக் கால் போடணும்? சொல்லுங்க."

"பி.ஸி. ஸேத்தி, புது தில்லி."

"என்னது! என்னது!"


"என்னது இல்லீங்க; அவர் பேரு ஸேத்தி! பி.ஸி. ஸேத்தி. இ. காங்கிரஸ் எம்.பி. கொஞ்சம் டிரை பண்ணுங்களேன்."

"எஸ்.டி.டி. போடறதுதானே?"

"அதை டிஸ்கனெக்ட் பண்ணிட்டேங்க. பேசாத எஸ்.டி.டி.க்கெல்லாம் பில் வருது;







அத்னுல்தான்!''

''சரி, சரி, உங்க நெம்பர் சொல்லுங்க. அர்ஜண்டா? ஆர்டினரியா?''

''ஆர்டினரின்னு ஒரு வாரம் ஆயிடுங்க. அர்ஜண்ட்டே போடுங்க மூணு நாள்ல கிடைக்கும்.''

''நீர் என்ன, லாண்டிரி வைச்சிருக்கிரா?''

''லாண்டரில ஆர்டினரியே 24 மணி நேரங்க; அர்ஜண்ட் இப்பல்லாம் 8 மணி நேரம்தான்.''

''சவடால் பேச்சிலே ஒண்ணும் குறைச்சல் இல்லே.... பேசுங்க.... ஸேத்தி ஆன் தி லைன்!''

''ஹலோ ஸேத்தி ஹியர்!''

''கங்கிராட்ஸ் மிஸ்டர் ஸேத்தி! போன் வைச்சிருக்கிற எங்களை மாதிரி சராசரி மனுஷங்க செய்ய முடியாததை— ஆனா செய்ய ஆசைப்படறதை நீங்க செய்து காட்டிட்டீங்க.''

''துப்பாக்கியோட கித்வாய் பவன் போனேனே அதைச் சொல்றீங்களா? என்னங்க செய்யறது. மிரட்டினாத்தான் எந்தக் காரியமும் நடக்கும்கிற நிலை இந்தியாவிலே உருவாயிடுச்சு.''

''ஆமாங்க, ஒண்ணு மிரட்டணும்; இல்லே பணத்தைக் கழற்றணும்....! அதுசரி, அடிக்கடி இப்படி ஸ்டண்ட் அடிக்கிறதே உங்களுக்கு வழக்கமாப் போச்சுன்னு சில பேர் சொல்றாங்களே .... உங்களுக்கு மறை கழன்று போச்சுன்னு கூடப் பேசிக்கிறாங்க?''

''உண்மைதான்! ஸ்டண்ட் அடிச்சாத்தான் காரியம் நடக்குதுங்கிறதாலே அடிக்கடி ஸ்டண்ட் அடிக்கப் போக, மற்ற நேரத்துலே, 'மறை கழன்று போனதால்தான் இப்ப நாம் ஸ்டண்ட் அடிக்காம நார்மலா இருக்கோமோ'ன்னு நமக்கே சந்தேகம் வந்துடறது!''

''நீங்க குடிச்சுட்டு வந்ததா வேறே புகார்!''

''உரக்கச் சொல்லாதீங்க! காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவங்க குடிக்கக் கூடாதுங்கிற பொது விதியை எத்தனை அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் கடைப் பிடிக்கிறாங்க? அவங்களையெல்லாம் தர்ம சங்கடத்தில் ஆழ்த்தாதீங்க!''

''உங்க கித்வாய் பவன் விஜயத்தை ஆட்சேபித்து வேலை நிறுத்தம் நடக்கப் போகப் பல மணி நேரம் பி.எம். வீட்டு ஹாட் லைனே வேலை செய்யலையாமே?''

''ஸ்ட்ரைக் இல்லாத நாட்களிலே சரியா வேலை செய்ததாமா? ஃபோனுங்க சரியா வேலை செய்தா நான் கித்வாய் பவனுக்கே போயிருக்கமாட்டேனே!''

''அதுமட்டுமில்லீங்க! பொதுத் துறை நிறுவனங்களிலே பாதுகாப்பும் ரொம்பக் குறைவா இருக்குன்னு நிரூபிச்சிருக்கீங்க. உங்களைப் போலவே துப்பாக்கியோட, உங்களுக்குப் பதிலா ஒரு பயங்கரவாதி கித்வாய்பவனிலே புகுந்திருந்தா?''

''என்ன ஆயிடும்? இந்நேரம் மந்திரி சபை மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கும். ஒவ்வொரு தடவையும் பிரதமர் அதைத்தானே செய்துட்டிருக்கார்?''

''ஹலோ! டிஸ்கனெக்ட் ப்ளீஸ்!''

''யாருய்யா குறுக்கே பேசறது? எதுக்கு நான் டிஸ்கனெக்ட் பண்ணணும்?''

''பி.எம். அர்ஜெண்ட்டா ஃபோன் பண்ணணுமாம், ஸார்! ரிஸீவரை எடுத்தா உங்க கிராஸ் டாக்தான் கேட்குதாம். அதனாலதான் கேட்டுக்கறேன் .... ப்ளீஸ்....''

''ஓ.கே. மிஸ்டர் ஸேத்தி! பிரதமருக்கு என்னாலான பெரிய்ய உதவி — ரிஸீவரை வைச்சுடறேன்! குட் பை!''

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

வட்டமேஜை

துணை சபாநாயகரும் குறைதானே சொல்கிறார்!

கல்கி 27.7.86 இதழில் நான் தஞ்சையில் ஹோமியோபதி மருந்து தயாரிக்கும் கம்பெனி நடத்துவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நான் நிர்வாக இயக்குநராக இருந்து நடத்தும் மருந்து நிறுவனம் பல அலோபதி மருந்துகளையும், சில சித்த மருந்துகளையும் உற்பத்தி செய்து வருகிறது.

''என்னை காங்கிரஸ் கட்சியில் சேர்த்துக் கொள்ள மாட்டேன்'' என்று மூப்பனார் கூறியதாகவும், தற்பொழுது அமைச்சரவையில் உள்ள ஒருவரையும், அப்பொழுது மாநில ஆளுனராக இருந்த ஒருவரையும் துணை கொண்டு நான் காங்கிரசில் நுழைந்ததாகக் குறிப்பிடுவது உண்மையானதல்ல.

தஞ்சை, ஜி. சுவாமிநாதன்.

* நீண்ட நாள் நிலைத்திருக்கக் கூடிய வகையில் 'உயிராசை'யை இலக்கிய நயத்துடனும், சமூகப் பார்வையுடனும் எழுதிய சுஜாதாவின் எழுத்தாற்றலுக்கு 'மருது'வின் ஓவியங்கள் பொருத்தமாக இருந்தன. இந்த மினி தொடர் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் நல்லதொரு குறுநாவலைப் படித்து முடித்த திருப்தியை அனைவர் மனத்திலும் ஏற்படுத்தியிருக்கிறது.

பெங்களூர்–5, அ. குமார்.

* 'படிப்பார்வம், தமிழகத்தில் பரிதாபம்' என்ற தலைப்பில் துணைவேந்தர் டாக்டர் கே. வெங்கட சுப்பிரமணியம் அவர்களின் பேச்சையும் கல்வி அமைச்சர் பேச்சையும் மிக அருமையாக வேறுபடுத்திக் காட்டியுள்ளீர்கள். (24.8.86) தமிழ்நாட்டில் உள்ள நாற்பதாயிரம் பள்ளிகளில் மிகப் பெரும்பாலானவற்றில் நூலகங்கள் இருக்கின்றன என்று எழுதியுள்ளீர்கள்! அந்த நூலகங்களில் மிகப் பெரும்பாலானவை மாணவர்கட்குப் பாடம்புகட்டும் ஆசிரியர்களுக்காகமட்டுமே! நம் தமிழகத்தில் மாணவ, மாணவிகள் கல்லூரி வளாகத்தில் நுழைந்தால்தான் லைப்ரரி என்ற அதிசயத்தைப் பார்க்க முடியும்!

இலால்குடி, ரா. சுந்தர்.

* அத்தனை காப்பிப் பிரியர்களையும் ஒரு கலக்கு கலக்கிவிட்டீர்களய்யா!

மதுரை, கே. ஆனந்தகுமார்.

* இக்கடிதம் கண்டவுடன், 'பால்வினை நோய்களைப் பற்றிக் கேட்க மட்டுமே டாக்டரிடம் பேட்டி கண்டோம். சிங்காரப் பேட்டையைப் பற்றியும், போலீஸைப் பற்றியும் டாக்டர் எந்த விளக்கமும் தரவில்லை (20.7.86 கல்கி)' என்று கல்கியில் போட்டு என்னையும் என் தொழிலையும் காப்பாற்றுமாறு வேண்டுகிறேன்.

பெரியதன்னப்பாடி, டாக்டர் எஸ். கருணாநிதி.

(டாக்டர் கூறுவது முற்றிலும் உண்மை. அவருக்கு எந்தத் தொந்தரவும் தரவேண்டாம் என்று சம்பந்தப்பட்ட அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம். — ஆசிரியர்)

* தொகுதிப் பணிகளை ஒழுங்காகக் கவனிக்கும் எம்.எல்.ஏ.க்கள், அதிகாரிகள் இவர்களைப் பற்றிப் பத்திரிகைகளில் எவரும் எழுதுவதில்லை என்று குறைபட்டுக் கொள்ளும் நமது துணை சபாநாயகரே மாநிலங்களின் வளர்ச்சிக்கு மத்திய அரசின் மெத்தனப் போக்கே காரணம் என்று குறைகூற வேண்டியதாகவே உள்ளது?!

நெல்லிக்குப்பம், ஜெ. முகம்மது பாரூக்.

* யூகத்தின் அடிப்படையில் வியூகமிட முனைன்று போகர் அய்யா அவர்களின் உண்மை நிலை உணராமற் போனது வருந்தற்குரியது. (24.8.86 கல்கி) மாடத்தைக் கிண்டல் செய்ய புகுந்தவர் அங்கு சென்று பலனடைந்தோரைக் கண்டும் எழுதியிருக்கலாம். ஒரு பக்கம் காட்சியே உண்மையாகிவிடாது.

குடிமங்கலம், ப. அரங்கநாதன்.

* நல்லதொரு நகைச்சுவை கதையைப் படித்த திருப்தி ஏற்பட்டது. 'போகர் இருக்க பயமேன்' பேட்டியைப் படித்தவுடன். உம்ம நிருபருக்கு ஆனாலும் குறும்பு அதிகம் சார்!


சாலக்கிராமம், எஸ். சம்பத்குமார்.

* 17.8.86 இதழில் ''கொடைக்கானல் ஒரு ரவுண்டப்'' என்ற கட்டுரையில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தினைப் பற்றியும் எழுதியுள்ளீர்கள். இப்பல்கலைக் கழகம் மற்ற பல்கலைக் கழகத்திலிருந்து மிகவும் மாறுபட்டது. எட்டு பேர்தான் ஆராய்ச்சி செய்வதாகக் கூறியுள்ளது சரியானதன்று. கொடைக்கானலில் தங்கி ஆராய்ச்சி செய்பவர்கள் எட்டு பேர். மற்றவர் நாடெங்கிலும் சுமார் 150 தலைப்புகளில் ஆராய்ச்சி செய்கின்றனர். இந்த எட்டு பேரும் ஆராய்ச்சி மாணவிகள். இவர்களுக்கு எந்தவித ஊதியமும் தருவதற்கில்லை. தருவதாகத் திட்டமுமில்லை. நான் அதிக நாட்கள் கொடைக்கானலில் தங்கி இராதது குறித்து ஒரு விளக்கம்: ஆய்வுப் பணிகள் குறித்த குழுக் கூட்டங்கள் கொடைக்கானலில் நடந்தால் இதரப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் குழு வல்லுனர்கள் வருவதற்குச் சிரமப்படுகிறார்கள். இதனால் கூடுதல் செலவும் ஆகும். ஆகையால் நான் மட்டும் கொடைக்கானலைவிட்டு, இக்கூட்டங்களை நடத்த சென்னை, மதுரை போன்ற நகரங்களுக்கு அடிக்கடி செல்ல வேண்டியுள்ளது.

கொடைக்கானல், கோ. வசந்தி தேவி,
துணை வேந்தர், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்.

அமரர் கல்கி:

“சரித்திர நாவல்களில் சரித்திரம் படைத்தவர்”



அமரர் கல்கியின் பிறந்த நாள் செப்டம்பர் 9. அதையொட்டி அவரது எழுத்துக்கள் பற்றிய ஒரு கலந்துரையாடல். பங்கேற்பவர்கள்:

1. திருமதி விசாலாட்சி – தமிழ்த்துறை ஆசிரியை, காய்த்–ஏ–மில்லத் கல்லூரி
2. செல்வி ரமா, 3. செல்வி அஞ்சுகம் காய்த்–ஏ–மில்லத் கல்லூரி மாணவிகள்
4. திரு ஸ்ரீகாந்த், விவேகானந்தா கல்லூரி மாணவர்.

ரமா: கல்கியின் எழுத்துக்களில் என்னை மிகவும் கவர்ந்த அம்சம் இதுதான்: மிகச் சுவையான கட்டத்தில் கதை சொல்வதை நிறுத்திவிட்டு வர்ணனையில் இறங்கிவிடுவார் கதாசிரியர். ஒரு சாரசரி எழுத்தாளர் இந்த நுட்பத்தை வெற்றிகரமாகக் கையாண்டிருக்க முடியுமா என்பது ரொம்ப சந்தேகம். ஆனால், கல்கியால் இதை மிகத் திறம்படச் செய்ய முடிந்திருக்கிறது. கதையின் அடுத்த கட்டம் என்ன என்று ஒருபக்கம் மனசு அடித்துக் கொள்ளும்போதே இன்னொரு பக்கம் வர்ணனையில் மனம் லயித்துப் போய்விடுகிறது. வர்ணனைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டுக் கதையின் அடுத்த கட்டத்துக்குப் போவது என்பது இயலாத காரியம்!

விசாலாட்சி: கருத்தோட்டத்தில் தடை இருந்தாலும் சுவை எடுபடுகிறது என்கிறீர்களா?

ர: இல்லை! இல்லை! கற்பனைப் பஞ்சத்தால் ஏற்பட்ட இடைச் செருகல்கள் அல்ல இந்த வர்ணனைகள். அவை கதையின் போக்கோடு தொடர்பு கொண்டவை. அவற்றைப் படிக்காமல் தள்ளிவிட்டுக் கதையை மட்டும்

படித்தால் ஏதேனும் முக்கியமான விஷயம் தெரியாமலேகூடப் போய்விடும்!

வி: வரலாற்று நாவல்களைப் பொறுத்த வரை கல்கிதான் முன்னோடி. தம் இளம் வயதில் அவர் படித்த டூமாஸ், ஆர்க்஬ி, ஹியூகோ, டிகென்ஸ்,ஸ்காட் போன்ற அயல் நாட்டு எழுத்தாளர்களின் பாதிப்பு இவற்றில் நிறைய உண்டு. கல்கியின் வரலாற்று நாவல்கள் பழங்கதைகளாக மட்டும் இருந்து விடாமல் சமகாலக் கருத்துக்களின் பிரதிபலிப்பாகவும் இருந்தன. 'பார்த்திபன் கனவு' விடுதலை வேட்கையைப் பிரதிபலித்தது என்றால், 'சிவகாமியின் சபதம்' நமது புராதனக் கலைகளின் மேன்மையை இன்று நாம் உணர வேண்டியதன் அவசியத்தைப் பறைசாற்றியது.


திரு ஸ்ரீகாந்த்
செல்வி ரமா
செல்வி அஞ்சுகம்

ர: ஆமாம், பாரதியார் 'பாஞ்சாலியின் சபதம்' எழுதின மாதிரி கல்கியும் இந்திய சுதந்திரத்தை மனத்தில் கொண்டுதான் 'பார்த்திபன் கனவு' எழுதினாரோ என்று எனக்குத் தோன்றும்.

ஸ்ரீகாந்த்: அதில்சந்தேகமேயில்லை. ஆனால் அதே நேரத்தில் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். சமகாலக் கருத்துக்களுக்கு வடிகாலாக இருந்ததோடு தென்னிந்திய சரித்திரத்தையும் இந்த நாவல்கள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. எவ்வளவு ஆராய்ச்சியும் உழைப்பும் அவற்றின்பின் இருக்கின்றன! கல்வெட்டுச் சான்றுகளையும் கற்பனையையும் குழைத்துத் தந்து தமிழக சரித்திரத்தை எல்லோரும் புரிந்து கொள்ளும்படி செய்துள்ளார். சரித்திரம், கல்வெட்டு என்றால் மைல் கணக்கில் ஓடிய என்னையே நிற்க வைத்துவிட்டாரே! 'பொன்னியின் செல்வனை'ப் படித்த பிறகு சரித்திரம் என்றாலே சாக்லேட் சாப்பிடுகிற மாதிரி ஆகிவிட்டது எனக்கு!

அஞ்சுகம்: உங்களைப் போல் இன்னும் லட்சக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். ரமா சொன்ன மாதிரி கதை சொல்லும் நேர்த்தி அதற்கு ஒரு காரணம் என்றால், கல்கியினுடைய சளைக்காத நகைச்சுவை உணர்வு இன்னொரு காரணம். ரொம்ப 'சீரியஸான' கட்டங்களில்கூட அது தலை தூக்கி விடும். ஆனால், பாத்திரப் படைப்பிலும் சரி, கதைப் போக்கிலும் சரி, நகைச்சுவை இழையோடி இருக்கிறதேயொழியத் திணிக்கப்பட்டதாக இருக்காது. ஆழ்வார்க்கடியானும் குண்டோதரனும் அந்தந்த சரித்திரக் கதைகளுக்கு இன்றியமையாத பாத்திரங்கள்.

வி: விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இல்லாத ஒரு பாக்கியம் மனிதனுக்கு இருக்கிறது. அதுதான் நகைச்சுவை உணர்வு என்று ஓர் இடத்தில் குறிப்பிட்டிருக்கிறார் கல்கி.

ஸ்ரீ: அதிலும் ஒரு வேடிக்கை என்னவென்றால் ரொம்ப சீரியஸான கதாபாத்திரமான ஆதித்த கரிகாலன் மூலமாக இக்கருத்தைச் சொல்லியிருக்கிறார்!

அ: தன்னைத்தானே மட்டம் தட்டிக் கொள்வதென்பது ஒருவகையான நகைச்சுவை. இதைக் கையாளச் சிறந்த நகைச்சுவையாளர்கள்கூடத் தயங்குவார்கள். ஆனால் அது கல்கிக்கு எப்போதும் சாத்தியமாக இருந்தது. "கோகலே அரங்க நூலகத்தில் புத்தகம் படித்துக் கொண்டிருந்தபோது மேலே நடந்து கொண்டிருந்த கச்சேரியின் ஒலி காதில் விழ, 'யார் பிடில்? இவ்வளவு பயங்கரமாக இருக்கிறதே? மலைக்கோட்டை கோவிந்தசாமி பிடிலைப் போட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்?' என்று யோசித்தபடியே விசாரித்தால், சாட்சாத் மலைக்கோட்டை கோவிந்தசாமிதான் அன்று பிடில் வாசித்திருக்கிறார்!" என்று தனது அறியாமையைத் தானே நகைச்சுவையோடு சொல்கிற மாதிரி, தம் புத்தகங்களை யாரும் வாங்குவதில்லை என்பதையும் மிகுந்த நயத்தோடு சொல்லியிருக்கிறார். ரயில் பிரயாணத்தின்போது அறிமுகமான நபர், ஒரு புத்தகம் வாங்கிக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டுக் கடைசியில் இவரே அதை வாங்கி 'அன்பளிப்பு' என்று எழுதி, கையெழுத்துப் போட்டுத் தரும்படி செய்துவிடுகிறார்!

ஸ்ரீ: இது தன்னைத்தானே கிண்டல் செய்து கொள்வது மட்டுமல்ல, புத்தகங்களை மதிக்காத சமூகத்தின் மீது ஒரு சாடல். இந்தக்

கருத்து இன்றைக்கும் எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பாருங்கள்......? அன்றைக்குப் போலவே இன்றைக்கும் புத்தகங்கள் வாங்கத் தயங்குகிறோம். ஆனால், துணிமணிகளுக்கு, நூற்றுக் கணக்கில் கூசாமல் செலவழிக்கிறோம்.

அ: இதைப் போன்ற சாடல்கள் அவருடைய எழுத்துக்களில் நிறையவே உண்டு. கதையாகட்டும் கட்டுரையாகட்டும் நாவலாகட்டும், ஏதேனும் சீர்திருத்தக் கருத்து இல்லாமலே இராது. விதவை மறுமணத்தையும் பெண்ணுரிமையையும் ஆதரித்து அந்த நாளிலேயே எழுதியிருக்கிறார்.

வி: ஆமாம். தியாக பூமியை எடுத்துக் கொண்டால், சாவித்ரி அந்தக் காலத்துப் பிற்போக்குவாதிகளை அதிர்ச்சியில் ஆழ்த்திய ஒரு பாத்திரம்.

அ: கணையாழியின் கனவில் பெண்களிடம் அசடு வழியும் ஆண்களின் குணத்தை வேடிக்கையாகச் சொல்கிறார். கேதாரியின் தாயார் என்ற சிறுகதையில் விதவைகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைச் சாடுகிறார்.

வி: இதனால் அவர் பேரில் பிரசார எழுத்தாளர் என்ற முத்திரை குத்தப்பட்டது. அவர் எழுத்துக்கள் இலக்கியங்களே அல்ல என்று கூட ஒரு சாரார் வாதாடினர்.

ர: அதெப்படிச் சொல்ல முடியும்? மூன்று தலைமுறைகளுக்குப் பின்னரும் அவர் எழுத்துக்கள் நிலைத்து நிற்கின்றன; வரவேற்கப்படுகின்றன. காலத்தைக் கடந்து நிற்பது தானே இலக்கியம்....?

அ: மேலும், 'இக் கதையினால் அறியப்படுவது யாதெனில்' என்று ஒருபோதும் அவர் உபதேசம் செய்ததில்லை. ஒன்று, நம்மைச் சிரிக்க வைத்துச் சிந்திக்க வைக்கிறார்— கணையாழியின் கனவில் செய்துள்ளது போல்; அல்லது அதிர்ச்சி வைத்தியம் அளிக்கிறார் — 'கேதாரியின் தாயாரி'ல் செய்துள்ளது போல்.

வி: உண்மையிலேயே பிரசாரம் செய்யும் நோக்குடன் எழுதியபோதுகூட அவரையும் அறியாமல் அவருடைய நகைச்சுவை உணர்வு தலைதூக்கிவிடுகிறது. தமிழிசையையும் மது விலக்கையும் ஆதரித்து அவர் எழுதியவை இந்த ரகத்தைச் சேர்ந்தவை.

ர: அலை ஓசையில் சோஷலிஸ கருத்துகளைச் சொல்லும்போதுகூட மிக நயமாக சூர்யா மூலம் அவற்றை எடுத்து விடுகிறார். சமத்துவமும் சீர்திருத்தமும் அவர் நெஞ்சுக்கு நெருங்கியவையாக இருந்திருக்கின்றன. பல்லவ இளவரசனை ஒரு நாட்டியக்காரியையும் சோழ இளவரசனை ஓர் ஓடக்காரியையும் காதலிக்க வைத்துள்ளார். கள்வனின் காதலியில் தாமரை ஓடைப் பண்ணையார் சாகும்போது மனைவி கல்யாணியை மறுமணம் செய்து கொள்ளும்படி சொல்லிவிட்டுச் சாகிறார்.

அ: ஆனால் எல்லாமே நிறைவேறாத காதலாகப் போய்விடுகின்றனவே.

வி: அதனால்தான் அவற்றின் முக்கியத்துவம் அதிகரிக்கிறது. எப்பேர்ப்பட்ட சக்கரவர்த்தியாயிருந்தாலும் அவனும் சராசரி மானுட உணர்ச்சிகளையுடையவன்தான் என்பதைக் காட்டுவதோடு, நாட்டு நலனுக்காகச் சொந்த சந்தோஷங்களைத் தியாகம் செய்யத்தான் வேண்டும்; தேசமே பெரிது போன்ற கருத்துக்களும் இதனால் வெளிப்படுகின்றன.

ர: ஆமாம். அலை ஓசையில்கூட சூரியா, 'நாட்டுக்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னால் கல்யாணம் பற்றிய சிந்தனை எதற்கு' என்ற ரீதியில் பேசுகிறான். அலை ஓசையில் தேசியக் கருத்துக்கள் அதிகம் என்றாலும் அதுவும் ஒரு சரித்திர நாவலாகவே விளங்குவது ஓர் அதிசயம். சுதந்திரப் போராட்டத்தின் சரித்திரம் மட்டுமின்றி, சுதந்திரம் பெற்ற கையோடு நாடும் மக்களும் அடைந்த துன்பங்களையும் அற்புதமாகச் சித்திரிக்கிறது. பண்டைய சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்ட அவரது நாவல்களோ தமிழ்ப் பற்றையும், தமிழ்நாட்டுப் பற்றையும், தமிழ்க் கலை, பண்பாட்டுச் சிறப்பையும் அதிகமாக வெளிப்படுத்துகின்றன.

வி: மாமல்லபுரத்தை அழித்துவிடாதே என்று புலிகேசியிடம் நாகநந்தி கேட்டுக் கொள்ளும் கட்டத்திலும் இறுதியில் சிவகாமி 'தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே' என்று தன்னை இறைவனிடம் அர்ப்பணித்துக் கொள்ளும் கட்டத்திலும் அக்கலைகள் பற்றிப் பிரமாதமாக ஒன்றும் அறியாத நாம் கூட மெய்சிலிர்த்துப் போகிறோம்.

ஸ்ரீ: சிவகாமியின் சபதம் எழுதப்பட்ட பிறகுதான் தமிழ்நாட்டில் தெருவுக்குத் தெரு சலங்கை ஒலி கேட்க ஆரம்பித்தது என்பார்கள். இழிவாக நினைக்கப்பட்ட அக்கலைக்குச் சமூகத்தில் அங்கீகாரம் கிடைக்கச் சிவகாமியின் சபதம் நிறைய உதவியிருக்கிறது. கலைப் பற்றைப் போலவே தமிழ் மொழிப் பற்றும் சரித்திர நாவல்களில் வெளிப்படுகின்றன. தக்க இடங்களில் பாசுரங்களும் பாடல்களும் உபயோகிக்கப்பட்டுள்ளன. அப்பரும் நம்பியாண்டார் நம்பியும் சிறுத்தொண்டரும் மிகச் சிறப்பாய்ச் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

வி: அலை ஓசையை ஒரு சமகாலச் சரித்திர நாவலாகக் கொள்ளலாம் என்று ரமா சொன்னது ரொம்ப சரி. ஆனால் ஒரு வித்தியாசத்தைக் கவனிக்க வேணும். சரித்திர

நிகழ்ச்சிகளினால் சராசரி மனிதர்களின் வாழ்க்கை எப்படியெல்லாம் பாதிக்கப்படுகிறது என்பதை அலை ஓசை எடுத்துக் காட்டுகிறது. மற்ற சரித்திர நாவல்களில் சராசரி மனித வாழ்க்கையைப் பற்றி அதிக விவரங்கள் கிடையாது. இந்த வகையில் பார்த்தால் அலை ஓசைதான் கல்கியின் தலைசிறந்த படைப்பு எனலாம். அது சாஹித்ய அகாடமி விருது பெற்றதும் பொருத்தமே.

அ: சராசரி மனிதர்களாக கமலியும் கண்ணனும் பொன்னனும் வள்ளியும் இருக்கிறார்களே?

வி: கதை அவர்களைச் சுற்றிப் பின்னப்படவில்லையே...

ஸ்ரீ: எது எப்படியானாலும், பொன்னியின் செல்வனைப் போல் ஒரு கதையை இனி யாராலும் எழுத முடியாது என்பது என் அபிப்ராயம்.

ர: ஆமாம். அந்தப் புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டால்படித்துமுடிக்கும்வரை கீழே வைக்கவே தோன்றாது. அந்த நாட்களுக்கே, அந்த உலகத்துக்கே நாம் போய் விடுகிறோம். சுயநிலைக்குத் திரும்பக் கொஞ்சம் முயற்சி தேவைப்படுகிறது.

ஸ்ரீ: அப்புறம் இன்னொரு விஷயம்,பெண் மணிகளாகிய உங்கள் எல்லோருக்கும் ரொம்ப சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடிய முக்கிய விஷயத்தை மறந்துவிட்டீர்களே! பொன்னியின் செல்வனாகிய அருள்மொழி வர்மன் மாவீரன்தான். ஆனால் தாய்க்குலப் பிரதிநிதியான குந்தவைப் பிராட்டிதான் சூத்திரதாரி! அவள் பேச்சை இவன் தட்டவே மாட்டான்! இதன் மூலம் பெண்களிடம் எதையும் சாதிக்கும் வல்லமை உண்டு என்பதையும் ஆண்கள் அவர்கள் தலைமையை ஏற்பதில் அகௌரவம் ஏதும் இல்லை என்பதையும் உணர்த்தியிருக்கிறார். ஹூம்! தாய்க்குலத்துக்கு இதை நான் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது!

வி: ஏன், செம்பியன்மாதேவி, பூங்குழலி, இவர்களும்தான். மிக உயர்வாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர். நந்தினி நச்சுப் பாம்பு என்று அடிக்கடி வர்ணிக்கப்பட்டாலும் அவளிடமும் நமக்கு இரக்கம் ஏற்படும்படி செய்துவிடுகிறார்.

ர: அதேமாதிரிதான் நாகநந்தியும். கொடியவரானாலும் கலைப் பித்தர். சிவகாமி மீது மாமல்லருக்கு உள்ள காதலை எப்படி புரிந்து கொள்ள முடிகிறதோ அதேபோல் நாக நந்திக்கு அவள் மீது உள்ள காதலையும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

அ: பாத்திரப் படைப்பின் வெற்றியே அதில்தான் அடங்கியிருக்கிறது. எவ்வளவு கொடியவரானாலும் அவரிடமும் சில மனிதத் தன்மைகள் இருக்கும் என்னும் போது அதைச் சுலபமாக ஏற்க முடிகிறது.

ஸ்ரீ: சரித்திர நிகழ்ச்சிகளைச் சொல்வதில் மட்டுமின்றி அந்தந்த இடங்களின் வர்ணனைகளிலும் கச்சிதம் இருக்கிறது. மாமல்லபுரம் ஆகட்டும், இலங்கை ஆகட்டும், அஜந்தாவாகட்டும். அப்படியே கண் முன்னால் கொண்டு நிறுத்திவிடுகிறார்.

அ: கதாபாத்திரங்கள் பற்றிய வர்ணனையும் அப்படித்தான். அவை அந்தந்த பாத்திரங்களை உயிர்ப்பித்து விடுகின்றன.

வி: கதைகளோடுவெளியானமணியத்தின் ஓவியங்கள் இதற்குப் பெரிதும் உதவின. நந்தினி கொண்டை என்று ஒரு 'ஹேர் ஸ்டைல்' ரொம்பப் பிரபலமாகிவிட்டது!

ஸ்ரீ: ஆழ்வார்க்கடியானைப் பற்றி நினைக்கும் போதே சிரிப்பு வருகிறது... அந்த அளவிற்குத் தத்ரூபமான பாத்திரப் படைப்பு.

வி: சைவ வைணவப் பூசல்கள் எவ்வளவு அர்த்தமற்றவைஎன்றதையாண்டிஅந்தநகைச் சுவையில் பொதிந்து இருக்கும்.

ஸ்ரீ: அதே மாதிரி குடந்தை ஜோதிடர் வரும் கட்டங்களைக் கூர்ந்து கவனித்தால் ஜோதிடர் முடிவான ஜோதிடமே சொல்லவில்லை என்பது புரியும். ஜோதிடம், சகுனம், சாஸ்திரம் போன்றவற்றில் கல்கிக்கு நம்பிக்கையே இருந்ததில்லை.

வி: மூட நம்பிக்கைகளைத்தான் அவர் சாடினாரேயொழிய சம்பிரதாயங்களை இல்லை. அவர் கதைகளில் பண்டிகைகளை விமரிசையாகக் கொண்டாடுவது பற்றிய கோலாகலமான வர்ணனைகள் இருக்கும். விஜயதசமி அன்றுதான்மாமல்லநரசிம்மவர்மன்போருக்குப் புறப்படுகிறான்.

ர: சந்தர்ப்பம் கிடைக்கும்போது புராணக் கதைகளைக் கூட இடை இடையே எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

அ: (விசாலாட்சியிடம்) ஆராய்ச்சியாளர் என்கிற முறையில் கல்கியின் எழுத்துக்களுக்கு இன்று எவ்வளவு தூரம் அர்த்தம் இருக்கிறது என்று நினைக்கிறீர்கள்?

வி: அவர் எழுதிய போது இருந்த பிரச்னைகள் பல இன்னும் தீராமலேதான் இருக்கின்றன. சொல்லப் போனால், அவை இன்னும் தீவிரம் அடைந்துள்ளதால் கல்கியின் எழுத்துக்களின் அர்த்தமும் கனமும் கூடித்தான் இருக்கின்றன என்பேன்... கல்கியின் எழுத்துக்களுள் உங்களை மிகவும் கவர்ந்தது எது என்று சொல்லுங்களேன் ஸ்ரீகாந்த்.

ஸ்ரீ: நிச்சயமாக அவருடைய சரித்திர நாவல்

கள்தான். குறிப்பாகப் பொன்னியின் செல்வன்.

வி: ஆமாம். சரித்திர நாவல்களைப் பொறுத்தவரை அவர்தான் முன்னோடி.

ர: அவர் முன்னோடியாக மட்டும் இருக்கவில்லை; 'சரித்திர நாவல்களில் சரித்திரமே படைத்தார்' எனலாம்.

வி: ரொம்ப அழகாகச் சொன்னீர்கள். எத்தனை முறை படித்தாலும் அலுக்காத கதைகள், எத்தனை காலமானாலும் மறக்க முடியாத பாத்திரங்கள், எந்தக் காலத்துக்கும் பொருந்தும் கருத்துக்கள் — இவை அந்த நாவல்களின் லட்சணங்கள்.

ஸ்ரீ: இவ்வளவும் இருந்துவிட்டால் போதுமா? 'ஜனரஞ்சகம்' என்ற மிகப் பெரிய ரகசியம்தான் இவையெல்லாவற்றுக்கும் பின் நின்று அவர் எழுத்தைப் பிரகாசிக்கச் செய்கிறது. ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் அவருக்கு ஏற்பட்ட அனுபவம் இதில் உதவியிருக்கலாம்.

வி: எனக்குத் தெரிந்த சிறுவன் ஒருவன் — எழுத்தில் ஆர்வம் உள்ளவன் — வந்தியத் தேவன் என்று புனைபெயர் வைத்துக் கொண்டிருக்கிறான்!

அ: ஏன், வானதி, பூங்குழலி என்று தம் குழந்தைகளுக்குப் பெயர்சூட்டிய பெற்றோரும் இருக்கின்றனர்!

ர: ஓர் எழுத்தாளனின் வெற்றிக்கு இதை விட என்ன சான்று வேண்டும்?

தொகுப்பு: **அலமேலு**

மேலட்டை வண்ணப்படம், புகைப்படங்கள்: **—யோகா**

பாரதியார் விழா

அமரர் கல்கி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதும் இன்று திரு நா. மகாலிங்கம் அவர்களைத் தலைவராகக்கொண்டதுமான பாரதியார் சங்கம், பாரதிவிழாவை இம்மாதம் 11, 12 தேதிகளில் சென்னை ராணி சீதை மன்றத்தில் நடத்துகிறது.

மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம், திரு. ம. பொ. சி., அறநிலையத் துறை அமைச்சர் இராம. வீரப்பன், அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் திரு. வா. செ. குழந்தைசாமி, அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர் டாக்டர் எம். ஏ. எம். ராமசாமி முதலிய பலர் பங்கேற்கின்றனர். இன்னும் பல அறிஞர் பெருமக்களும் கலந்து கொள்கிறார்கள். 12ந் தேதி காலை பதினொரு மணி அளவில் பாரதி பற்றிய கலைநிகழ்ச்சியும் உள்ளது. பாரதி அன்பர்கள் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பிக்க வேணும்.



நெருப்பாக நீ

வந்த புதிதில், இன்பாவைப் பற்றிய எந்தவித அபிப்ராயமும் புவனுவுக்கு இல்லையென்றாலும், தன் மகனும், அவளுமாய் ஜோடியாய் வெளியே சுற்றி விட்டு வரும் போதும், கலகலவெனச் சிரித்தபடி வீட்டை வளைய வந்தபோதும் மனசுக்குள் ஒருவித சந்தோஷம் ஏற்படாமல் இல்லை.

'எனக்கு வேறே என்ன வேணும்.... இதைத் தவிர..

இப்படி, தனது மலர்ச்சியைக் கூட, வெளிக்காட்டப் பயந்தவளாய், மூடி மூடி வைத்தவளுக்கு, தோப்பு பங்களா பிரயாணமே ஒரு சஞ்சலத்தைத் தோற்றுவிக்கிறது.

யாரிவள்....?

இத்தனை சுத்தமா, பழைய பாட்டைப் பாடறா.....!

புவனுவிற்குப் பிறந்த வீட்டு மனிதர்கள் என்று யாரும் கிடையாது. நெருங்கிய சினேகிதிகளும் இல்லை. ஆதலால் அவளது அந்தரங்கங்கள் வெளியே போக வழியே இல்லை.

ஒருவேளை போலீசின் கையாளோ.... இல்லை டாக்டருடைய வேலையோ....?

அன்று முதலே புவனு, இன்பாவைப் பார்த்தால்கூட முகத்தைத் திருப்பிக் கொள்வாள்.

எப்படியாவது நந்துவை எச்சரித்துவிட வேண்டும் என்கிற பதைப்பும், என்ன சொல்லி, எச்சரிப்பது என்கிற குழப்பமுமாய் அவள் வளைய வந்தபோதுதான், லோகநாதன் அந்தச் செய்தியை அவளிடம் தெரிவித்தார்.

''அந்தப் பெண்ணோட உடம்புல, மங்களாவோட ஆவி புகுந்திருக்கு புவனு....''

தொண்டைக் குழியில் என்னவோ சிக்கினாற்போல இருக்கிறது புவனுவுக்கு.

ஆவி, பேய், இதிலெல்லாம் அத்தனை நம்பிக்கை கிடையாது என்றாலும், மங்களாம்பாளின் மறைவும், அதைத் தொடர்ந்து தன்னிரு பிள்ளைகளுக்கு நேர்ந்த கதியும் அவளுள் ஒரு பயம் கலந்த எதிர்பார்ப்பைத் தோற்றுவித்திருந்தன.

அவ பட்ட கஷ்டத்துக்கு, எத்தனை பிறவி எடுத்தாலும் என்னையும், என் குழந்தைகளையும் பழி வாங்காம விட மாட்டா....

'ஐயோ..... கொஞ்சமாவா அழ வச்சிருக்கேன் அவளை....! புருஷனைக் கொடுத்தா. தன் மாளிகையில இருக்க இடம் கொடுத்தா. அப்படியும் பாவி நான், அவளுக்கு உரிமையான நகைங்களைப் பிடுங்கித் தரச் சொன்னேனே.... மூணு பிள்ளைகளைப் பெத்துட்டதாலே, என்னமோ என் தலையிலதான் வைரக் கிரீடம் வச்சிட்டாப்பல அந்தத் துள்ளு துள்ளினேனே....

'அப்படியென்ன.... எனக்கு இவர் நகையே செஞ்சு போடலையா....'

அந்த நாளில் மங்களா சொன்ன போது எரிச்சலையும், ஆங்காரத்தையும் உண்டு பண்ணின வார்த்தைகளெல்லாம், இப்போது யோசித்துப் பார்த்தால் துக்கத்தை உண்டு பண்ணும்.

"வம்ச வம்சமா வந்த நகைங்க.... உங்க கையாலே முதல் தாலி வாங்கிட்டவங்கற உரிமையோடவும், உங்க அம்மாவோட வார்த்தைகளைக் காப்பாத்த வேண்டிய கட்மை இருக்கறதாலேயும் சொல்றேன். இதெல்லாம் வழி வழியா இந்தக் குடும்பத்துக்கு விளக்கேத்த வர்றவளுக்கு, அவளோட மாமியார் தர வேண்டிய சொத்து... ரெண்டாவதா வந்தவளை நான் குறை சொல்லலே. அவ பெத்த குழந்தைங்க கலியாணத்தும் போது, வரப் போற மருமகள்களுக்கு என் கையாலே தருவேனே தவிர, இப்ப என் உடம்புலேயிருந்து ஒரு திருகாணியக் கழட்ட முடியாது."

அப்போது புவனு கத்தினுள்.

"அப்ப, என் பிள்ளைகள் ஒசத்தி. நான் மட்டமா...."

"கண்டிப்பா.... இந்தக் குழந்தைங்க உங்களுக்குப் பொறந்ததுதாங்கறதை நான் ஒத்துக்கறேன். இதுக்கு முன்னடி இவ யார் கூட இருந்தா, நாடகக் கம்பெனியில அரிதாரம் பூசறவனேட வைப்பா இருந்தா. உண்டா இல்லையான்னு கேட்டுப் பாருங்க. நான் அவளைக் குத்தம் சொல்லலே. ஒருத்தனுக்கு ஒருத்திதாங்கற சம்பிரதாயமெல்லாம் ஆம்பிள்ளைங்களுக்கு இல்லாமப் போகலாம். ஒருத்திக்கு ஒருவன்கற பண்பாட்டை இன்னமும் இந்தக் குடும்பத்துப் பொண்ணுங்க மறக்கலே. நீங்க ரெண்டு பேரும் எப்படியோ வாழ்ந்துட்டுப் போங்க. நகைங்க மட்டும், உங்க வாரிசுகளுக்குத்தான்."

"நானில்லாம இந்தக் குடும்பத்துக்கு வாரிசு ஏதுண்னேன்? வாரிசைக் கொடுக்க ஒருத்தி; ஜமீன்தாரிணிங்கற பட்டப் பேரைச் சுமக்கறது ஒருத்தியா? படுக்கையறை பதுமையா ஒருத்தி; படாடோபமா உங்கக் கூட பவனி வர்றது இன்னொருத்தியா.... நீங்க ரொம்பத்தான் அவகிட்டப் பயந்துச் சாகறீங்க. இத்தனை பயமும், விசுவாசமும் மூத்தாள்கிட்ட வச்சிருக்கிறவர் எதுக்காக என் வாழ்க்கையில குறுக்கிடணும்..."

ஜமீன்தார் லோகநாதனின் கையில்தான் சவுக்கு இருக்குமென்றல்.... புவனுவின் நாவிலேயே சவுக்கு விளையாடுமென்று வீட்டிலுள்ள வேலையாட்கள் அத்தனை பேரும் பேசிக் கொள்வார்களே....!


அத்தனை ஏன், மாதையனே; எத்தனையோ முறை, நெஞ்சு துடிக்க, இவளை உதட்டுக்குள் சபித்திருக்கிறுன்.

"பழிகாரி. உன்னை மாரியாத்தாதான் கவனிச்சு தக்க கூலி கொடுக்கணும்."

தான் செய்த பாவங்களுக்குக் கண்டிப்பாய் இந்த ஜென்மத்திலேயே ஏதோ ஒரு பெரிய தண்டனை காத்திருக்கிறது என்றே புவனுவும் நம்பிக் கொண்டிருக்க....

இந்த நேரத்தில் மறுபடியும் மங்களாம்பாள் வந்திருக்கிறுள் என்றல்....

மங்களாம்பாளை அவள் கடைசியாய்ப் பார்த்த காட்சி, கண்களுக்குள் வந்து நிற்க, தூக்கி வாரிப் போடுகிறது அவளுக்கு. வியர்வை, அருவியாய்க் கொட்டுகிறது.



லோகநாதன், மனைவிக்கு ஆறுதலளிக்கும் வகையில் சொன்னார்.

"இந்தா.... நீ எதுக்கும் கவலைப்படாதே... நான் ஸ்டேஷன் மாஸ்டர் கிட்டச் சொல்லி, இதுக்கு ஒரு வழி பண்ணச் சொல்லியிருக்கேன். அதுக்கு முன்னாலே, அத்தனை நகையும் போன எடம் தெரிய வேண்டாமா.... அதான், அவரைக் கொண்டே விசாரிக்க வேண்டிய முறையில விசாரிக்கச் சொல்லியிருக்கேன்."

புவனா நெஞ்சில் கைவைத்தபடி, தலையை வேகமாய் அசைக்கிறாள்.

"என்னம்மா.... இத்தனைக்குப் பிறகு அந்த நகைங்களை வேண்டாம்னு சொல்றியா.... உனக்கு இஷ்டமில்லைன்னா போட்டுக்க வேண்டாம். ஆனா, நம்ம நந்துவோடப் பெண்டாட்டிக்கு அந்த நகைங்க போய்ச் சேர்ந்தாகணும் இல்லையா?"



"................"

"எத்தனை வருஷங்களா எங்க குடும்பத்துல இருந்த நகைங்க. இன்னிக்கு எனக்கு இருக்கற சொத்து மாதிரி பத்து மடங்கு மதிப்புள்ளது. எல்லாம் ஸ்டேஷன் மாஸ்டர் கேட்கற கேள்விங்கள்லே கதறிட்டுப் பதில் வராதா..."

"வேண்டாங்க.... வேண்டாங்க..."

புவனா இதை வாய்விட்டுச் சொல்லவில்லே. கணவனின் கைகளைப் பிடித்தபடியே அழுதாள்.

"நீ சும்மாயிரு புவனா. உன்கிட்ட இந்த விஷயத்தைச்சொல்லியேஇருக்கமாட்டேன். எதுக்காகச் சொன்னேன்னா, நான் இல்லாதப்ப, அந்தப் பெண்ணை இந்த அறைக்குள்ள வரவிடாதே. உன் மேல இருக்கற பழிய தீர்த்துக்க உன்னைத் தேடி வந்தாலும் வருவான்னு ஸ்டேஷன் மாஸ்டர் சொன்னதாலே இதைச் சொல்ல வேண்டியதாப் போச்சு!"

அவ்வளவுதான். புவனாவின் உடம்பு சில்லிட்டுவிட்டது.

லோகநாதனின் வார்த்தைகள் அவளை நெருப்பில் இட்டுப் பொசுக்கின.

"உன் மேல இருக்கற பழியைத் தீர்த்துக்க அவ வந்தாலும் வரலாம்...."

இதற்குப் பின் இன்பாவின் தலையைக் கண்டாலே ஓடி ஒளிய ஆரம்பித்தாள் அவள்.

புவனாவுக்கும் இன்பாவுக்குமிடையே ஒரு கண்ணா மூச்சி விளையாட்டே நடக்கிறது.

இன்பா வாசலில் கோலம் போட்டால், புவனாவிற்கு மங்களாம்பாளே மறுபடியும் வந்து கோலம் போடுவது போல இருக்கிறது.

அவள் தலையை உயர்த்திப் பார்த்தால் விழுந்தடித்துக் கொண்டு ஓடுகிறாள்.

இன்பா, அவினாஷுடன் பேசிக்கொண்டிருந்தால், இவள் படும் அவதி சொல்லில் வடிக்க முடியாது.

'ஐயோ.... புத்தி சரியில்லாத என் பிள்ளையைக் கொன்னுடப் போறாளோ....?'

மாதையனின் வார்த்தைகள் வேறு எரிகிற தீயில் எண்ணெய்யை ஊற்றினாற்போல இருக்கிறது....

"அம்மா வந்திருக்காங்க சின்னம்மா. பேச்சும், நடையுடை பாவனையும் அப்படியே அவங்கதான். உங்களைப் பத்திக்கூடக் கேட்டாங்க...."

புவனா நடுங்கியபடி தலை நிமிருகிறாள்.

"நீங்க பேசவிங்கங்கறது அம்மாவுக்குத் தெரியுமுங்க. மனுஷங்களை ஏமாத்தலாம். தெய்வமானவங்களை ஏமாத்த முடியுமா?"

அவன், இதையெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தபோது, இன்பா வேறொரு காரியத்தில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறாள்.

மங்களாம்பாளின் பூஜை அலமாரியில் இருந்த சுலோகப் புத்தகங்களுக்கு நடுவே, ஒரு கணக்கு நோட்டு.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தியாறும் ஆண்டு, வீட்டைப் புதுப்பித்துக் கட்ட ஆன செலவு வகைகளை, மங்களாம்பாள் தன் கைப்பட மிக அழகாகக் குறித்திருந்தாள்.

அதில் ஒரு வரி மட்டும் திரும்பத் திரும்ப, இன்பாவின் கண்களில் வந்து மோதுகிறது.

மேஸ்திரிக்கு மருந்து செலவு — 5 ரூபாய்.

மேஸ்திரிக்கு வீட்டுச் செலவுக்காக — 10 ரூபாய்.

மேஸ்திரி மனைவிக்காக — 2 ரூபாய்.

அடிக்கடி இந்த மேஸ்திரிக்கு ஏன் பணம் தந்திருக்கிறாள் மங்களாம்பா?

கருணையினாலா?

பயத்தினாலா?

இன்பாவின் புருவம் முடிச்சிடுகிறது.

(தொடரும்)

உங்கள் கைகளிலேயே குணப்படுத்தும் சக்தி...



சுளுக்கு, தசைபிடிப்பு, மூட்டுநோவு, உடல்வலி இவைகளுக்கு.

பாசமிக்க மென்மையான உங்கள் கைகளின் ஸ்பரிசம், கூடவே குணப்படுத்தும் சக்திமிக்க அயொடெக்ஸ்—உங்கள் குடும்பத்திற்குத் தேவை. எனவே கைவசம் இருக்கட்டும் அயொடெக்ஸ். ஏனெனில், பாதிக்கப்பட்ட திசுக்களைக் குணப்படுத்தும் அயொடின் மற்றும் வலிதணிக்கும் மீத்தைல் ஸலிஸிலேட் கொண்டது அயொடெக்ஸ்.

அயொடெக்ஸ் இரு முறை தினம் தடவ இரு மடங்கு குணம்

வலி தணியும் வரை, தினம் இருமுறை அயொடெக்ஸ் தடவ டாக்டர்கள் பரிந்துரைக்கின்றனர்... பின்னரும் இரு தினங்கள்... ஏனெனில் வலி ஒரு அடையாளம் மட்டுமே. நிஜமான பிரச்சினை, திசுக்களின் உள்ளார்ந்த பாதிப்பு.

எனவே, உமது அன்பிற்குரியோர், சுளுக்கு, தசைப்பிடிப்பு, மூட்டுநோவு, உடல்வலி இவற்றால் துன்புறுகையில் அயொடெக்ஸ் தடவித் தேயுங்கள் தினம் இருமுறை. இருமடங்கு வேகமாக அவர்கள் தத்தம் வேலைகளை கவனிக்கத் தொடங்குவர். உங்களை அன்புடன் நினைப்பார்கள்.

அயொடெக்ஸ்®- குணப்படுத்தும் சக்திகொண்ட பாம்

SKF – ஓர் எஸ்கேஃப் தயாரிப்பு

ELL-1508



சாகும் நேரது சில ஆசைகள்

"நான் இன்னும் எத்தனை மணி நேரம் பொழைச்சிருப்பேன்னு டாக்டர் சொன்னாரு?"

ராஜகோபாலன் மெல்லிய குரலில் கேட்டார்.

மைதிலிக்கு அழுகை தூண்டப்பட்டுத் தயாரானது. விம்மல்கள் பிரவகிக்க உஷாராயின. ஒரு மனைவியிடம் கணவன் கேட்கும் கேள்வியா இது? பழுக்கக் காய்ச்சிய கூர் இரும்பு போல எத்தனை வேதனையைக் கிளறிக் கொண்டு நெஞ்சில் தைக்கிற வார்த்தைகள்!

"சொல்லு மைதிலி... எனக்கு எல்லாம் தெரியும். தயவு செஞ்சு பொய் மட்டும் சொல்லிடாதே. இன்னும் எத்தனை மணி நேரம்?" வார்த்தைகளைக் கோர்ப்பதைவிட வாய் வழியே உதிர்ப்பதுதான் ராஜகோபாலனுக்கு அவஸ்தையாய் இருந்திருக்க வேண்டும். முகத்தின் இறுக்கத்தில், முரண்டு பிடித்த நாக்கில், தத்தளித்த உதடுகளில் அந்த நரக அனுபவம் பொதிந்திருந்தது.

உண்மையை இவரிடம் எப்படிச் சொல்வது? டாக்டர் சொன்னதை அப்படியே சொல்ல முடியுமா?

"டயாலிஸிஸ் பண்ணியாச்சு. இன்னும் எட்டு மணி நேரத்துக்கு அவரால சுய நினைவோட இருக்க முடியும். உயில் பத்திரத்தில கையெழுத்து ஏதாவது வாங்கணும்னா இந்த நேரத்தில வாங்கிடுங்கம்மா...

உயில் பத்திரம்! உயிருக்கே உத்தரவாதம் கொடுக்க முடியவில்லை. உயில் என்ன உயில். அப்படி எழுதித் தான் வாங்குவதற்கு லட்சம் லட்சமாய் பாங்கில் இருக்கிறதா? மனை மனையாக ஊரோரம் நிலம் இருக்கிறதா, இல்லை வாடகை வசூலிக்க வீடுகள் தான் இருக்கின்றனவா? கல்யாணத்தின் போது கழுத்தோடு வந்த பதினைந்து பவுனைத் தவிர மற்றதெல்லாம் கரைந்தாயிற்று.

மாதம் நூறு ரூபாய்க்கு கிடைக்குமா, நூற்றைம்பதுக்குக் கிடைக்குமா என்று ஒற்றை ரூம் அவுட் ஹவுஸுக்குக் குடி போகக் கணக்குப் பார்க்க முடிந்ததே தவிர, ஆஸ்பத்திரியில் அறைக்கு தினமும் நாற்பது ரூபாய் கப்பம் கட்ட இரண்டாவது யோசனையே வரவில்



லையே! வியாதிக்கென்ன விவஸ்தையா இருக்கிறது. கீழ் நடுத்தரக் குடும்பத்துக்கு இத்தனை பெரிய நோய் தாங்காது என்று விலகிப் போக?

''என் கூடப் பேசக்கூடாதுன்னு வைராக்கியமா மைதிலி? ராஜகோபாலனின் அந்தக் கேள்வி மைதிலியை லாடம் அடித்தது.

''ஐயையோ, என்னங்க இப்படில்லாம் பேசறீங்க?''

''அப்ப பதில் சொல்லேன்.''

''இன்னும் எட்டு மணி நேரத்துக்கு நீங்க கூட நினைவோட இருக்க முடியும்னு டாக்டர் சொன்னாருங்க. இருக்கற நேரத்தையும் வேண்டாத பேச்சில வீணடிக்க வேண்டாமேன்னு தான் நான்...''

''எட்டு மணி நேரத்துக்கு அப்புறம் என்னவாம் மைதிலி?''

''உங்களுக்கு நினைவு தப்பிட்டா என்னங்க? எனக்கு என்ன வந்தது? என்ன வேணும்னு நீங்க கேட்டுக் கேட்டா எல்லாம் செய்யப் போறேன்?''

''இன்னும் எத்தனை நாளைக்கு மைதிலி?'

''உங்க உடம்பில உசிரு இருக்கற வரைக்கும்...''

ராஜகோபாலனின் உதடுகள் கோணிக் கொண்டன. புன்னகை புரிய முயற்சியா?

''மைதிலி... திரும்ப நான் உன் கூட மனசு விட்டு...என்னால பேச முடியுமோ, முடியாதோ... என் கடைசி ஆசைங்களை உங்கிட்ட சொல்லட்டுமா?''

விடுவித்த ஸ்ப்ரிங் மாதிரி அவள் கைநீண்டு அவர் வாயைப் பொத்திற்று. ''கடைசி ஆசை அது. இதுன்னு உளறாதீங்க...''

ராஜகோபாலன் சற்றே எஃகிப் படுக்கையில் தன் நிலையை மாற்றிக் கொண்டார்.

''கேக்க மாட்டியா மைதிலி?''

''சொல்லுங்க.''

''இப்ப டயம் என்ன?''

''ராத்திரி ஒம்பது மணி.


''மது எங்கே?''

''மது தினம் காலைல எழுந்து கோயிலுக்குப் போயிட்டு வராங்க. எங்கப்பாவை எப்படியாவது காப்பாத்திடு சாமின்னு வேண்டிக்கிட்டு பிரசாதம் கொண்டுக்கிட்டு வரான்?''

''இப்ப எங்கே?''

''வீட்ல தூங்கிட்டிருக்காங்க.'' மைதிலி தரையைப் பார்த்துப் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

''தெரியுது!'' என்றார் ராஜகோபாலன். ''பன்னெண்டு வயசுப் பையன். அப்பா சாகறப்ப கூட இருந்து கவனிச்சா அவன் மனசில அது ஆழமா பாதிச்சிடும்னுதானே அழைச்சிட்டு வரலை?''



''சாகப் போறேன், சாகப் போறேன்னு ஏன் சொல்றீங்க?''

''சரி, என் கடைசி ஆசைங்களை சொல்லட்டா?''

''ம்.''

''குவார்ட்டர் மெக்டவல் பிராந்தி.''

''என்னது!'' மைதிலியின் கண்களில் மின்னல் அதிர்ச்சி.

''இரு. நான் சொல்லி முடிக்கலையே. குவார்ட்டர் மெக்டவல், ரெண்டு சிகரெட், ஒரு பான் பீடா, அப்புறம்...''

''என்னங்க இது, வெளையாடறீங்களா? நானறிஞ்சு நீங்க குடிச்சதே கெடையாது...''

''நீயறிஞ்சு குடிச்சதில்லே... உண்மை தான். ஆனா நான் குடிப்பேன் மைதிலி... நெறைய குடிச்சிருக்கேன்.... என் ஜின் மாதிரி சிகரெட் பிடிச்சிருக்கேன்... உன்கிட்ட இனிமே மறைக்க வேண்டாம்னு பாக்கறேன்... வாங்கித் தரியா? முடியாதுன்னு மட்டும் சொல்லிடாத... அப்புறம் என் ஆத்மா...''

மேலே பேச முடியவில்லை. கண்களில் கண்ணீர் அருவியானது.

''கடைசி ஆசைங்க அவ்வளவுதானா இன்னும் இருக்கா?'' மைதிலியின் குரலில் மெலிதான ஏமாற்றம் இருந்தது.

''இன்னும் மூணு ஆசைங்க மைதிலி...''

''என்ன? ரம்மி ஆடணும், காபரே டான்ஸ் போகணும், கஞ்சா பிடிக்கணும்னு?''

''மைதிலி, நீ கோபமாப் பேசறே...''

மைதிலி விட்டத்தைப் பார்த்தாள். ரொடக், ரொடக் என்று சப்தித்துக்கொண்டு சுழலும் மின் விசிறி. காற்றுக்கு அசராமல் ஆளைச் சுற்றி வரும் செழித்த சில கொசுக்கள்.

''மைதிலி.''

மைதிலி மெல்லத் திரும்பினாள்.

''எனக்கு உடனே மதுவைப் பாக்கணும், மைதிலி. ரெண்டாவது உன்கிட்ட ஒரு சத்தியம் வேணும்...''

''பக்கத்து வீட்டுக்காரர், பெண்டாட்டிகிட்டே அடிக்கடி பாட்டு வாங்கிகிட்டிருக்காருன்னு எப்படிச் சொல்றே?''

''அதான், இவர் திடீர்னு ரேடியோ சப்தத்தை ரொம்ப ரொம்பக் கூட்டி வச்சிருக்காங்களே, அங்கே...''

— ஜி. எஸ். பாண்டியன்



''என்ன?''

''என்னை நீ என்னிக்கும் மறக்கக் கூடாது.''

''என்னங்க இது பேத்தல்?''

''என் நினைவா நீ கடைசி வரைக்கும் நெத்தில பொட்டு வச்சுக்கணும், பூ வச்சுக்கணும். நகைங்களை... ஏய், எங்கே உன் கழுத்தில கைல இருந்ததெல்லாம் காணோம். ஏன் பிளாஸ்டிக் வளை போட்டிருக்கே?''

மைதிலி சற்றே தயங்கினாள். ''வீட்ல வச்சிருக்கேங்க...''

''நம்ம வீட்லயா? சேட்ஜி வீட்லயா?''

அதிர்ச்சி சடாரென்று முகத்தை நிமிர்த்தியது.

''பணத்தை என்ன பண்ணினே மைதிலி? சாகறவன் கிட்ட பொய் சொல்லாதே...''

''நாளைக்கு ஹாஸ்பிடலுக்கு கட்டணுங்க...''

''காப்பாத்த முடியாதுன்னு சொல்றதுக்கா அவ்வளவு பணம்?''

''இல்லீங்க... உங்க லங்ஸ் சரியா வேலை செய்யலே... மெஷின் வச்சு தான் மூச்சு விடறீங்க. ஒரு நாளைக்கு மூவாயிரம் ரூபா ஆகுமாம்...''

''நகைல எவ்வளவு கெடைக்கும்? இருபதாயிரம்? ஏழு நாள் கழிச்சு என்ன செய்யப் போறே?''

''ஏழு நாள்னு ஏழு நாள்,'' சொல்லும் போதே மைதிலிக்கு குரல் நடுங்கியது.

''இன்னும் ஒரு ஆசை என்னன்னு கேக்கலியே, நீ?'' மைதிலி வெந்நீரில் உட்கார்ந்திருப்பது போல் தவித்தாள். சுயநினைவு வரும் பொழுது இன்னும் சந்தோஷமான விஷயங்களையே பேசவேண்டும் என்று நினைத்திருந்தது எப்படியோ அடிபட்டுப் போனதை எண்ணி வேதனைப்பட்டாள். வீடு திரும்பும் மாடு போல சிந்தனையும், பேச்சும் தன்னிச்சையாக பாதை மாறி, விரக்தியான சூழலை கைப்பிடித்துக் கொண்டு வந்து விட்டதை உணர்ந்து குன்றிப் போனாள்.

''காலைல மதுவோட நீயும் கோயிலுக்குப் போகணும் மைதிலி... மாங்காடு கோயிலுக்கு...''

''ஐயோ... மாங்காடு போய்ட்டு வரவே நேரமாயிடுங்க... நாளைக்கு வேண்டாம்..''

''நாளைக்குக் காலைலதான் நீ போயிட்டு வரணும் மைதிலி... போய் எனக்காக பிரசாதம் எடுத்திட்டு வரணும்...''

''நாளைக்கு வேண்டாங்க... இன்னொரு நாள்...''

''ஏன் மைதிலி, நான் உயிரோட இருப்பேன்னு உனக்கே நம்பிக்கையில்லையா?''

சுரீர் சுரீர் என்று பேசுவதற்கு இவர் எப்போது கற்றுக் கொண்டார்?

''சரி, நான் போய்ட்டு வரேங்க...''

''குட்... மனேகரனைக் கூப்பிடு...''

''என் தம்பியையா? எதுக்கு?''

''மெக்டவலை அதுக்குள்ள மறந்திட்டியா? வாங்கிட்டு வரச் சொல்லு...''

''வேண்டாங்க...''

''ப்ளீஸ் மைதிலி... டோண்ட் ஸே நோ.''

ராஜகோபாலன் கண்களை மூடிக் கொண்டார், மேலே அதைப் பற்றிப் பேச விரும்பாதவர் போல.

ராத்திரியோடு ராத்திரியாய் மைதிலியின் தம்பி மனோகரன் எழுப்பப்பட்டு, ஆஸ்பத்திரியில் எவருக்கும் தெரியாமல் அந்தக் 'கடைசி ஆசை' சமாசாரங்கள் ராஜகோபாலனின் ஸ்பெஷல் வார்டுக்குள் எடுத்துச் செல்லப்பட்டு...

"மைதிலி, நீ வெளியே இருந்துக்க, ப்ளீஸ்."

மைதிலி இறுகிப் போன மனத்துடன் வெளியே வந்து பெஞ்சில் படுத்தாள். காலையிலிருந்து அயராமல் வீட்டுக்கும், ஆஸ்பத்திரிக்கும், மருந்துக் கடைக்கும் ஓடியிருந்ததில் உடம்பு தானாகவே ஓய்வெடுக்கட்டுமா என்று கேட்டது. அவள் பதிலுக்குக் காத்திருக்காமல் தூக்கம் வந்தது.

"அம்மா... எழுந்திரும்மா."

மைதிலி வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். மதுசூதன் நெற்றியில் மெல்லிய விபூதிக் கீற்றுடன் நின்றிருந்தான்.

வானம் இன்னும் சாம்பலை உதிர்க்காத காலை. ஆஸ்பத்திரியும், அதைச் சுற்றி அடர்ந்திருந்த மரங்களின் பட்சிகளும் விழிக்காத பொழுது.

"நான்தான் கூட்டிட்டு வந்தேன்க்கா" மனோகரன் சொன்னான்.

விழித்ததுமே, ராஜகோபாலனின் நினைவு உள்ளங்காலிலிருந்து உயரே பாய, மைதிலி பதறிக் கொண்டு ரூமுக்குள் நுழைந்தாள்.

ராஜகோபாலன் வெகு அசதியாய் உடல் தளர்ந்து படுத்திருந்தார். கண்கள் தூக்கத்தின் சுமையில் இமைகளைக் கீழே இழுக்க முயற்சி செய்து கொண்டிருந்தன.

"மது" குரல் வரவில்லை. உதடுகளின் அசைவு தான் எழுத்துக்களைச் சொன்னது.

"அக்கா, உன்னையும் மதுவையும் மாங்காடு போயிட்டு வரச் சொன்னாருக்கா."

"நான் குளிச்சுட்டேம்மா..." என்றான் மதுசூதன், சின்னப் பெருமையோடு.

"மனோ, இப்படி வாயேன்."

மைதிலி தன் தம்பியைத் தனியே அழைத்துப் போனாள்.

"குடிச்சாராடா?"

மனோகரன் பார்வையை நகர்த்திக் கொண்டு, "ஆமாம்க்கா" என்றான்.

உணர்ச்சிகளை நெஞ்சுக்குள் புதைத்து விட்டு, "பணத்துக்கு ஏற்பாடு பண்ணிட்டியாடா?" என்றாள்.

"ம்."

"நானும் மதுவும் கோயிலுக்குப் போயிட்டு வர்ற வரைக்கும் மாமாவை ஜாக்கிரதையாப் பாத்துக்க மனோ... நான் வர்றேங்க..."

மைதிலி சொல்லிக் கொண்ட போது, ராஜகோபாலன் மறுபடியும் மௌன உலகத்திற்குள் சஞ்சரித்து விட்டார்.

மாங்காட்டிலிருந்து பஸ் திரும்பிய போது, மணி பதினொன்றரையைத் தாண்டி

வாசகர் பட்டி மன்றம்-6

பரிசு ரூ 300/-



கம்ப்யூட்டர் இந்தியாவுக்கு —

தீமையே விளைவிக்கும்!
நன்மையே செய்யும்!

நமது பிரதமர் கம்ப்யூட்டர்களிடம் ரொம்ப நம்பிக்கை வைத்துள்ளார். வேறு பலரோ வேலையில்லாத் திண்டாட்டமும் படிப்பறிவு குறைவாகவும் உள்ள நாட்டில் கம்ப்யூட்டர்கள் சாபக்கேடாக விளங்கும் என்று சத்தியம் பண்ணுகிறார்கள். நீங்கள் எந்தக் கட்சி? (கருத்து: எஸ்.ஜே. இதயா, மதுரை) எழுதுங்கள்!

அளவு: கல்கியில் சுமார் அரைப்பக்கம்

பரிசு: இரு தரப்பிலும் இரு கட்டுரைகளுக்குத் தலா ரூ 100

பிரசுரம்: இரு பரிசுக் கட்டுரைகள் தவிர இரு கட்சிகளிலிருந்தும் ஐந்து ஐந்து கட்டுரைகளின் முக்கிய பகுதிகள். இவை ஒவ்வொன்றுக்கும் ஆறுதல் பரிசு ரூ 10.

மதிப்பெண்: எந்தக் கட்சிக்கு வாசகர்களின் அதிகமான ஆதரவு என்பதை உணர்த்தும்.

முடிவு தேதி: செப்டம்பர் 22

வேண்டுகோள்: உறைமீது "பட்டி மன்றம் 6" எனக் குறிப்பிடுக.

நிபந்தனை: கீழே விலாசம் எழுதி இந்த அரைப் பக்கத்தைக் கத்தரித்துக் கட்டுரையுடன் இணைக்கவும்.

பெயர்: ....

விலாசம்: ....

....

யிருந்தது.

தெரு முனைக்கு வந்தபோதே மைதிலிக்கு நிலைமை புரிந்துவிட்டது. சிவந்த கண்களும், அலையும் பார்வையுமாக மனோகரன் ஆஸ்பத்திரி வாசலிலேயே நின்றிருந்தான். இவர்களைப் பார்த்ததும் ஓடி வந்தான்.

"அக்கா, மாமா பத்து மணிக்கு... பத்து மணிக்கு..." மேலே சொல்ல முடியாமல் அழுகை வெடித்துக் கிளம்பியது.

"என்னடா ஆச்சு? டாக்டர் மெஷின் வைக்கலையா?"

"இல்லைக்கா..."

"ஏண்டா?" கேள்வியில் நெருப்பு இருந்தது. "நீ, பணத்துக்கு ஏற்பாடு பண்ணிட்டேன்ற நம்பிக்கையிலதானடா நான் மாங்காடு கௌம்பிப் போனேன்...?"

"மெஷின் வைக்கக் கூடாதுன்னு மாமா ராத்திரியே சத்தியம் வாங்கிக்கிட்டார் அக்கா..."

மனோகரனைத் தள்ளிக் கொண்டு மைதிலி உள்ளே ஓடினாள். மதுசூதன் பின்னாலேயே கன்று மாதிரி ஓடினான்.

எல்லாம் முடிந்தாயிற்று.

கண்களும், நெஞ்சும், நாவும் வறண்டு போய் விட்டன. மைதிலி மனோகரனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். உள்ளுக்குள் ஒரு பூகம்பம் வெடித்துக் கிளம்பி, சடாரென்று பாய்ந்து அவன் சட்டையைப் பற்றி கன்னத்தில் கையை வீசினாள்.

"ஏண்டா மாமாவுக்கு மெஷின் வைக்கலை?"

"'மெஷின் வச்சாலும் ஒரு வாரம்தாண்டா என் பொழைப்பு... இருக்கற பணத்தையெல்லாம் அதில கொட்டிட்டு எட்டாவது நாள் அம்போன்னு நிப்பாடா உங்கக்கா. பைத்தியக்காரி. நகையை வித்த பணத்தை அவகிட்ட கொடு... பாங்கில போட்டு வச்சுக்கட்டும்.... ஒரு நெலைமைக்கு வர்றவரைக்கும் உதவும்'னு சத்தியம் வாங்கிக்கிட்டார் அக்கா.... அந்த சமயத்திலே நீ இங்க இருக்கக் கூடாதுன்னுதான் உன்னை நைஸா கோயிலுக்கு அனுப்பிட்டாரு..." மனோகரன் திக்கித் திக்கிப் பேசினான்.

மைதிலி மெல்ல அவன் சட்டையிலிருந்து கையை எடுத்தாள்.

அந்த இன்னொரு உண்மையையும் அக்காவிடம் சொல்லிவிடலாமா? கணநேர சலனம்.

'மாமா நிஜமா குடிக்கலை அக்கா... உத்தமமான மனுஷர் போயிட்டாருன்னு உனக்குத் தாங்க முடியாத துக்கம் வருமாம்... இனிமே மாமாவைப் பத்தி எப்ப நெனைச்சாலும் அவரோட அந்தக் கடைசி ஆசைங்க உன் மனசில ஒரு கசப்பைக் கொண்டு வரணும்னுதான் அப்படி செஞ்சாராம். உன்கிட்ட இதை சொல்லக் கூடாதுன்னு தலைமேலே அடிச்சு சத்தியம் வாங்கிக்கிட்டாரு அக்கா...

ஊம்ஹூம். இந்த உண்மை மட்டும் என்றைக்கும் வெளியே வரக் கூடாது என்று மனோகரன் தீர்மானம் செய்தான்.

அழுது கொண்டிருந்த மதுசூதனை சமாதானம் செய்ய நகர்ந்து போனான்.

அருள்வாக்கு



லோகோபகாரமாகச் செய்யக்கூடிய அநேகப் பணிகளில் ஸத்பாத்ரத்துக்கு வித்யையை போதிப்பதற்கு ஸமமாக எதையும், சொல்ல முடியாது என்று நம் முன்னோர் அபிப்பிராயப்பட்டனர். 'வித்யாதானம்,' 'வித்யாதானம்' என்று இதை மிகவும் விசேஷித்துச் சொல்லியிருக்கிறது. 'தானம்' என்ற பதத்தைப் போட்டதாலேயே, கற்றுக் கொடுக்கிற ஆசார்யர் வித்யார்த்தியிடமிருந்து எந்த த்ரவ்ய லாபமும் எதிர்பார்க்கக் கூடாது என்று ஏற்படுகிறது.

மநுஸ்ம்ருதியில் இதைப் பற்றிச் சொல்லும் போது, "தானங்களிலேயே சிறப்பு வாய்ந்தவற்றுக்கு அதிதானம் என்று பெயர். கோதானம், பூதானம், வித்யாதானம் ஆகிய மூன்றும், அதிதானங்கள். அன்னதானமும் உயர்வானது. வயிற்றுக்கு அன்னம் போடுவதை விட அறிவுக்கு அன்னமாக வித்யாதானம் செய்வது சிறப்புடையது. வித்யைகளில் பல இருக்கின்றன. இவற்றில் எதை தானம் செய்வதுமே விசேஷந்தானென்றாலும், வித்யைகளுக்குள்ளேயே தலை சிறந்ததாக உள்ள ஆத்ம வித்யையான ப்ரஹ்ம வித்யையை தானம் செய்தால் அதன் சிறப்பைச் சொல்லி முடியாது. ப்ரஹ்ம வித்யாதானம் செய்பவனுக்கு தேவலோகமான ஸ்வர்க்கம் மட்டுமின்றி, ஸம்ஸார பந்தமே தீர்ந்து பரமாத்மாவோடு ஐக்கியப்பட்டிருப்பதான மோக்ஷமும் கிட்டி விடுகிறது" என்றெல்லாம் புகழ்ந்து சொல்லியிருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

உலகமே இருண்ட போது...



* டெலிபோன் பூத்தில் உதயசூரியன்

அனுபவித்திருக்கிறீர்களா? கல்யாண தேதி குறிக்கப்பட்டு, நாட்களை எண்ணிக் கொண்டிருக்கையில் — மனசு பூராவும் கனவு எழும்பிப் போகும் அவஸ்தையும், கிளு கிளுப்புமான உணர்ச்சிகளை...

அதுமாதிரி அனுபவம்தான் இருபத்தினாலு வயதான உதயசூரியனுக்கும். கல்யாண நாள் நெருங்கி விட்டது. அவனுக்கு *ராதா ஞாபகம் அடிக்கடி வந்தது. ராதா எவ்வளவு நல்ல பெண்? எப்படி நேசிக்கிறாள்? தான் விரும்பின பெண்ணே மணமகளாய் வரப் போவது குறித்து சந்தோஷம் இருக்காதா என்ன?

சிறு வயதிலிருந்தே பழக்கம் உதயசூரியனுக்கும், ராதாவுக்கும். பழக்கம் காதலாகிவிட்டது. அடிக்கடி சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் ராதா வந்து, "வீட்டில் வேறு மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கி விட்டதாக முகம் முழுவதும் பதற்றத்துடன் சொல்கிறாள். உதயசூரியன் உடனே ராதாவின் வீட்டுக்குப் போனான். கொஞ்சம் கூச்சமும் அதுவுமாக — காதலை விளக்க விட்டார் ஒரு வழியாகச் சம்மதித்து விட்டார்கள். வந்து தன் வீட்டிலும் சொன்னான். அங்கும் சம்மதம். மகிழ்ந்து போனான். 'நானும் சம்பாதிக்கின்றேன்; அவளும் சம்பாதிக்கின்றாள்; கவலையில்லாமல் வாழ்க்கை ஓடிவிடும்' என்று மனசுக்குள்ளேயே நிச்சயித்து வைத்திருந்தான். பெரியவர்கள் கூடிப் பேசினார்கள்; கல்யாண நாள் நிச்சயித்தாயிற்று. இதோ... பக்கத்தில் நெருங்கி விட்டது.

நாளை மறுநாள் கல்யாணம். சகல ஏற்பாடுகளும் செய்தாகி விட்டது. ஏழு பேர் இருக்கிற வீட்டில் மூத்த பையன் என்பதால் உதயசூரியனுக்குக் கடுமையாய் வேலைகள். அசதியும் சந்தோஷமுமாகத். தூங்கிப் போனான்.

காலை. விடிந்தும் விடியாமலிருக்கிறது. நாளை கல்யாணமாயிற்றே! இன்னும் ஒரே ஒரு வேலை... 'வாழை மரத்திற்குச் சொல்லி விட வேண்டும்.' தூக்கக் கலக்கத்தோடு எழுந்து வெளியே போனான். வீட்டிற்குப் பின்னால் உள்ள தோட்டத்துப் பக்கம் போன போதுதான் அது நடந்து விட்டது.

செடி மறைவில் ஏதோ அசைவு; யார்? என்ன அது? நிதானித்து நிமிர்வதற்குள் முகம் முழுக்க ஒரு படி நெருப்புக் கங்கைக் கொட்டின மாதிரி சூடு. அழுத்தமான பொசுங்கல். முகத்திலிருந்து பொசுங்கி விறுவிறுவென்று கழுத்து, இடுப்பு வரை பெட்ரோல் தீ மாதிரி இறங்குகிறது. என்ன வலி! என்ன வலி! பின்னி எடுக்கிறது. தோலெல்லாம் இழுத்துப் பிய்க்கிற மாதிரி சுரீர் சுரீர் என்று அழுத்துகிறது. என்ன விழுந்தது என் மேல்? யார் இப்படிச் செய்தார்கள்? இதென்ன...? முகமெல்லாம் உருகுகிற மாதிரி இருக்கிறதே? என்ன நேர்ந்தது எனக்கு? ஐயோ... என்ன... கண்ணைத் திறக்க முடியவில்லையே? ம்... ம்... என்ன முயன்றாலும் முடியவில்லை... இருட்டு... அலறல்கள் புறப்பட்டன இவனிடமிருந்து. "அம்மா... அம்மா..."

தட்டுத் தடுமாறினான். அம்மாதான் ஓடி வந்தாள். முகம் முழுக்கத் திராவகம் வீசப்பட்டு அலறியபடி கிடக்கிற மகனைப் பார்த்தால் எந்தத் தாய்க்குப் பொறுக்கும்? அடுத்த நாள் புது மாப்பிள்ளையாய் மணமேடையில் உட்கார வேண்டியவன் இப்படி முகம் உருகுகிற நிலையில் இருக்கின்றானே!

கீழே விழுந்தவனைத் தூக்கிக் கொண்டு குடும்பமே ஆஸ்பத்திரிக்கு ஓடிற்று; சொந்தக்காரர்களாக ஏகக் கூட்டம். 'முகத்தில் ஊற்றப்பட்டது திராவகம்தான்' என்று ஆஸ்பத்திரியில் சொல்லி விட்டார்கள். உடம்பின் பல பகுதிகள் உருகின நிலையில் இருக்க... அங்கங்கே ரத்தம் வெளியேறிக் கொண்டிருக்க — சீரியஸான நிலையில் — பிராணவாயு செலுத்தினார்கள். எல்லோரும் கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கல்யாணமாகவிருந்த பெண்ணும் வந்து கதறிக் கொண்டிருந்தாள். சுயநினைவின்றிக் கிடந்தான் அவன்.

(திராவகம் ஊற்றியவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. யார் மீது சந்தேகப்பட்டாலும் மிரட்டல் வர, பயந்து போனது இவனது குடும்பம். கடைசியில் முகம் சிதைந்து

* பெண் பெயர் மட்டும் மாற்றப்பட்டிருக்கிறது

போன மகன் மூலமாக' ஊற்றினவனை அடையாளம் தெரியவில்லை' என்று போலீஸிற்கு 'ஸ்டேட்மெண்ட்' கொடுக்கத்தான் முடிந்தது அவனது குடும்பத்தாரால்.)

நாட்களாகி விட்டன. உணர்வு திரும்பி விட்டது. கண்ணைத் திறக்கப் பார்த்தால் முடியவே இல்லை. பயம் வயிற்றுக்குள் அடர்ந்து போனது; 'கண் போய் விட்டதா? இனி நான் பார்க்கவே முடியாதா?' — அழுகை பெருக ஆரம்பித்து விட்டது இவனுக்கு. மெல்லக் கைகளால் முகத்தைத் தடவிப் பார்க்கின்றான். சொரசொரவென்றிருக்கிறது. வழுவழுப்பாய் இருந்த முகம் எங்கே? இது எங்கே? உருகின நிலையிலான தோலுடன் முகம் தட்டுப்பட, குலைந்து போகிறான். வாய் வேறு கோணலாகிப் போய் விட்டது. ஏன் இப்படி மாறிப் போய் விட்டேன்? — திரும்பவும் அழுகை. அம்மா தான் டாக்டரிடம் 'பையன் முகம் இப்படி ஆகிப் போச்சே, டாக்டர், ஏதாச்சும் வழி பண்ணக் கூடாதா?' அரற்றினபடி கேட்கிறாள். காதில் விழுகிறது.

மிகுந்த யோசனைகளுக்குப் பிறகு பிளாஸ்டிக் சர்ஜரியின் மூலம் — தொடைச் சதையை எடுத்து வாயோரம் பொருத்தி வாயைச் சற்று நேராக்குகிறார்கள். இரண்டு வருஷங்கள் ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்குமாக அலைகிறான். எப்படியாவது கண் கிடைத்து விடும் என்ற நப்பாசையில் ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரியாக ஏறி அலைந்ததெல்லாம் வீணாகிப் போய் விட்டது. டாக்டர்கள் முடிவாகச் சொல்லி விடுகின்றனர். பார்வைக்கான நரம்புகள் கூட உருகிப் போய்விட்டன. இனிமேல் கண்ணைப் பொருத்துவது முடியாத காரியம்.''

* உதயசூரியன்



டாக்டர்கள் கைவிரித்ததும் சோர்ந்து போனான், வீட்டிலேயே கிடந்தான். பழகின வீடு; பழகின மனுஷர்கள்; யாரையும் பார்க்க முடியவில்லை. எங்கும் இருட்டு. இருட்டு லேசில் பழக்கப்படவில்லை. இருட்டில் தனியாய்க்கிடக்கிற சோகத்துடன் அழுது கொண்டிருந்தான். சொந்த வீட்டிற்குள் சுதந்திரமாய்ப் புழங்கின வீட்டிற்குள்; தட்டுத் தடுமாறி நடக்க வேண்டிய துரதிர்ஷ்டத்தை எண்ணி மனம் நொந்து போய் அழுதான்; குமைந்து குமைந்து பல நாட்கள் தூக்கம் வராமல் போனது. தூக்கத்தை ஓரளவுக்கு வரவழைத்தவை விட்டார் அவ்வப்போது கொடுத்த தூக்க மாத்திரைகள்தான்.

நாலு ஆண்டுகள் ஓடிவிட்டன. எந்த மனத்தின் குரூரமோ பாழ்படுத்திப் போன முகம் இன்றும் அப்படியே பலவித சிரமவுடன் இருக்கின்றது. மதுரை ரயில்வே ஸ்டேஷன் நேர் எதிரில் புகழ்பெற்ற மங்கம்மாள் சத்திரம் இருக்கிறதில்லையா? அதில் தான் 'பிளாக் — 1' இல் பார்வையற்றோருக்கான டெலிபோன் 'பூத்'தில் உட்கார்ந்திருக்கின்றார் உதயசூரியன்.

நெற்றியிலிருந்து தாடை, கழுத்து வரை தழும்புகள்தான். உதடு விரிவடைந்து போயிருக்கின்றது. மூக்கு குழிந்து போய் — கண்ணாடி மாட்டியிருக்கின்றார். நாம் தொடர்பு கொண்டதுமே சங்கோஜப் படுகிறார்.

''பழசையெல்லாம் கிண்ட வேண்டாமே... பழசைக் கிண்டினா நான் என்னமோ மாதிரி ஆயிடுவேன்...'' என்கிறார் சுய இரக்கத்துடன்.

''கொஞ்சம் ஓரமாக உட்கார்ந்து பேசலாமே?'' என்கிறோம். சிறிது தடுமாற்றத்துடன் எழுந்து வருகிறார். ஜன்னலின் ஓர மதிலில் உட்கார்கிறோம். சொல்கிறார்:

''பி. யு. சி. வரை படிச்சேன் நான். அதற்கு மேலே படிக்க வசதியில்லைங்க. ஒரு பிரஸ்லே புரூஃப் ரீடரா வேலை பார்த்தேன். அதற்குப் பிறகுதான் ஸ்டாண்டர்டு இண்டஸ்ட்ரீஸில் ரூ. 600 சம்பளத்திலே வேலை பார்த்தேன். அப்பத்தான் கல்யாணம் நிச்சயமாச்சு. கல்யாண தேதி 82 ஜூன் பதின்மூன்று. பன்னிரண்டாம் தேதி திராவகம் ஊற்றப்பட்டு — இந்த மாதிரி ஆகிப் போச்சு. வீட்டுக்கு நான் தான் மூத்த மகன் வேற. இப்போ பாருங்க.. எப்படி இருக்கேன்னு...?

குரல் மட்டும் லேசாகக் கமறுகிறது. முக பாவத்தைச் சுலபமாகக் கண்டுபிடிக்க முடியவில்லை.

''அந்தப் பொண்ணு என்னைப் பார்க்க போன வருஷம் வரை வந்துட்டிருந்துச்சு. கண் பார்வை சுத்தமாக் கிடைக்காதுன்னு தெரிஞ்சவுடனேயே பார்க்க வர்றதை நிறுத்திடுச்சு... ரொம்ப வருத்தமாப் போச்சு... சரி... இவன் இப்படி ஆயிட்டானேன்னு வர்றதை நிறுத்திட்டாங்க போலிருக்கு. இப்ப அவங்க எப்படி இருக்காங்கன்னு தெரியாதுங்க...'' என்கிறார்.

* உதயசூரியன் (முன்பு)



திரும்பவும் சிறிது சுமரல். ஆஸ்பத்திரிக்கு இரண்டு வருஷங்களாக அலைந்ததை, மிகுந்த சோகம் இழையோடினபடி சொன்னார். அப்போதுவீட்டிலேயே அடைந்துகிடக்கின்ற போது கால் கூசிப் போகுமாம். வெளியே வரவேநடுக்கமாகஇருந்தநிலையில்—உறவினர் ஒருவர் வந்து பார்வையற்றோர் பள்ளிக்கு அழைத்துச் சென்று அவர்களுடன் பழக வைத்திருக்கிறார். ''அவங்களோட' பழகினப்போ, எல்லோருமே, நான் திடீர்னு கண் இழந்தவன்கிறதுனாலே எவ்வளவு அனுதாபப்பட்டாங்க... தெரியு ங்களா? கிட்டே வந்து நெருக்கமாக ''பார்வை போனாலும் என்ன... நாம வாழணும்... நாங்களெல்லாம் இல்லையா?''ன்னு சொன்னாங்க. அவங்க பாட்டுக்கு ஆடுவாங்க... பாடுவாங்க... ஆனாலும் அவங்க மாதிரி என்னாலே இருக்க முடியவில்லை... பஸ் தூரத்திலே போனாலும் பக்கத்திலே வர்ற மாதிரி அரண்டு போயிடுவேன்... திடீர்னு அவங்க மாதிரி உடனே மாறிட முடியலீங்களே.,..''

முன்னால் விழுந்த சிகையை ஒதுக்கி விட்டுக் கொள்கிறார். 85 இல் சென்னையில் தேசிய பார்வையற்றோர் சம்மேளனத்திற்குப் போய் வந்த பிறகு அதன், மதுரைக் கிளைக்குப் பொருளாளராக இருக்கிறார்.

''எவ்வளவோ பேர் உதவிட்டாங்க... எனக்கு ரத்தம் கொடுத்த நண்பன், எனக்கு எவ்வளவோ உதவி பண்ணின ஆசிரியர் ஜெயமணி — இப்படிப் பல பேர் இருந்தாலும் இப்ப என் சிநேகிதங்கன்னு சொன்னா பார்வை இல்லாதவங்கதான். அவங்களுக்கு என் மேலே எவ்வளவு பிரியம்? கையைப் பிடிச்சுக்கிட்டே அவ்வளவு அன்பாப் பேசுவாங்க...''

வெள்ளையாய் விரிந்திருக்கின்ற உதட்டில் சற்றே புன்னகை. வீட்டை நினைக்கும் போது மிகவும் வருத்தம் இவருக்கு. நான்கு தம்பிகள். இரண்டு தங்கைகள். ஒரு தங்கைக்கு மட்டும் திருமணம் நடந்திருக்கிறது. தகப்பனார் ஒரு பல சரக்குக் கடையில் வேலை பார்க்கிறார். ''முந்தியெல்லாம் எங்க அப்பாவை வேலைக்கு நீங்க ஏன் போகணும்னு சொல்வேன். இப்ப சொல்ல முடியுங்களா?' இப்ப நான் உட்கார்ந்திருக்கிற ஃபோன் பூத்துலே வீட்டுக்கு என்ன கிடைக்கப் போகுதுங்க... சொல்லுங்க... என் கல்யாணத்துக்குன்னு வாங்கின தாலியைக்கூட வித்து,என் தங்கச்சியோட கம்மலைக் கூட வித்துத்தாங்க... வைத்தியம் பார்த்தோம். கடைசி வரை கண் தெரியாமப் போச்சுங்களே...''

''சரி... உங்க மேலே 'ஆஸிட்' ஊத்தின ஆள் பத்தி ரிப்போர்ட் கொடுத்திருக்கலாம்லே?''

பிரதமருக்குப் புரியவில்லையே!

ஆந்திராவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட அண்மையில் பாரத பிரதமர் வந்திருந்தார். ஹைதராபாத் விமான நிலையத்தில் என்.டி.ஆர். நிருபர்களிடம் தெலுங்கில் பேசத் தொடங்கினார். அருகிலிருந்த மத்திய மந்திரி சிவசங்கர் கோபமாக, ''இப்படித்தெலுங்கில் பேசினால், பிரதமருக்கு எப்படிப் புரியும்?'' என்று கேட்க, உடனே என்.டி.ஆர். ''நீங்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்லுங்களேன்'' என முகத்தில் அடித்தாற் போல் கூறினார்.

ஒரு பிரதமருக்குப் புரியவில்லை என்பதால், பிரதமருக்கு ஜால்ரா போடும் மந்திரிக்கு இவ்வளவு கோபம் வருகிறதே? டீ.வி.யிலும், வானொலியிலும் இந்தி ஒலிபரப்பைக் கேட்டுப் புரியாமல் திகைத்துக் கொண்டிருக்கும் கோடிக்கணக்கான தென்னாட்டு மக்களுக்கு எவ்வளவு கோபம் வரும்?

— வெள்ளகால் இரா. கந்தையா





என்றதும் பதறிப் போகிறார்.

''என் மேலே ஊத்தினது நைட்ரிக் ஆஸிட்னு சொன்னாங்க. ஊத்தினவங்கன்னு யாரையும் நான் சொல்லலீங்க. ஆண்டவன் தண்டனை கொடுப்பாருங்க...''

''படிச்ச நீங்களே இப்படிச் சொல்றீங்களே...? ஒரு குற்றவாளியைச் சட்டத்திலிருந்து தப்ப விடலாமா?''

இல்லே... இப்ப நான் ஏதாவது சொன்னேன்னு வைச்சுக்குங்க... யாரும் வந்து என்னையோ, என் குடும்பத்தையோ மிரட்டினாங்கன்னா... நான் என்ன செய்ய முடியும்ங்க...?'' —குரல் ஒரு மாதிரியான தினுசில் இருக்க — சொல்கிறார். அவரது பழைய போட்டோ ஒன்றைக் காட்டுகிறார். நான்கு பேர் இருக்கிறார்கள் போட்டோவில். ''இதிலே நான் எங்கே சார் இருக்கேன். கண்டுபிடிங்க பார்க்கலாம்... விளையாட்டு மாதிரி....'' என்கிறார். மாறி மாறிக் குழம்பி நாம் ஒருவரைக் காட்ட, ''இல்லே சார்... உங்களாலே கூட என்னைக் கண்டுபிடிக்க முடியலையா...?'' என்று பெருமூச்சுடன் கேட்டுவிட்டுப் பிறகு, அவராகவே அடையாளம் சொன்னபோது — வருத்தப்பட்டோம்.

''இப்படியே இருந்துற முடியுமா, சார்? இப்பவே 28 வயசு ஆயிடுச்சு. இனிமே கல்யாணத்தைப் பத்தியெல்லாம் நான் நினைக்கலே. இந்த பிளெண்ட் பிரண்ட்ஸைப் பாருங்க... எவ்வளவு ஃப்ரீயா இருக்காங்கன்னு. அவங்களோட சேர்ந்து தொழில் ஆரம்பிக்கலாம்னு பார்த்தா அதுக்கும் வழியில்லே. ஒரு பதினைஞ்சாயிரம் ரூபா லோன் கிடைக்குதுன்னு வைச்சுக்குங்க... நாங்க பிளெண்ட்ஸ் நாலு பேர் சேர்ந்து தொழில் ஆரம்பிப்போம். வாழ்க்கை அதிலே ஓடிடும் சார்...'' என்கிறார் நம்பிக்கையுடன்.

— கிளம்புகிற போது கேட்கிறோம்.

''கடைசியாய் நீங்க பார்த்த காட்சி அன்னைக்கு ஆஸிட் ஊத்தப்படுறதுக்கு முற்பட்ட காலை நேரந்தானா?''

''ஆமா... சார்... தூக்கக் கலக்கத்தோடு அரைகுறை இருட்டிலே அன்னைக்குப் பார்த்ததுதான். அதற்குப் பிறகு பார்வையே இல்லாமலேயேப் போயிடுச்சு. ஏதோ ஆண்டவன் போட்ட பிச்சை சார்... அதனாலே தான் இன்னும் உசிரோட இருந்துக்கிட்டிருக்கேன்.'' சொல்கிறபோதே குரல் தழுதழுத்துப் போய்விடுகிறது. கறுப்புக் கண்ணாடியை/ கழற்றிக் காட்டுகிறார். கண்தானா அது இமையெல்லாம் போய், ரப்பைகூட எதுவுமில்லாமல் விழியிருந்த இடமெல்லாம் மூடிப் போய் நடுவில் சிறு புண் மாதிரி கசிவுடன் இருக்கிறது; சிறு ஓட்டை மட்டும் தான். அதிலும் லேசான கசிவைப் பார்க்கச் சங்கடமாயிருக்கிறது.

பார்வையற்ற அழுகை எவ்வளவு கொடூரமாய் ஏதோ துருப்பிடித்த ஆணியால் உடம்பில் கிறுக்குகிற மாதிரி இருக்கிறது?

கிளம்புகிறோம், கைகளைப் பற்றிக் கொள்கிறார். கைகளில்தான் சிறு புழு மாதிரி என்ன ஒரு தவிப்பு? நான்கு வருஷங்களுக்கு முன் கைகளைப் பற்றிக் கொள்வதற்கும், இப்போது பற்றுவதற்கும் இருக்கிற வித்தியாசம் வெயில் மாதிரி சுடுகிறது.

— ஜூனி

படங்கள்: பி.எஸ். குமார்

நிஜம் ஒரு நாள் ஜொலிக்கும்!

இலையுதிர்காலத்தின்
சருகுகளைப் போலத்தானே
இந்த மனிதர்கள்
இதயங்களை
மிதிக்கிறார்கள்.....

அட்சயப் பாத்திரங்களைச்
செல்வனுக்கு
பிட்சைப் பாத்திரமல்லவா
பரிசளிக்கப்படுகிறது....

இங்கு
இல்லாதவர்களின்
உழைப்பு
உள்ளவர்களின்
மூலதனம்....

அரசியல் வானில்
உதித்த
நட்சத்திரங்கள்
குடிசைகளை ஏமாற்றிவிட்டு
மாளிகைக்குள்தான்
மயக்கமாய்க் கிடக்கின்றன....

எமது
'ஆட்சித் தலை'கள்
சிலரின்
அந்தப்புர
ஆணைகளுக்கு
மட்டும்தான்
தலை அசைக்கின்றன.

இன்று —
இதயங்கள் விழிக்கட்டும் — எம்
கேள்விகள் விண்ணைக் கிழிக்கட்டும்
கிழக்குகள் வெளுக்கட்டும் — புதிய
விளக்குகள் எரியட்டும்

நிஜமொருநாள் ஜொலிக்கும்!

அன்று
நாங்கள்
தீரிலும் நெருப்பாய் எரிவோம்!
வாழ்க்கையை ஜெயிப்போம்!

— தேனூர் மா. இரவிச்சந்திரன்



இன்னுமொரு தகுதி



கண்விழித்துக்
கலித்தொகையும்
குறுந்தொகையும்
நான் படித்துப்
புலவரானேன்.
வீதிக்கு வந்தபின்தான்
தெரிந்தது
இங்கே —
வேலை கிடைக்க
பெருந்தொகையும்
வேண்டுமென்று!

— கடுவை கோபால்சாமி, இடையூர்

தவழவிடுங்கள்!



ஓ.... ... ...
அறிவியல் புதுமைகளே!!

மண்ணில் நாங்கள்
மூலை விட்டு
மழலைப் பூக்களாய்
தவழ நினைத்தபோது —
கள்ளத்தனத்தில்
கருவாகிப் போனதால்
கருவிகளுடன் போராடி
ஒரு உரிமைப் போராட்டம்
நடத்துவதற்குள்
மௌனமாகவே மடிகின்றோம்

ஓ.... அறிவியல் புதுமைகளே
எங்களையும் கொஞ்சம்
பூமியில் தவழ விடுங்கள்

— இ. அந்துவான், கவித்தலம்

சூரியத் தலை
காணப்போ
அவசரத்தி
பூமித் தலை
நிலாக் கண்
முன்நின்று
பவுடர் பூசி
அப்போது
சிதறி விழு
துகள்களோ
நட்சத்திரங்
— ஸ்ரீ



பொ
பெரு
''நாட
நான்

அமுதபணம்!

...க்காக
...வல்லாதிகளுக்கு
... அமுத
...தை
...வில்
... செய்திருந்தால்,
...தானே

...ன.
...ப்பேன்!

...ர். அரிகோபி, குடியாத்தம்





வேறுபாடு

அன்று:

சுதந்திரம்
எங்களது பிறப்புரிமை

இன்று:

பிறப்புரிமையே
எங்களது சுதந்திரம்....

— பவல்ராஜ், அரிமளம்

...ண்டான்,

...முருகதாசன்

சந்தேகம்





மகாத்மா..!

உனது பிறந்த நாளுக்கு
விடுமுறை வருவதால் மட்டுமே
நாங்கள் உன்னை
நினைவுபடுத்திக் கொள்கிறோம்!

நீ
போட்ட சமத்துவப் பாதையில்
இன்று, எங்கள்
'சாதிக்கொரு மந்திரி'கள்
நடக்கிறார்கள்

உன்னுடைய
அரிய, ஆழ்ந்த கருத்துக்களை
ஆராய, அலச — ஏன்
அறிந்து கொள்ள ஆளில்லை!

உன்னைப் பற்றிப் பேச
நீ
'சிலுக்கு சுமிதா'வாய்
மறுபிறவி எடுக்கவேண்டும்!
உனது முழு உரைகள்
எல்லாமே 'முருங்கைக்காய்'
பற்றி இருக்கவேண்டும்
இதெல்லாம் முடியாது என்றாலும்
பெண்ணாய் பிறந்து
கட்சிக்கு நீ
'கொ.ப.செ.'வாய் ஆகவேண்டும்

— மு. தொல்காப்பியன்,
பாலப்பாடி



நானே பெரியவன்

...ர்தல்
...த்துக் கொண்டது:

... உரிமையை
...கொடுக்கிறேன்

ஞாபகம் இருக்கட்டும்
நானே பெரியவன்!"

இடைத் தேர்தல்
இகழ்ந்து கூறியது:

"உன் காலத்திய
வாக்குறுதிகளை
என் காலம்
வரும்போதுதான்

நிறைவேற்றுகிறார்கள்!
அதனால்,
நினைவிருக்கட்டும்
நானே பெரியவன்!"

— சௌந்தரன்

சருக்கம் — 22

பாக்களைத் தாலாட்டும் பாண்டியன்!

இது ஒரு சிவனடியார் பேசுகிற பேச்சா?



ஆடலரசி அரண்டு போனாள். மெல்ல வெளியில் சென்று, சுற்றும் முற்றும் கவனிக்கிறாள்.

ஒருவரையும் காணோம்; யாரோ கோயில் சம்பந்தப்பட்டவர்கள் வந்து நிற்கிறார்கள். அவர்களிடம், ''காவலர்கள் எங்கே?'' என்று சினந்தாள் ஜோதி.

''வெளியில் காவல் நிற்கிறார்கள்.''

''யாருக்காக? இங்கே அவர்களை வரச் சொல்லுங்கள். அப்படியே ஏதேனும் பழச்சாறு இருந்தால் கொண்டு வரச் சொல்லுங்கள். அவசரமாகவும் சுறுசுறுவென்றும் நிகழ வேண்டும்.''

அவர்கள் உத்தரவை ஏற்றுச் சென்றார்கள்.

ஜோதி உள்ளே நுழைகிறாள்.

சிவஞான முனிவர் ஓர் ஆசனத்தில் அமர்ந்து சூழ்நிலைகளில் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தார்.

''வீண் சிரமம் ஏன் ஜோதி?''

''அடியார்களுக்குத் தொண்டு செய்வது புண்ணியமல்லவா? மேலும் என்னை முக்கனிக் கற்கண்டோடு வருணித்த முனிபுங்கவராயிற்றே!''

''அழகிய ஓவியப் பாவை என்றால் எந்த அடியவர்களுக்கும் தமிழ், காவிரியாய்ப் பாயும்!''

''அப்படியா?''

ஜோதி, வல்லரசியை நோக்குகிறாள். அந்த நோக்கலில், 'அமைதியாக — அதே நேரத்தில் கவனமாக இரு' என்கிற சமிக்ஞை இருந்தது.

''சுவாமிகள் என்ன விஷயமாக இங்கு வந்திருப்பது?''

''இந்தப் பெண்ணைக் கொஞ்சம் வெளியே செல்லச் சொன்னால் சிலாக்கியமாக இருக்கும்.''

ஐயய்யோ! இது என்ன தரும சங்கடம்! இவளை வெளியேற்றி விட்டு...

அப்போது...

ஜோதி கொஞ்சமும் எதிர்பார்க்காத அந்தத் துணை அங்கு வர நேர்ந்தது.

ஒரு குவளையில் பழச்சாறு கொண்டு வந்தவன் கபாலீச்சுரன்.

இவர் எப்படி இங்கு வந்தார்?

தலைநகரில் சேக்கிழாரைக் கவனிப்பதை விட்டு என்னைப் பின் தொடர்ந்து இருக்கிறாரே!

கபாலீச்சுரன், கூர்மையாக ஜோதியைப் பார்த்ததன் மூலம், 'பயப்படாமல் இரு' என்

மன்னன் மாறவர்மன் சிவல்லபனைப் பற்றிப் பேசவும்.''

ஜோதிக்குப் புரிகிறது. வந்திருக்கும் முனிவர் பாண்டிய மன்னனாகவே இருக்கலாமோ?'

''பாண்டிய மன்னன் நலமா?''

''உன்னை நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கிறார்! நீ பாண்டிய நாட்டுக்குத் திரும்பி ராஜ நர்த்தகி பதவி ஏற்றுக் கொள்ள மாட்டாயா என்று கவலையோ கவலை!''

''நீங்கள் முனிவரா? இந்த விஷயங்களுக்குத் தூது செல்லும் பாணர் கூட்டத்தவரா?''

''நான் சகலமும்! எங்கே என்னை யார் எந்த ரூபத்தில் நினைக்கிறார்களோ அங்கே நான் அந்த வடிவம் தாங்கிக் காட்சி தருவேன்!''

''இப்போது சிவனடியார் ரூபம்!''

மாண்புமிகு முதலமைச்சர்

கோவி. மணிசேகரன்

கிற தைரியத்தை ஊட்டினான்.

''யாரிவன்?''

''என் காதலர்!''

''இந்த மண்டையோடுதானா காதலனாகக் கிடைத்தான்? நிரம்பவும் துர்ப்பாக்கியசாலி பெண்ணே!''

கபாலீச்சுரன் ஒன்றும் கண்டு கொள்ளாமல், பழச்சாற்றுக் குவளையை வைத்துவிட்டு வல்லரசியை அழைத்துக் கொண்டு வெளியேறினான்.

''பார்த்தீர்களா அடியாரே! எனக்கு, குறிப்பறிந்து என் எண்ணத்தை நிறைவேற்றுகிற ஆள் தேவை! அப்படியானவனைக் காதலித்தால்தான் சந்தேகம் கொள்ள மாட்டான். நான் பிரபலமான நாட்டியக்காரி! என் மீது பலர் பலவிதமான காமக் குற்றச்சாட்டுகளைக் கூறலாம். அவற்றைச் சகித்துக் கொள்ள வேண்டாமா?''

''உண்மை! உண்மை! நானும் கூடக் கேள்விப்பட்டேன். நீ சேக்கிழாரைக் காதலிப்பதாக!''

''சேக்கிழார் என்னைக் காதலிப்பதாகக் கேள்விப்படவில்லையே!''

''இல்லை. சேக்கிழாரை நீ கெடுக்க முயல்வதாக மற்றவர் நினைப்பதால், பாரத்தை உன் மீது ஏற்றிப் பேசுகிறார்கள்!''

''முனிவரே! நீங்கள் வந்தது இப்படி என் காதல் விவகாரத்தை அலசுவதற்காகத்தானா?''

''ஒருவிதத்தில்! மறுவிதத்தில் பாண்டிய

''ஜோதி! நான் யார் என்பதைப் பிறகு அறிவிக்கிறேன். நீ பாண்டிய நாடு திரும்புவதாக உத்தேசமில்லையா?''

''சமயம் வருகிற போது, மதுரை மீனாட்சி கோயிலில், மாண்புமிகு முதலமைச்சர் பாடப் போகும் திருத்தொண்டர் புராணத்தை எனது ஆட்டத்தால் அரங்கேற்றுவேன்!''

''இப்போது தெரிகிறதா பாண்டிய மன்னா, ஜோதி சேக்கிழாரை ஏன் காதலிக்கிறாள் என்று? அவள் காதலிப்பது என்னை; கசிந்துருகுவது சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணத்துக்காக!''

தன்னைப் பாண்டிய மன்னா என்று விளித்துக் கொண்டே அறையினுள் மீண்டும் பிரவேசித்த கபாலீச்சுரனைக் கூர்ந்து கவனிக்கிறான் பாண்டிய மன்னன் சிவல்லபன்.

''நீ உண்மையில் கபாலிகன்தானா?''

''நீங்கள் சிவனடியார் கோலத்தில் இருக்கிற மன்னன், நான் கபாலீச்சுரக் கோலத்திலிருக்கிற ஒற்றன். ஏதோ ஜோதியின் நடனத்தின்பால் ஆசைப்பட்டுப் பார்க்க வந்தீர்கள், விட்டு வைத்தேன். ஜோதியையே பார்க்க விழைந்தீர்கள். விட்டு வைத்தேன்! நாகரிகமற்ற போக்கில் நடப்பதை விட்டு வைக்கலாமா?''

''நான் அத்து மீறிப் போய்விடவில்லையே?''

''இன்னும் கொஞ்சம் நேரம் போனால் போய்விடுவீர்கள்! அது எனக்கும் களங்கம்;



"அந்த 'ஏரியாவிலே' தண்ணி மண்ணோட கலங்கலா வருதாம். நல்லவேளை, எங்க 'ஏரியாவிலே' அந்த மாதிரி தண்ணிக் கஷ்டமே இல்லே."

"அட, அப்படியா!"

"ஆமா, இங்கேதான் தண்ணியே வரதில்லியே?"

— கணேஷ் ராஜாமணி

சேக்கிழாருக்கும் களங்கம்! எனவேதான், கால தாமதம் செய்யாமல் உள்ளே நுழைந்து விட்டேன்!"

சிவனடியார் கோலத்திலிருந்த மாறவர்மன் சீவல்லபன், ஜோதியைப் பரிதாபமாகக் கவனிக்கிறான். "ஜோதி! போயும் போயும் உன் வாழ்க்கை இப்படியா அமைவது?" என்றான்.

"எப்படி அமைந்துவிட்டதாகக் கண்ணீர் வடிக்கிறீர்கள்?"

"ஒற்றனையா காதலித்தாய்?"

"நான்தான் சொன்னேனே! எனது பணி சிறக்க யார் தேவையோ அவரைக் காதலித்தேன்! பாண்டிய மன்னா! நினைவிருக்கிறதா? என் கதை எங்கே தொடங்கும் என்பது எனக்கே தெரியாது என்று புறப்படுகிற போதே சொன்னேன். இப்போது நீங்கள் புறப்படலாம். சோழ வீரர்கள் செவிகளுக்கு எட்டுமுன்பு, இரவோடு இரவாகப் புறப்பட்டு விடுங்கள்!"

அறையிலிருந்த தீப்பந்தங்கள் பாண்டிய மன்னன் மனம் போல அலைமோதின.

"வாருங்கள்! நான் வேண்டுமானால் துணையாக இருந்து எல்லை வரை கொண்டு சென்று விட்டு வருகிறேன்!" என்றான் கபாலீச்சுரன்.

"எனக்குப் போக வழி தெரியும்! நீ யார் என்னைக் கொண்டு போய் விடுவதற்கு?"

"நானா? நானா? நானா?"

கபாலீச்சுரன், தனது கோலத்தைக் கலைக்கிறான்.

வல்லரசி நடுநடுங்கி, "சோழச் சக்கரவர்த்தி!" என்று தடுமாற்றத்துடன் கூறி தொலைவில்சென்று நின்று கரம்கூப்புகிறாள்.

"இப்போது தெரிகிறதா பாண்டியனே!"

"சோழ மாமன்னரா...!"

பாண்டியன் மாறவர்மன் சீவல்லபன் பதறிப் போனான்.

"இனியும் ஜோதியையும் சேக்கிழாரையும் முடிச்சுப் போட்டு வேடிக்கை பேச வேண்டாம்! அவளுடைய கதை மீனிலிருந்து ஆரம்பமாக விரும்பவில்லை. என்வேதான் புலியிடமிருந்து தொடங்கி இருக்கிறாள்! அவளது புனிதமான நோக்கம், எப்படியாவது என்னைக் காதலித்துத் தூண்டியாவது, திருத்தொண்டர் புராணம் சேக்கிழாரிடமிருந்து உதயம் காண வேண்டும் என்பது! அது பூர்த்தியாவதற்குள் ஒரு சோதனை ஏற்பட்டது. அது, என்னைப் பழிவாங்காமல், சேக்கிழாரைப் பழிவாங்கிவிட்டது. இந்த நேரத்தில் நீங்கள் ஜோதியை அபகரிக்க வரலாமா?"

"ஜோதியின் ஒப்பனை அறைக்குள் யாரோ அந்நியன் புகுந்து விட்டானாமே, சிவனடியார் கோலத்தில்? அவனைச் சிறைப் பிடிக்க வேண்டியதுதானே?" என்று சினம் கொந்தளிக்க உள்ளே நுழைந்தார், கவிராட்சஸர் ஒட்டக்கூத்தர்.

ஒட்டக்கூத்தரைக் கண்டதும், கடுசொல்லோடு உள்ளே அவர் நுழைந்தாலும் தமிழ் வளர்த்த மரபினனான பாண்டியன், தலை தாழ்த்தி வணங்குகிறான். "தமிழே! இராமாயணத்தில் உத்தர காண்டம் கண்ட உத்தமரே! சோழர் கையால் எனக்கு விலங்கிடுவதைவிட, செந்தமிழின் செம்மாப்பு நிறைந்த தங்கள் திருக்கரத்தால் எனக்கு விலங்கு பூட்டுங்கள்! இதுவே நீங்கள் எனக்குப் பாடிய 'உலா' மாதிரி!

சோழ மாமன்னன் கண்கள் கலங்கிவிட்டன.

தமிழ் என்ற சொல்லை எவர் உச்சரித்தாலும் தவழ்ந்து போவானே, குழந்தை போல குலோத்துங்கன்! இல்லையென்றால் அவனைக் குழந்தையாக்கிப் பிள்ளைத் தமிழ் பாடியிருப்பாரா ஒட்டக்கூத்தர்?

தமிழ் வளர்த்த மரபினனால் மட்டுமே இப்படித் தமிழிடம் அடிமைப்பட முடியும் என்பதனையுணர்ந்த குலோத்துங்கன், "பாண்டிய மன்னா! உங்களை நான் இதற்காக மட்டும் மன்னிக்கவில்லை. எனது முதலமைச்சர் உடல் நலமில்லாது படுத்திருக்கிற போது, ரேவதி நட்சத்திரக் கட்டளை கேட்டு, நீங்களும் அங்கயற்கண்ணி ஆலயத்தில் வேள்வி நடத்த உத்தரவிட்டுவிட்டு இங்கே ஜோதியின் நடனம் காண வந்தீர்களே, அதற்காகவும் மன்னிக்கிறேன்! காலையில் ஏதோ ரணசஞ்சீவி மூலிகையைக் கொண்டு வந்து வைத்தீஸ்வரன் பாதங்களில் வைத்து வழிபட்டு, எனது அரண்மனை மருத்துவரிடம் உடனடியாகச் சேர்க்குமாறு அனுப்பி வைத்திருக்கிறீர்களே, அதற்காகவும் மன்னிக்கிறேன்! எங்களுடன் நம்பிக்கையோடு புறப்படலாம்! வந்து சேக்கிழாரையும் கண்டு உடல் நலம்விசாரித்து இருதினங்கள் தங்கித்திரும்பலாம்!" என்று கூறியபோது ஜோதியின் கண்கள் கலங்கிவிட்டன; ஒட்டக்கூத்தர் வாயடைத்துப் போனார்.

சோழ மாமன்னரின் பெருந்தன்மையைக்

கண்டு, கரம் கூப்பிச் சிலையாகிப் போனான் கயற்கொடியோன்.

ஜோதியின் தீம்பொழி மகரயாழ் நாவு அசைந்தது: "சோழர் பெருமானே! முதலமைச்சரைக் கவனியாது இங்கே வந்திருப்பது என்ன நியாயம்?"

"அங்கே என்னிலும் பெரிய காவல் இருக்கிறது."

இப்போது ஒட்டக்கூத்தர் நாவில் ஓடிய சொற்கள்: "யாரவர்?"

"சேக்கிழார் உடன்பிறப்பு; ரத்தத்தின் ரத்தம்; பாலறுவாயர்!"

"ஓ... வீரத்தில் சிறந்த வீரப்பனா? நல்ல காவல்! திருப்பணி அமைச்சராயிற்றே! பணியும் திருவாகவே இருக்கும்."

ஒட்டக்கூத்தரின் இந்த விளக்கம் ஜோதிக்கும் நிறைவைத் தந்திருக்க வேண்டும். அவள் முறுவலித்து முகமலர்ந்தாள்.

சோழநாட்டு அரண்மனையை அடைந்த பாண்டிய மன்னன் மாறவர்மன் சீவல்லபன், சோழப் பேரரசின் மாண்புமிகு முதலமைச்சரைப் போய்ப் பார்த்து உடல் நலம் விசாரிக்கலானான்.

சங்கத் தமிழே தம்மை வந்து நலம் விசாரித்தது போன்ற நிறைவு சேக்கிழாருக்கு.

சேக்கிழார் உடல் நலம் குறைந்தது கண்டு தமிழகமே தவத்தில் ஆழ்ந்து போன செய்திகளைக் கேட்டு மலைத்தே போனான் மாறவர்மன் சீவல்லபன்.

ஒரு முதலமைச்சருக்கு இத்தனை பெருமைகளா? மக்களிடம் அவர் பெற்ற செல்வாக்கு மலைபோலத் தெரிகிறது.

எத்தனையோ பேர் இறைவனை இறைஞ்சியனுப்பிய பிரசாதங்கள்! கோயில்கள் தோறும் யாகம் வளர்த்து அனுப்பிய பிரசாதங்கள்!

ஒட்டக்கூத்தரே, சேக்கிழாரான பாக்கிழாரின் சிறப்பு கண்டு அதிர்ந்து போனார் என்றால், பாக்களைத்தாலாட்டும்பாண்டியன் மலைத்ததில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமே இல்லை.

பாண்டிய மன்னன், தனது பாண்டிய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றிருந்த மாண்புமிகு முதலமைச்சர்களான மாணிக்க வாசகரையும் குலச்சிறையாரையும் எண்ணிப் பார்க்கிறான்.

ஒரு வார காலம் தங்கி இருந்த பாண்டிய மன்னன் மாறவர்மன் சீவல்லபனை, சகல சிறப்புக்களுடன் வழிகூட்டி வைத்தான் அநபாய குலோத்துங்கன் சோழமாமன்னன். உடனிருந்து ஒட்டக்கூத்தரும் ஜோதியும் வழிகூட்டி மகிழ்ந்தனர்.

சஞ்சீவி போல வந்து மதுரை நாகமலைப் பகுதியில் பாறைகளின் கீழ் படர்ந்திருந்த ரண சஞ்சீவி என்கிற மூலிகையைத் தமிழ் வாழக் கொடுத்து மகிழ்ந்த கப்பத்தை விட வேறு நல்ல கப்பம் என்ன இருக்கிறது என்று மகிழாதார் யார்?

தமிழின் காலைத் தமிழ்தான் அறியும்.

(தொடரும்)

ஆனால் இந்தக் கல்யாணி...?

பதினொரு மணி.

குரைத்துக் கொண்டிருந்த நாய் என்னைக் கண்டதும் உச்ச ஸ்தாயியில் முழங்கிவிட்டு ஓய்ந்தது.

''கல்யாணி... கல்யாணி...'' என்று கதவைத் தட்டினேன்.

''வந்துட்டீங்களா?'' கண்ணைக் கசக்கிக் கொண்டே கதவைத் திறந்தாள், அவள்.

அவளுக்கு நான் இப்போது ஆச்சரியம் தான்.

ஏனென்றால், காலையில் ஊருக்குப் புறப் படும் போது, ''நாளைக்குத்தான் வருவேன்'' என்று சொல்லி இருந்தேன்.

ஆனால், போன வேலை சீக்கிரமே முடிந் தது. கடைசி பஸ் பிடித்து வந்து சேர்ந்தேன்.

''சாப்பிட்டீங்களா?'' என் தோளில் ஆதர வாய்க் கை வைத்துக் கேட்டாள்.

ஆமாம். நான் ஊருக்குப் போய்விட்டு இப்படி நேரம் கெட்ட நேரத்தில் திரும்ப நேர்ந்தால், பஸ் மாறும் போது தஞ்சாவூரி லேயே ஏதாவது சிற்றுண்டி சாப்பிட்டு விடு வேன்.

ஆனால், இன்று —

''ஓட்டலுக்கெல்லாம் போக அவகாசம் இல்லை, கல்யாணி'' என்றேன்.

''உப்புமா கிளறித் தருகிறேன்'' என்று திரும்பினாள், அவள்.


தூக்கக் கலக்கத்துடன் அவளுக்குச் சிரமம் தர எனக்கு இஷ்டம் இல்லை.

''வேண்டாம். மெயின் ரோடில் கடை வைத் திருப்பார்கள். இட்டிலி சாப்பிட்டுவிட்டு வரு கிறேன்.''

வேட்டி, சட்டை மாற்றி, கைகால் கழுவிக் கொண்டு வெளியேறினேன்.

துரதிர்ஷ்டம்! எல்லாக் கடைகளையுமே மூடிவிட்டார்கள். பன், பழத்துக்குக் கூட வழி இல்லை.

''சாப்பிட்டுவிட்டேன்'' என்று கல்யாணி



''என்ன சார் கல்யாணத்துக்கு வந்துட்டு பரிசுப் பொருள் உள்ள பாக் கெட்டைப் பிரஸண்ட் பண்ணும வர்றீங்க?''

''இது என்னோட செருப்பு சார்! இப்படி அழகா பேக் பண்ணினாத்தானே வாசல்லே கழற்றி வைக்காம கூடவே எடுத்திண்டு போகலாம்!''

— எம். பூங்கோதை



யிடம் பொய் சொல்லிவிட்டுப் படுத்தேன். ஆனால், மனசு எழுந்து உட்கார்ந்து கொண்டது.

கல்யாணியின் மீது ஒரு சந்தேகம். அவளைச் சிரமப்படுத்தக் கூடாது என்பதற்காக நான்தான் பொய் சொன்னேன் என்றால், அதை அப்படியே நம்பிவிட்டாளே, கல்யாணி!

பெற்றவளாக இருந்தால்... 'அப்படி' சொன்னதேசாக்கென்றுவெறுமனே இருந்து விடுவாளா? அல்லது இருக்கத்தான் முடியுமா?

என்ன இருந்தாலும் தாய், தாய்தான்.

அப்போது பத்து வயதுப் பையன், நான்.

'சினிமா' என்றதும் இப்போதெல்லாம் என் பிள்ளைகளுக்கு ஐந்தும், பத்துமாக முடிச்சை அவிழ்க்கிறேனே, அந்தக் காலத்தில் அதெல்லாம் முடியாது.

அப்பாவிடம் 'மூன்றணா' வாங்குவதற்குள் அம்மாவிடம் மூன்று நாளைக்கு மூக்கால் அழ வேண்டும்.

ஆனால், அன்று அம்மாவிடம் காசு வாங்கிக் கொண்டு நண்பர்களுடன் சினிமாவுக்குப் போய் விட்டேன்.

'ஜெயசிம்ஹன்' என்பது அப்படத்தின் பெயர்.

இன்றைய ஆந்திர முதல்வர் ராமராவ் தான், அதில் கதாநாயகன். படம் முழுக்கக் கத்திச் சண்டை மயம்.

பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்தால், இங்கு அம்மாவுக்கும் அப்பாவுக்கும் 'கத்தல்' சண்டை. 'என்னைக் கேட்காமல் எப்படி அந்தக் கழுதையை சினிமாவுக்கு அனுப்பலாம்' என்று.

இசைகேடான அச்சூழ்நிலையில் சாப்பிட உட்கார்ந்தால் வேறு வினையே வேண்டாம். அதற்குப் பயந்து, 'வரும் வழியில் அக்கா வீட்டிலேயே சாப்பிட்டுவிட்டேன்' என்று சொல்லிவிட்டுப் படுக்கையில் சுருண்டு கொண்டேன்.

நள்ளிரவு. பன்னிரண்டு மணி இருக்கும்.

யாரோ என் வயிற்றைத் தடவினார்கள்.

திடுக்கிட்டு விழித்தால் —

அம்மா.

''ஏண்டா, பாலு. வயிறு சருகு மாதிரி ஒட்டி உலர்ந்து போய்க் கிடக்கிறது. அக்கா வீட்டிலே சாப்பிட்டேன் என்று பொய்தானே சொன்னாய்?'' என்று ஆதுரத்துடன் கேட்டாள்.

''ஆ... ஆமாம்'' தலையசைத்தேன், நான்.

''உன் கதை தெரிந்துதான் சாதத்துக்கு இன்னும் தண்ணீர் விடாமல் வைத்திருக்கிறேன். எழுந்து மூஞ்சி அலம்பிட்டு வா'' என்று என்னை எழுப்பிப் போய் வயிறு முட்டச் சோறு போட்டாள், அம்மா.

அதுவன்றோ பாசம். அவள் அல்லவோ பெண்.

ஆனால், இந்தக் கல்யாணி?

தாரம் என்பவள், தாய்க்கு நிகரானவள் என்பார்களே. அது... அந்த நியதி என் விஷயத்தில் பொய்யாகி விட்டதோ...?

மோட்டு வளையைப் பார்த்துப் பெருமூச்சு விட்டேன், நான்.

கல்யாணியின் வளையல் கரம் என் மார்பில் தவழ்ந்தது.

'ம்... இதில் ஒன்றும் குறைச்சல் இல்லே.'

அங்கீகரிக்கமுடியாதவெறுப்பில்மௌனமாக இருந்தேன், அவள் விடவில்லை.

''என்னங்க...'' என்று என்னை அணைத்துக் கொண்டாள்.

மறுகணம்.

அசுர வேகத்துடன் என்னை உதறிவிட்டு எழுந்தாள், அவள். ''நீங்கள் சாப்பிட்டதாக என்னிடம் பொய்தானே சொன்னீர்கள்!''

திகைத்தேன், நான். ''அதெப்படி உனக்குத் தெரியும்?''

''சாப்பிட்டிருந்தால் உங்கள் வயிற்றின் ஸ்பரிசம் இப்படி இருக்காது... என்ன முழிக்கிறீங்க. இருபதாண்டு வாழ்க்கையிலே உங்கள் உடம்பின் ஒவ்வொரு அணுவும் எனக்கு அத்துப்படி ஆயிடுச்சு. நீங்கள் வெளியிலிருந்து வந்தபோதே எனக்குச் சந்தேகம்தான். ஆனால், நீங்கள் மகா அழுத்தம். கேட்டால், சொல்ல மாட்டீங்க. அதனால் தான் வேண்டுமென்றே உங்களை அணைத்துப் புரிந்து கொண்டேன்.''

நாணம் பாதி, கரிசனம் பாதியாகச் சொன்ன கல்யாணி, ''ஒரு நிமிஷம்'' என்று தலைவனை சொல்லிவிட்டு ஓடினாள்.

அரிவாள் மனை எடுக்கும் சப்தம்.

வெங்காயம் உரிக்கும் நெடி.

இன்னும் சில விநாடிகளில் உப்புமா மணக்கும்!

1. இந்தி மொழி மட்டுமல்லாமல் எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் கற்பது நல்லதுதான். அதற்குத் தமிழர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதற்குச் சான்றாக, உலகெங்கும் சென்று அந்தந்த பகுதி மொழியைக் கற்று அந்தந்த மண்ணுக்காகத் தமிழர்கள் உழைப்பதைக் கூறலாம். சில மாதங்களை தற்காலிகமாகப் பிற மாநிலங்களில் தங்க நேரிட்டாலும், அந்தந்த மொழிகளை ஓரளவு கற்றுக் கொள்கின்றனர் நம் இளைஞர்கள்.

2. இந்தி கற்பதனால் வேலை வாய்ப்புகள் அதிகம் என்று பார்த்தோமானால் ஜெர்மன், பிரெஞ்சு, தெலுங்கு, கன்னடம் என்று எல்லா மொழிகளையும் கற்க வேண்டும். இது அவரவர் சொந்த விருப்பத்தைப் பொறுத்தது. எனவே, ஐந்து சதவிகிதம் பேர் வட இந்தியாவுக்கு வேலைக்குச் செல்கின்றனர் என்பதற்காக மீதி 95 சதவிகிதம் பேரும் இந்தி கற்க வேண்டுமென்பது அறிவுடைமையாகாது.

3. அன்னிய மொழியான ஆங்கிலத்தை ஏற்றுக் கொள்கிறோம். ஏன் இந்தியை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பது சிலரது வாதம். ஆங்கிலத்துக்கு இருக்கும் செல்வாக்கு, அறிவியல் வளமை, தொழில் நுட்பங்களை வெளியிடும் திறன் போன்றவை இந்திக்கு இருக்குமானால் ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தியை ஏற்றுக் கொள்ளலாம். அப்படியில்லாதபோது ஆங்கிலத்தை வெறுப்பதோ, ஒதுக்குவதோ முட்டாள்தனமாகும். மேலும் ஆங்கிலம் அந்நிய மொழியாக இருப்பதாலேயே இந்தியர் அனைவருக்கும் பொதுவாக மத்திய அரசின் ஆட்சி மொழியாகத் தகுதி பெறுகிறது. உயர்வு, தாழ்வு மனப்பான்மைகள் யாருக்கும் ஏற்பட வாய்ப்பில்லாது போகிறது.

4. பெரும்பான்மையோர் பேசும் மொழி என்பதால், இந்தியைத் தேசிய மொழி என்பவர்கள் பெரும்பான்மையினரின் மதமான இந்து மதத்தைத் தேசிய மதமாக ஏற்றுக் கொள்வார்களா? சொல்லப் போனால் ஒரு நிமிடத்தில் மதம் மாற முடியும். ஆனால் மொழி அப்படியல்லவே!

5. இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஒரு மொழி அவசியம் என்கின்றனர். பிறமொழிகளைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு பள்ளிக்குச் செல்பவர்களுக்கு மட்டுமே கிடைக்கும். பாதிக்கு மேல் எழுதப் படிக்கவே தெரியாதவர்களைக் கொண்ட நம் நாட்டில் ஒரு பொது மொழியைக் கொண்டு வருவது எங்ஙனம் சாத்தியமாகும்? எனவே ஒருமைப்பாடு மொழியால்தான் வரும் என்பது வெற்றுப் பிதற்றல். மாறாக தற்குறித்தனத்தைப் போக்க இந்திய அரசு பணத்தைச் செலவிட்டால் அது ஒருமைப்பாட்டுக்கு மிக உகந்ததாக இருக்கும்.

6. இந்தியை ஏற்றுக் கொள்ளாத பொழுதே தொலைக்காட்சியும், வானொலியும் இந்தி வெறி பிடித்து இயங்குகின்றன! மத்திய அரசுக் காரியாலயங்களில் ஹிந்தி வெகு வேகமாகக் கட்டாயமாக்கப்படுகிறது. காணததற்கு, மாதிரிப் பள்ளிகள் வேறு!

7. ஆக, நாம் எதிர்ப்பது இந்தியை அல்ல. இந்தி மட்டுமே உயர் அந்தஸ்து பெறுவதையும் அது மற்ற மொழிகள், பேசும் மக்கள் மீது மேலாதிக்கம் செலுத்தப் பார்ப்பதையும்தான். இது காலப் போக்கில் நிச்சயம் இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும்.

8. எனவே, மனித உரிமைகளுக்காக அனைத்துத் தமிழர்களும் ஓங்கிக் குரல் எழுப்ப வேண்டும். அறிஞர்கள் பலரை உள்ளடக்கிய குழுவை ஏற்படுத்தி, பிரதமரைச் சந்தித்து முறையிடுவது நல்லது. அஹிம்சையான முறையில் கெஞ்சும் நம்மைப் பிரதமர் நிராகரித்தால் இந்திய ஒருமைப்பாடு கானல் நீராகிப் போய் விடும்.

— சொ. சங்கரபாண்டி, சென்னை—36.


சர்வரின் கிண்டல்!

நண்பருடன் நட்சத்திர ஹோட்டலில் சாப்பிட்டு முடித்ததும் 'பில்' தொகை போக மீதி 75 பைசாவை மேஜையில் வைத்து விட்டுச் சென்றார் சர்வர். அது அவருக்கு டிப்ஸாக இருக்கட்டும் என்று நான் நண்பருடன் கிளம்பினேன். டிப்ஸ் குறைவாக இருப்பதை உணர்ந்த சர்வர், "சார்! மீதி சில்லறையை வைத்துவிட்டுப் போகிறீர்களே!" என்றார் கிண்டலாக. டிப்ஸ் வாங்குவதே சுயமரியாதைக்கு இழுக்கு. இதில் 75 பைசா என்றால் அவ்வளவு அலட்சியமா?

— வி. சௌரிராஜன், ஸ்ரீரங்கம்.

ஒருமைப்பாடு உடைத்தெறியப்பட வேண்டுமோ?

வாசகர் குரல்



பட்டுக்கோட்டை பிரபாகர்

என்னைக் காணவில்லை

6 "அமளி! குழப்பம்! பதற்றம்! மேடைக்கு ஓடினார்கள். குறுக்கே ஓடினார்கள். வாசலுக்கு ஓடினார்கள். "என்னாச்சு? என்னாச்சு?" என்று எதிரொலித்துக் கொண்டார்கள்.

"நகருங்க. காத்தை விடுங்க."

"அதோ... அதோ ஓடறான் சுட்டவன். பிடிங்க."

"வந்தவங்களிலே யாராச்சும் டாக்டர் இருக்கீங்களா?"

இருந்தார், கூட்ட வட்டத்தைப் பிளந்து கொண்டு வந்து மாயாவைப் பார்த்து, அவள் புஜத்தில் இருந்து அவசரமின்றி வெளியேறிக் கொண்டிருந்த ரத்தத்தைப் பார்த்து, பல்ஸ் பார்த்து, "பயப்பட வேணாம். மயக்கம்தான். குண்டு உள்ளே பாஞ்சிருக்கிற மாதிரி தெரியலை. புஜத்தை உரசிக்கிட்டுதான் போயிருக்கு. உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துட்டுப் போகணும்."

கைகளைப் பிசைந்து நின்ற நாகராஜன், "கணேசா, நம்ம காரை இங்கே எடுத்துட்டு வரச் சொல்லு, சீக்கிரம்" என்றார்.

தாமஸ் கட்டளைகள் வழங்கப்பட்ட ரொபாட் மாதிரி கச்சிதமாகப் பாய்ந்து, பைக்கில் தாவி ஏறின வேகத்திலேயே ஸ்டார்ட் செய்து, ஜிவ் என்று சந்து சந்தாய் தடதடத்து முக்கிய சாலையில் நெடுந்தூரம் வந்துவிட்டான்.

இங்கே அமைதியாக எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டே அமர்ந்திருந்த சுகுமார் மாயாவின் மேல் தோட்டா பாய்ந்ததும் பதறிப்போய் மேடைக்குத் தாவினவன் காரில் அவளை ஏற்ற உதவி செய்து, நாகராஜனின் அருகிலேயே அமர்ந்து கொண்டான்.

'தாமஸ்.... உன்னை....' என்று மனத்திற்குள் கோப வசனம் பேசிக் கொண்டான்.

ஆஸ்பத்திரியில் காயத்திற்கு மருந்து போட்டு, பாண்டேஜ் கட்டி, ஊசி போட்ட டாக்டர், "பயப்படறதுக்கு ஒண்ணும் இல்லை. ரொம்ப லேசான காயம்தான். ரெஸ்ட்ல இருந்தாப் போதும். நாளைக்கு இவங்க நார்மலாய்டுவாங்க. ஒரே வாரத்திலே காயம் ஆறிடும். இப்போ வெறும் மயக்கம்தான்" என்றார்.

வீட்டிற்கு வந்தபோது இன்ஸ்பெக்டர் ஒருவர் காத்திருந்தார்.

மாயாவை அறையில் படுக்கையில் கிடத்தி விட்டு நாகராஜனும், சுகுமாரும் அவரை அடைந்தார்கள்.

சம்பவத்தை விவரித்தார்கள்.

''ஐ சி. அப்போ அது உங்களுக்கு வைக்கப்பட்ட குறி! இல்லையா?'' என்றார் இன்ஸ்...

''நிச்சயமா சார். என்னைக் காப்பாத்தறதுக்காகக் குறுக்கே பாய்ஞ்சுதான் அவ காயம் பண்ணிக்கிட்டா.''

''திமர்னு கடைசி விநாடில யாரோ உங்களுக்குக் குறி வைக்கிறதைப் பார்த்துட்டு இப்படி செயல்பட்டிருக்காங்க. அதனால அவளை அவங்க தெளிவா பார்த்திருக்கணும். நான் நாளைக்கு மறுபடி வர்றேன். அவங்களை விசாரிக்கிறேன். தோட்டா கிடைச்சிடுச்சு. இதை ஒரு கேஸா ஃபைல் பண்ணிருக்கோம். நீங்கபுகார்செஞ்சமாதிரிஒருஸ்டேட்மெண்ட் தயார் செஞ்சி அனுப்பி வைக்கிறேன். கையெழுத்துப் போட்டனுப்புங்க.''

''சரி சார்.''

''உங்களைக் கொலை செய்ய முயற்சி செஞ்சிருக்கிற அந்த நபரை உங்களால யூகிக்க முடியுதா?''

நாகராஜன் யோசித்தார்...

''சந்தேகமா மனசில பட்டாலும் சொல்லுங்க சார், நான் விசாரிக்கிறேன்.''

''இன்னிக்கு மில்லிலே யூனியன் எலெக்ஷனுக்கு நிக்கற தசரதன்ங்கிற தொழிலாளியை நான் நிக்க வேணாம்னு கேட்டுக்கிட்டேன். அவன் மறுத்துட்டான். தவிர ஒரு உபகரணத்தை திருடினதா கண்டுபிடிக்கப் தாலே முறைப்படி சஸ்பென்ஷன் ஆர்டரைக் கொடுக்கச் சொல்லி உத்தரவு போட்டேன். ஒருவேளை அதிலே கோபமாகி......''

''இருக்கலாம். பேரென்ன சொன்னீங்க தசரதனா?'' என்று சின்ன டைரியில் குறித்துக் கொண்ட இன்ஸ்பெக்டர், ''அவன் அட்ரஸ் கிடைக்குமா?''

''மில்லிலே இருக்கும். இப்போ செகண்ட் ஷிப்ட் நடந்துக்கிட்டிருக்கும்.''

''நான் விசாரிச்சுடறேன், வேறே?''

''வேற ஒண்ணும் தோணலே சார்.''

இன்ஸ்பெக்டர் சுகுமாரைக் கொஞ்சம் விசாரித்துவிட்டுப் புறப்பட்டுப் போனதும்...

''மச்சான், உங்க அளவுக்கு நான் படிக்கலே. ஆனா என் சொல்லை ஏத்துக்குங்க. போலீஸ் அந்த நபரைக் கண்டு பிடிச்சு கைது பண்ற வரைக்கும் நீங்க பாதுகாப்பா இருக்கிறது நல்லது'' என்றான் சுகுமார்.

நாகராஜன் யோசனையாகத் தலையசைத்தார்.

''ரெண்டு மூணு நாளைக்கு வெளில எங்கேயும் போக வேணாம். வீட்லயே இருங்க. வாட்ச்மேன்கிட்டே ரொம்ப எச்சரிக்கையா இருக்கச் சொல்லுங்க. நான் வேணும்னா ரெண்டு நாள் இங்க தங்கவா?''

''இல்லே, வேணாம்.''

''இன்னிக்கு மட்டும் தங்கறேன். தங்கச்சி மயக்கம் தெளிஞ்சதும் ரெண்டு வார்த்தை பேசிட்டுப் போறேன். நீங்க போய்த் தூங்குங்க மச்சான். நான் இங்கே ஹால்லயே படுத்துக்கறேன்.''

''சரி'' என்று கீழே மாயாவைக் கிடத்தியிருந்த அறைக்குள் சென்று அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்து, ''லேசா, ஜுரம் அடிக்குது'' என்றார்.

''இறங்கிடும்: ஊசி போட்டிருக்கார். பன்னிரண்டு மணிக்கு இந்த மாத்திரையைத் தரச் சொன்னார். நான் ஞாபகமா கொடுக்கறேன். நீங்க போய்ப் படுங்க.''

நாகராஜன் அமைதியாய் வெளியேறி மாடிப் படிகளில் ஏறி தன் அறைக்குச் சென்றதும், மாயா படக் என்று எழுந்து அமர்ந்து கொண்டு, ''சுகுமார், கதவைச் சாத்திட்டு வா, கொஞ்சம் பேசணும்'' என்றாள்.

லேசான அதிர்ச்சியுடன், ''மாயா, உனக்கு மயக்கம் தெளிஞ்சிடுச்சா?''

''இன்ஸ்பெக்டர் உங்க ரெண்டு பேர் கிட்டேயும் பேசிக்கிட்டிருந்தப்பவே தெளிஞ்சிடுச்சு. லேசா வலி மட்டும்தான் இருக்கு. இன்ஸ்பெக்டர்கிட்டே பேச விரும்பாததால நான் கண்ணை மூடிக்கிட்டே இருந்தேன். உன் கிட்டே தனியா பேச விரும்பினதாலே, அவர் தொட்டுப் பார்த்தப்பவும் கண்ணைத் திறக்கலே.''

''ஸாரி மாயா, தாமஸ் எப்பவுமே குறி தப்பிச் சுட்டதே இல்லே. இன்னிக்குன்னு பார்த்து.... பதட்டத்திலே....''


''அவரைத் திட்டாதேண்ணா. அவர் நாம பேசிக்கிட்டபடி சரியாதான் ஒரு அடி தள்ளி தான் சுட்டார். நான்தான் பதட்டத்திலே அதிகமா பாய்ஞ்சுட்டேன். நல்லவேளை, சின்ன காயத்தோட தப்பிச்சுட்டேன். ஆனா, நம்ம திட்டத்துக்கு இதுவும் ரொம்ப ரொம்ப நல்லதாப் போச்சு தெரியுமா?''

''என்ன சொல்றே நீ?''

''விவரமா சொன்னாத்தான் நீ புரிஞ்சுக்குவே. மத்தியானம் நான் உன்னைப் பார்க்க வந்த சமயத்திலே அசோக் இங்கே அவரைப் பார்க்க வந்திருக்கான்.''

''எதுக்கு?''

''உயில் விஷயம் தெரிஞ்சுக்கிட்டு கோபமா வந்திருக்கான். அசோக்கோட



ஆத்திரத்தை, நம்ம செயலுக்குப் பயன் படுத்திக்கப் போறோம். இன்னும் புரிய லையா?''

''புரியலையே....''

மாயா எழுந்து சென்று அறையின் கதவை லேசாகத் திறந்து வெளியே பார்த்துவிட்டுத் திரும்பி வந்து தாழ்ந்த குரலில் தன் எண்ணத்தைச் சொல்ல ஆரம்பித்தாள்.

அவள் சொல்லி முடித்ததும் கொஞ்ச நேரம் யோசனையில் இருந்த சுகுமார் உடனே எழுந்து கொண்டான். ''மாயா, ரொம்ப புத்திசாலித்தனமான யோசனை. சூட்டோட சூடா நடத்திடலாம். நான் உடனே தாமசைச் சந்திச்சாகணும். நீ இப்பத்தான் மயக்கம் தெளிஞ்ச மாதிரி போய் உன் புருஷனைப் பாரு. தூங்கு. காலைல சந்திக்கிறேன். அப்போ உறுதி செய்றேன் திட்டத்தை. ஓ.கே? வரட்டுமா?''

சுகுமார் வெளியே வந்து டிரைவரிடம், ''என்னை வொர்க் ஷாப்பிலே விட்டுடுப்பா'' என்றான்.

புற்கள் தங்கள் தலையில் சுமந்த தண்ணீர் குடத்திலிருந்து திருட்டுத்தனமாகக் கதிர்கள் மூலம் உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருந்தான் காலைச் சூரியன்.

நாகராஜன் பாத்ரூமிலிருந்து இடுப்பில் வெறும் துண்டோடு வெளிப்பட்டு கட்டிலில் முதுகுக்குத் தலையணை கொடுத்து சாய்ந்து அமர்ந்திருந்த மாயாவைப் பார்த்து, ''குட்



மார்னிங் டார்லிங். எந்திரிச்சுட்டியா? இன்னும் கொஞ்சம் தூங்கேன். இப்ப எப்படி இருக்கு?'' என்றார்.

''இப்போ வலி கூட குறைஞ்சிருக்குங்க. மில்லுக்குப் போகப் போறீங்களா?''

''இல்லே மாயா. ரெண்டு நாளைக்குப் போகப் போறதில்லே. மானேஜரை இங்கே வரச் சொல்லி, குறிப்புக்கள் சொல்லிடப் போறேன்'' என்று பாண்ட் அணிந்து கொண்டார்.

''ஏங்க, நான் ஒண்ணு சொன்னா கோவிச்சுக்க மாட்டீங்களே....?''

''மாயா சொல்றப்போ கோபம் எப்படி வரும் எனக்கு? சொல்லு, என்ன?''

''நேத்து அசோக் வந்துட்டுப் போனதைப் பத்திச் சொன்னீங்க இல்லே....''

''.... ....''

''என் பேர்ல இருக்கிற பிரியத்துக்காகவும் அசோக் மேல இருக்கிற வெறுப்பினாலும் எங்க அண்ணன் கொஞ்சம் வற்புறுத்தினதாலயும் சொத்து பூரா என் பேர்ல உயில் எழுதியிருக்கீங்க. இது நமக்குத் தெரியும். ஊர் என்ன சொல்லும்? 'கல்யாணம் ஆன உடனேயே புருஷனைக் கைக்குள்ள போட்டுக்கிட்டு மூத்தவளோட பையனுக்கு ஒரு பைசா சேராம சதி செஞ்சுட்டா'ன்னு சொல்லும்.''

''ஐயோ, நேரா விஷயத்துக்கு வாயேன் மாயா.''

''என்ன இருந்தாலும் அசோக் உங்க பிள்ளைதானே? இப்போ எனக்கும் மகன். இளம் வயசு- பிடிவாத குணம். அதனால தான் அவர் அப்படிப் பேசறார். அவர் உங்களைச் சந்திக்க வர்றப்போ, நான் கொஞ்சம் மனம் விட்டு அவரோட பேச விரும்பறேன். என் மேல தப்பு அபிப்ராயம் வச்சிருக்கார் அவர். அதைப் போக்கியாகணும்.''

''என்ன சொன்னான் தெரியுமா உன்னைப் பத்தி?''

''தெரியும். கணேசன் சொன்னான். தன் அம்மா ஸ்தானத்திலே இன்னொருத்தி வர்றது அவருக்குப் பிடிக்கலே. நான் இல்லாம, வேறே யார் இந்த ஸ்தானத்துக்கு வந்தாலும், அவங்களை வெறுக்கத்தான் செய்வார். சொத்துக்கள் பெரிசில்லேங்க. உறவுகள் முக்கியம். உங்க ரெண்டு பேரையும் ராசி செஞ்சு வைக்கணும்னு நான் விரும்பறேன்."

''அதெல்லாம் வேணாம். நடக்கிற காரியமும் இல்லே. நான் விரும்பவும் இல்லே.''

''எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்களேன். உங்க பிள்ளை உங்களோட பிரச்னைகள்ல தலையிடாம, உபத்திரவம் தராம, உங்களோட இருக்கிறதிலே உங்களுக்கொண்ணும் ஆட்சேபணையில்லையே....?''

''மாயா, அசோக்கைப் பத்தி உனக்குத் தெரியாது. ஐ ஹேட் ஹிம். அவன் இந்த வீட்ல இருக்கிறதை அவனும் விரும்பலே, நானும் விரும்பலே. வேணும்னா ஒண்ணு செய். அவன் வந்தா நீயே பேசு. சிக்மகளூர்ல நம்ம எஸ்டேட்டை கவனிச்சுக்கிட்டு ஒழுங்கா இருக்கச் சொல்லு. ஒரு வருஷம் பார்ப்பேன். அவன் நடவடிக்கை என்னைத் திருப்திப்படுத்தினா உயில் மாற்றம் செய்வேன். இல்லேன்னா இல்லே.''

''இது போதுமுங்க. ஹோட்டல்ல தங்கியிருக்கிறதா கணேசன்கிட்டே சொன்னாராம் அசோக். நானே போன் செஞ்சு ராத்திரி ஒம்போது மணிக்கு வீட்டுக்கு வரச் சொல்றேன். அப்பத்தான் வேலைக்காரங்க யாரும் இருக்க மாட்டாங்க. தனியா பேச வசதியா இருக்கும். என்ன சொல்றீங்க?''

''சரி, பேசிப் பாரு. இது ஒத்து வராத கேசுன்னு நீயே சொல்வே பாரு'' என்று நாகராஜன் சட்டை மேல் செண்ட் பீய்ச்சிக் கொண்டபோது இன்ட்டர்காம் கிக்கிக் என்றது. எடுத்தார். ''என்ன கணேசா?''

''சூசைன்னு ஒரு ஆள் உங்களைப் பார்க்க வந்திருக்கார் சார்.''

''வர்றேன். என்னோட ரீடிங் ரூமிலே உட்கார வையி'' என்று வைத்துவிட்டு ''ரெஸ்ட் எடுத்துக்கோ மாயா. நான் கீழே போய்ட்டு வர்றேன்.''

''எனக்கு ஒண்ணுமில்லேங்க. நல்லவேளை, சின்னக் காயம்தான்.''

நாகராஜன் அவளை நெருங்கி கண் கலங்கி, ''எவ்வளவு சாதாரணமா சொல்றே. நீ மட்டும் என்னைத் தள்ளி விடலேன்னா என்ன ஆகியிருக்கும்? உன்னைப் போய் தப்பா பேசலாமா?'' என்று அவள் நெற்றியில் முத்தமிட்டுவிட்டு நடந்தார்.

நாகராஜன் உள்ளே வந்ததும் சூசை பீடியை அழகான ஆஷ்ட்ரேயில் சிதைத்து விட்டு, ''அய்யா, நேத்து உங்களை யாரோ கொலை பண்ணப் பார்த்தாங்களாமே...'' என்றான்.

பதில் சொல்லாமல் நாகராஜன் சோபாவில் அமரப் போனவனை, ''கெட் அப் ஐ சே!'' என்றார்.

''அர்த்தத்தைச் சொல்லிடுங்க எஜமான். எனக்கு இங்கிலீஷ் புரியாதுங்களே...''

''வெளில போடா நாயே!''

''இதென்னங்க வேதாளம் கதையா இருக்கு? நல்லா யோசனை பண்ணித்தான் பேசறீங்களா? வெளில போயிடட்டுமா? வெளில எங்கே போவேன்னு உங்களுக்கே தெரியும்.''

''நீ தாராளமா போலீஸ்கிட்டே போகலாம் சூசை. எதை வேணும்னாலும் சொல்லு. நம்ப மாட்டாங்க. ஒருவேளை நம்பினா.... அவங்களை எப்படி சமாளிக்கிறதுன்னு எனக்குத் தெரியும்.''

சூசை முகம் சிவந்து படீரென்று எழுந்தான். ''நீங்க வரச் சொல்லித்தான் வந்தேன். பணம் கொடுத்துட்டாப் போய்டுவேன்.''


''பணம் தர்றதா இல்லே. அப்புறம்?''

''பூ கிடைக்கலேன்னா செடியையே பிடுங்கி எறியற ஜாதி நாங்க எஜமான்.''

''சர்தான் போடா!''

சூசை அவரை அடர்த்தியாய் முறைத்துவிட்டு வெளியேறி, ஆட்டோவை கை தட்டி நிறுத்தி ஏறிக் கொண்டு, ''பக்கத்திலே இருக்கிற போலீஸ் ஸ்டேஷனுக்குச் சீக்கிரமா போப்பா'' என்றான்.

(தொடரும்)



அம்மாவின் அன்புடன் அம்மானை பிடிக்க முயலும் அன்புச் செல்வம்

அச் செல்வத்தை
ஊக்குவித்து வளமான
வாழ்வு அளிக்க
இன்றே போலியோ சொட்டு
மருந்து அளித்திடுங்கள்

உங்கள் குழந்தைக்கு போலியோ சொட்டு மருந்து அளித்து இளம்பிள்ளை வாத நோயிலிருந்து பாதுகாப்பு அளித்திடுங்கள்

எல்லா வார நாட்களிலும்
மாலை : 3 முதல் 6 வரை
ஞாயிறு : விடுமுறை

மருத்துவரின் மேற்பார்வையில் போலியோ சொட்டு மருந்து டிரிபிளாண்டிஜென் மற்றும் மீஸில்ஸ் வாக்ஸின் அளிக்கப்படும் இடம் :

தமிழ்நாடு தாதா பார்மஸூடிகல்ஸ் லிமிடெட்

10, பத்மாவதியார் சாலை, ஜெய்பூர் நகர், (ஆயிரம் விளக்கு மசூதி அருகில்)
சென்னை-600 086. தொலைபேசி : 470656 479603

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி — 1986
நான்காம் பரிசுக் கதை — 2



பட்டணப் பிரவேசம்

அந்த ஊரில் பதினைந்து தினங்களாகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் தமது கம்பீரமான குரலில் ஸ்ரீராம காதையைச் சொல்லிக் கொண்டிருந்தார் பாகவத சிரோன்மணி. அன்று பட்டாபிஷேகம் சொல்லி முடித்த அவரை உள்ளூர்வாசிகள் கௌரவிக்க விரும்பினார்கள். பாகவதரையும் அவரது தர்ம பத்தினியையும் காரில் உட்கார வைத்துப் பட்டணப் பிரவேசமாக வந்து, அவர் தங்கியிருந்த ஜாகையில் கொண்டுவிட ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பட்டாபிஷேகத்தன்று பந்தலில் ஆண்களும், பெண்களும், சிறுவர்களுமாகக் கூட்டம் நிரம்பி வழிந்தது. பட்டணப் பிரவேசத்துக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்த கர்ணம் முத்துசாமி அய்யரை, முண்டாசு அணிந்த ஒருவன், நெருங்கி அவர் காதோடு காதாக ஏதோ முணுமுணுத்தான்.

"அப்படியா.... என்னையா வரச் சொன்னார்? இதோ வந்துட்டேன்" என்று சொன்ன

படி அவன்பின் சென்றார் முத்துசாமி அய்யர். தெருக்கோடியில் கையில் ஒரு பெரிய கழியுடன் நின்றிருந்தார் சின்னையா. பந்தர் கிராப், அடர்ந்த கிருதா; பெரிய மீசை; சிவந்த கண்கள், புலி நகம் பதித்த தங்கச் சங்கிலி சில்க் ஜிப்பாவின் மேல் ஆடம்பரமாகத் தொங்கிக் கொண்டிருந்தது.



சிகரெட் லைட்டரால் வாயில் நாகரிகமாக நீட்டிக் கொண்டிருந்த சிகரெட்டைப் பற்ற வைத்தபடி நின்றிருந்தார் சின்னையா.

உள்ளூர்ப்பிரமுகர் 'கடவுள் இல்லை'ங்கிற கட்சிக்குத் தலைவரான ராஜதுரையின் கையான்தான் இந்தச் சின்னையா.

சின்னையாவை நெருங்கியபடியே முத்துசாமி. "கூப்பிட்டீர்களாமே!" என்றார்.

அவரை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தார் சின்னையா.

"என்ன! புராணம் சொன்ன அய்யருக்கு இன்னிக்கு நீங்க ஊர்வலம் வைச்சிருக்கீங்களா?"

"ஆமாம்; அவரையும், அவருடைய மனைவியையும் காரில் ஊர்வலமாக அவர் ஜாகையில் கொண்டு விடப் போகிறோம். இன்று இரவு மெயிலுக்கே அவர் மெட்ராஸ் போகப் போகிறார்...."

"அது இருக்கட்டும்! எங்க தலைவரு உங்ககிட்ட ஒரு விஷயம் கேட்கச் சொன்னாரு! செய்வீங்களா?"

"என்ன இது? அவரு கேட்டு எதுவுமே மறுத்ததில்லையே நான்....!"

சின்னையா சிரித்துக்கொண்டார். "அதான் எங்க தலைவரு சொல்றதை நீங்க தட்ட மாட்டீங்கன்னுதான் உங்களைக் கூப்பிடச் சொன்னாரு!"

அய்யர் அவசரப்பட்டார். "விஷயத்தைச் சொல்ல மாட்டேங்கிறீயளே..!"

"சாமி! பாகவதரை ஊர்வலம் அழைச்சுக்கிட்டு வரபோது, எங்க தலைவர் இருக்கிற தெரு வழியா வந்து, தலைவரு வீட்டுக்கும் அவரைக் கூட்டியாரணும்....!"

"ஏ.... ஏன்?" — குரலில் பதற்றம் தொனித்தது.

"எங்க தலைவரு சொல்றதைச் செய்யறதுதான் என்னோட வேலை. ஏன் எதுக்குன்னு எனக்குத் தெரியாது. நீங்க பாகவதரை அவரு வீட்டுக்குக் கூட்டியாரணும்! தெரிஞ்சுக்கிட்டீங்களா?"

"................"

"என்ன சாமி? பேசாம இருந்தா எப்படி?"

"உ.... உம்.... அ.... அங்கே... வ ... வர.... மற்றவர்கள் அதற்கு ஒப்புக்கொள்ளணுமே... அதனால்தான் யோசிக்கிறேன்!"

"நீங்கதான் அவங்களை ஒத்துக்க வைக்கணும்!"

"எதுக்குன்னு கேட்டால்....?"

குறுக்கிட்ட சின்னையா கோபாவேசமாகக் கத்தினார். "நான்தான் முன்னாடியே உங்ககிட்டே சொல்லிப்புட்டேனுல்ல; இது எங்க தலைவரோட உத்தரவு! நீங்க அவரை அழைச்சுக்கிட்டுத்தான் வந்தாகணும்!"

"பா.... பார்க்கிறேன்."

"பார்க்கிறேன், கேட்கிறேன்னு சொல்லி, தெருப் பக்கம் ஊர்வலம் வராமயிருந்திச்

லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்

சுன்னு கலாட்டா நடக்கும். பாகவதரு நிச்சயம் ஊருக்குப் போக முடியாதுன்னு சொல்லிடுங்க'' என்று மிரட்டினான் சின்னையா.

''என்னங்காணும் முத்துசாமி.... பட்டாபிஷேகம்முடிஞ்சு பதினைஞ்சு நிமிஷமாயிடுத்து. கார் வேறே வந்து நிற்கிறது ஊர்வலத்துக்கு! உங்களைச் சுற்றிச் சுற்றிப் பார்க்கிறோம்! எங்கே மறைஞ்சுட்டீர்?'' என்று கேட்டபடி முத்துசாமியைப் பார்த்த சீனுவய்யர் திடுக்கிட்டார்.

''என்ன ஐயர்வாள்.....! என்னாச்சு? ஏ.... ஏன் இப்படி உங்கள் முகம் வெளுத்துப் போயிருக்கு?'' என்று கேட்டபடி முத்துசாமியைத் தாங்கலாகப் பிடித்தார்.

தயங்கித் தயங்கி ஒவ்வொரு வார்த்தையாக வெளியிட்டார் முத்துசாமி. நொடியில் ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்திருந்தவர்களுக்கெல்லாம் விஷயம் தெரிந்துவிட்டது. 'இதென்ன வம்பாப் போயிடுத்தே! பாகவத தம்பதிகளுக்கு ஏதாவதொண்ணு ஆகிவிட்டதென்றால் பிறகு என்ன பண்ண முடியும்?' என்று பதறிப் போய், ஏற்பாடு செய்தவர்கள் அனைவரும் கூடிப் பட்டணப் பிரவேசத்தை நிறுத்தி விடுவதென்று முடிவு செய்தார்கள்.

''ஊர்வலம் வராமல் இருந்தா கலாட்டா நடக்கும்னு சின்னையா சொல்லியிருக்கிறானே?'' முத்துசாமி நினைவுபடுத்தினார்.

''அந்த உருட்டல் மிரட்டலுக்கெல்லாம் நாம் பயப்படக்கூடாது. நமக்கு எது வேணும்னாலும் நடந்துவிட்டுப் போகட்டும்; ஆனால் பாகவத தம்பதிகளைப் பத்திரமாக ஊருக்கு அனுப்ப ஏற்பாடு செஞ்சாகணும்'' என்று அனைவரும் தீர்மானித்தார்கள்.

கசமுசவென்ற செய்தி காற்றுவாக்கில் பாகவதரின் செவிக்கும் எட்டியது. சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பாகவதர் கேட்டார். அவர்களும் நடந்ததைச் சொல்லி, ''சின்னையாவும் அவர்கள் குழுவினரும் கடவுள் இல்லேங்கற கட்சியைச் சேர்ந்தவங்க! சின்னையாவோட தலைவர் பெரிய போக்கிரி! அவர் தெரு வழியாக உங்களை அழைத்து வந்து, அவர் வீட்டுக்கும் நீங்க வரணும்னு கண்டிஷன் போடறாங்க! அதனால் பட்டணப் பிரவேசமே வேண்டாம்னு முடிவு எடுத்திருக்கோம்!'' என்றனர்.

ஆஸ்திக இளைஞர்கள் ஒன்றாகக் கூடினார்கள். ''ஊர்வலம் நடந்தேயாக வேண்டும். போலீஸுக்கு போன் பண்ணிப் பாகவதருக்கு நாங்கள் பாதுகாப்பு கொடுக்கிறோம்....'' என்றார்கள்.

பாகவதர் சற்றுச் சிந்தித்தார். பிறகு இளைஞர்களிடம், ''நீங்கள் எனக்கு எந்த விதப் பாதுகாப்பும் கொடுக்க வேண்டாம். போலீஸையெல்லாம் வரவழைத்து ரகளை பண்ணாதீர்கள்!'' என்று சொன்னார்.

அதன்பிறகு முத்துசாமி அய்யரையும், மற்றவர்களையும் பார்த்து, ''நீங்கள் ஊர்வலத்துக்கு உடனே ஏற்பாடு செய்யுங்கள். ராமன் விட்ட வழியாகட்டும்; ஊர்வலம் நடக்காமலிருக்கக் கூடாது'' என்று கூறினார்.

சின்னையாவும், அவர் நண்பர்களும் தலைவர் ராஜதுரையின் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார்கள். கார் மெதுவாக அந்த வீட்டருகே வந்து கொண்டிருந்தது. அனைவரின் நெஞ்சங்களும் 'தடக் தடக்' கென்று அடித்துக் கொண்டன. பாகவதத் தம்பதிகள் மட்டும் மலர்ந்த முகத்துடன் அமர்ந்திருந்தார்கள்.

இதோ அந்தத் தலைவரின் வீட்டு வாசலருகே கார் வந்து நின்றது. உள்ளேயிருந்த தலைவர் ராஜதுரை வாசலுக்கு வந்து, ''சாமி வாங்க! உள்ளே வாங்க!'' என்று அன்புடன் அழைத்தார். பாகவதர் தம் மனைவியுடன் அந்த வீட்டுக்குள் பிரவேசித்தார். பாகவதரோடு அவரது சிஷ்யர்கள் மட்டும் உள்ளே சென்றனர். மற்றவர்களைத் தடுத்து வெளியே நிறுத்திவிட்டார் சின்னையா.

தலைவர் ராஜதுரை பாகவதரை மரியாதையுடன் வரவேற்று ஆசனத்தில் அமரச் செய்தார்.

''எதுக்குக் கூப்பிட்டீங்க?''

''வேறே ஒண்ணுமில்லே சாமி! எங்கப்பா நீங்க சொல்ற கதைன்னா விருப்பத்தோட கேட்பாரு! உங்க கதையை இந்தப் பதினஞ்சு நாளும்டேப்புலஎடுத்து அவருக்குப்போட்டுக் காண்பிச்சேன். உங்க கதைங்களைக் கேட்கக் கேட்க அவருக்கு ஏதோ உற்சாகம், தெளிவு எல்லாமேவந்ததைக்கவனிச்சேன். அவருக்கு எண்பது வயசாயிட்டுது. மொடக்கு வாதத்துல படுத்துட்டாரு! உங்களை நேரில் பார்க்க ஆசைப்பட்டாரு! நான் நாஸ்திகன்தான்! ஆனால் எங்கப்பாவோட போக்கில் நான் தலையிடறதில்லே! அப்பாவோட ஆசையை நிறைவேத்தறது ஒரு பிள்ளையோட கடமையில்லீங்களா....? அதான் ஐயா இந்த வூட்டுக்கு வரணும்னு விருப்பம் தெரிவிச்சேன்!'' என்றார் ராஜதுரை மரியாதையாக.

''ரொம்ப பேஷான காரியம் செஞ்சிருக்கேள்!'' என்று மகிழ்ந்த பாகவதர், ராஜதுரையின் தந்தை படுத்திருந்த கட்டிலருகே சென்று அவருடைய நெற்றியில் திருநீறை யிட்டார்.

''உங்களைப் பார்த்ததிலே எனக்கு ரொம்ப சந்தோஷமுங்க.... உங்களைப் பார்த்தாலே எனக்கு ஒரு தெம்பு வருது!'' சொல்லிக் கொண்டே கிழவர் எழ முயன்றார்.

பாகவதர் அதைத் தடுத்து, ''அப்படியே ஓய்வு எடுத்துக்குங்க! பகவான் அருளாலே உங்களுக்கு இனிமே எல்லாமே நல்லபடியா நடக்கும்!'' என்று சொல்லி ஆசீர்வதித்து விட்டு வெளியே வந்தார். ராஜதுரை அவரை வெளியே வாசல்வரை வந்து வழியனுப்பினார். மீண்டும் பட்டணப் பிரவேசம் ஜாம் ஜாமென்று நடைபெற்றது. நடந்த சம்பவத்தைக் கேட்ட ஆஸ்திக அன்பர்களும் பெரிய நெருக்கடி தீர்ந்த ஆனந்தத்தில் குதி நடை போட்டனர்.

ஸ்ரீ ராமானுஜரின் உடல் பற்றிய சர்ச்சை நீண்ட நாட்களாகவே இருந்து வருவதுதான். அவரவர் நோக்கில்— பக்தி, நம்பிக்கையின் அடிப்படையில் — கருத்தேற்றம் பெறப்படுகிறது.

அமைச்சர் கிளப்பிவிட்ட சர்ச்சை!

ஸ்ரீரங்கம் ராமானுஜர்: பூத உடலா? சிலை வடிவமா?

ஸ்ரீ ராமானுஜர் சந்நிதி அர்ச்சகர் ஸ்ரீ எஸ்.டி. ரெங்காச்சாரி கூறுகிறார்:

"அமைச்சர் பேசியது உண்மைதான். ஸ்ரீராமானுஜர் ஸ்ரீரங்கத்தில் மட்டும் சுமார் 80 வருஷங்கள் வாழ்ந்தவர். அடக்கம் செய்யப்பட்ட சில நாட்கள் கழித்து ஸ்வாமி பூமிக்கு மேல் வந்தார். வியந்து போன சிஷ்யர்கள் ஸ்ரீரெங்கநாதப் பெருமானிடம் இது பற்றிக் கேட்க, அவர் அர்ச்சகர் மூலமாக, "அந்தத் திருமேனியை அப்படியே பாதுகாத்து வாருங்கள்" என்று ஆக்ஞை பிறப்பித்தாராம். அன்று முதல் ஸ்ரீராமானுஜர் திருமேனி பாதுகாக்கப்பட்டு வருகிறது. பீடம் ஏதுமின்றி ஸ்வாமி சாதாரணமாகத் தரையில் அமர்ந்து இருப்பது போல் காணப்படுகிறார். வருஷத்திற்கு இரண்டு முறை பச்சைக் கற்பூரம் குங்குமப் பூவால் மெழுகப்படுவதால் திருமேனி சற்றுப் பருத்தாற் போல் காணப்படுகிறது."

உ. வே. கோவிந்த நரசிம்மாசாரியார் கூறுகிறார்:

"சன்னியாசிகளின் உடலைப் பூமியில் பள்ளத்தில் தான் எழுந்தருளப் பண்ண வேண்டும். பிறகு அந்த இடத்தில் ஒரு பிருந்தாவனம் கட்ட வேண்டும். அங்கு திருத்துழாய்ச் செடி வைத்தல், அரசங்கன்று நடுதல் சாஸ்திர மரபு. இவ்விடங்களுக்குப் போய்வந்தால் இடுகாட்டுக்குப் போய் வந்த தீட்டு கிடையாது. ராமானுஜர் சந்நிதிக்கு நாம் போனால் மறுபடி கால் அலம்பிக் கொண்டுதான் ரங்கநாதரைத் தரிசிக்க வேண்டும் என்று சொல்வது சரியில்லை. பக்தகோஷ்டி அப்படிச் செய்வது கிடையாது. ஸ்ரீ ரங்க நா த ரே ராமானுஜர் சந்நிதிக்கு முன்புள்ள மண்டபத்துக்கு வருஷத்தில் ஐந்து நாட்கள் எழுந்தருளுகிறார். அதில் மூன்று நாட்கள் மட்டுமே, ரங்கநாதனுக்குக் கால் அலம்புவது நடைபெறுகிறது. கனு, சங்கராந்தி ஆகிய மற்ற இரண்டு நாட்களில் கால் அலம்புவதில்லை. இந்தக் கால் அலம்புவது எல்லாம் அர்க்ய பாத்ய மரியாதைகள். ஸ்ரீரங்கநாதன் கோடை உத்சவம் பத்து நாட்களும் பூச்சாத்து மண்டபத்துக்கு எழுந்தருளும்போதுகூடத் திருவடிகளை அலம்புவது உண்டு. அதாவது ராமானுஜர் சந்நிதிக்கு எழுந்தருளாமல் இருக்கும் போதே கால் அலம்புவது நடைபெறுகிறது!

"பிருந்தாவனத்தின் மேல்பாகத்தில் ராமானுஜரின் சிலா வடிவமான திருமேனி உட்கார வைக்கப்பட்டிருக்கிறது. இதில் 'நகங்களைக் காண முடிகிறது, தலைமுடியைக் காண முடிகிறது' என்று கூறுவதில் ஒன்றும் விசேஷமில்லை. அப்படிக் காண முடிகிறதென்றால் அது அந்தச் சிலா வடிவத்தை, உருவாக்கிய சிற்பியின் திறமையையே உணர்த்துவதாகும்.

"இங்கு ராமானுஜர் சிலாரூபம் சுவர் மீது சாய்ந்தபடிகூட இல்லை. சுவருக்கும் சிலாரூபத்துக்கும் இரண்டடி இடைவெளி உண்டு. ராமானுஜர் வாழ்ந்த திருமேனியேயானால் அது இவ்வாறு உட்கார்ந்த நிலையில் இருப்பது அரிது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

"ஸ்ரீரங்கம் ராமானுஜரின் மூலத் திருமேனியைப் பற்றி நான் இவ்வளவு உறுதியாகக் கூறுவது நானே சுமார் இருபது வருடங்களுக்கு முன்பு அத்திருமேனியில் ஏற்பட்டிருந்த வெடிப்பு முதலானவையைச் சரி செய்யப் போனபோது, அது எதனாலானது என்பதைப் பரிசோதித்த தன் அடிப்படையில் தான். திருமேனியை முறைப்படி பழுது பார்த்து குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம் அரைத்துச் சாத்தும் கைங்கர்யத்தைப் பிரதி வருஷம் செய்து வந்தேன். இப்போது இரண்டு வருஷங்களாகத்தான் அதைச் செய்யவில்லை.



பேட்டி: மகரம்;
எஸ். சௌரிராஜன்
புகைப்படம்:
கஸ்தூரி போட்டோ

புற்று நோய் குணமானது



35 வயதான எனது மனைவி திருமதி பரதம்மா நான்கு பெண் குழந்தைகளுக்குத் தாய். அவள் வயிற்றுப் போக்கினாலும் மற்றும் வாந்தியினாலும் தாளாத வயிற்று வலியினாலும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள். ஒரு லேடி டாக்டர் பரிசோதித்ததில் அவள் வயிற்றில் கட்டி இருப்பதாகத் தெரிய வந்தது. அந்தக் கட்டி ஆபரேஷன் மூலமாக எடுக்கப்பட்டுவிட்டது. ஆனால் எந்தவிதப் பயனும் இல்லாததனால் ஒரு புற்று நோய் நிபுணரிடம் காண்பித்ததில் அவர் அதை அப்டாமினல் ஸர்கோமா (Abdominal Sarcoma) என்று கண்டுபிடித்தார். நிபுணர்கள் கரண்ட் ட்ரீட்மெண்ட் (Current Treatment) கொடுத்தாலும் அதில் சிறிதளவே பலன் தெரிய வந்தது. நாங்கள் அவள் உயிருடன் இருப்பாள் என்ற நம்பிக்கையை இழந்துவிட்டோம். இந்த நிலையில் நாங்கள் ஹைதராபாத் சிக்கட் பள்ளியைச் சேர்ந்த டாக்டர் எம். பாபுராவிடம் போனேன். அவர் அளித்த ஆயுர்வேத சிகிச்சையினால் நான்கு வாரங்களுக்குள் பிரமிக்கத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. மேலும் ஆறு வார ஆயுர்வேத சிகிச்சைக்குப் பிறகு நிபுணர்கள் அவளைப் பரிசோதித்து வயிற்றில் கட்டி இருப்பதற்கான அறிகுறியே இல்லை என்று உறுதி அளித்தார்கள். இன்று ஆறு வருடங்களுக்குப் பிறகும்கூட டாக்டர் எம். பாபுராவ் அளித்த சக்தி வாய்ந்த ஆயுர்வேத சிகிச்சையினால் எனது மனைவி பழைய வியாதியின் அறிகுறியே இல்லாமல் மகிழ்ச்சியாக வாழ்கிறாள்.

சந்தரையா, பரிசோதித்தவர்,
பட்வெல், ராஜேந்திர நகர், ரங்கா ரெட்டி ஜில்லா.

விலாசம்	போன் நெம்	பார்க்கும் கிழமை
டாக்டர் எம். பாபு ராவ் கான்சர் இன்பர்மரி (ஆபீஸ்) 1—1—27 1/3, சிக்கட்பள்ளி ஹைதராபாத்—500 020	64735	பிரதி வியாழன் & வெள்ளி
C/o. ஹோட்டல் சுதாரா, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை—600 017.	445164	பிரதி சனி
C/o. ஹோட்டல் பிருந்தாவன், எம். ஜி. ரோடு, பெங்களூர்—560 001.	573271	பிரதி ஞாயிறு
C/o. ஹோட்டல் கே.கே. இண்டர் நேஷனல் தெற்கு ரயில் நிலையம் எதிரில் எர்ணாகுளம், கொச்சின்—682 016.	366010 366040	பிரதி திங்கள்
C/o. ஹோட்டல் நட்ராஜ், பகட்கஞ்ஜ் இம்பீரியல் தியேட்டர் அருகில் புது தில்லி—110 055	522699	பிரதி செவ்வாய்
C/o. ஹோட்டல் மிட்—டௌன், அந்தேரி ரயில்வே எதிரில், ஸ்டேஷன் (மேற்கு), பம்பாய்.	628882	பிரதி புதன்

ஏமாறச் சொன்னது நானோ?


தி. நகர் பஸ் டர்மினஸ். ஆபீஸ் நேரம். பஸ்ஸில் ஏகக் கூட்டம்.
டிக்கெட்! டிக்கெட்!
பாரீஸ் ஒண்ணு... அடுத்த பஸ் இதானே? எப்பப் புறப்படும்?
ஆமா... பத்து நிமிஷத்திலே.
வள்ளுவர் கோட்டம் ரெண்டு...
எல்லோரும் டிக்கெட் வாங்கியதும் கண்டக்டர் கீழே இறங்க....
எங்கப்பா போறே? டைம் ஆச்சே!
டிரைவர் டீ சாப்பிட றாரு, அவசரப்படுத்தி அழைச்சிட்டு வர்றேன், ஸார்!
ஒரு சில நிமிஷங்களில் இன்னொரு கண்டக்டர் பஸ்ஸில் ஏறி...
டிக்கெட்! டிக்கெட்!
என்னப்பா இது இப்பத்தானே வாங்கினோம்!
அதெல்லாம் எனக்குத் தெரியாது ஸார்! இந்தப் பஸ்ஸுக்கு நான்தான் கண்டக்டர்! டிக்கெட் வாங்குங்க; இல்லே இறங்குங்க!
அடப்பாவமே, அத்தனை பேரும் மோசம் போயிட்டமே....
நமக்கு ஆளுக்குக் கொஞ்சம் நஷ்டம். ஆனா அந்த ஆளுக்கு நல்ல தேட்டை!
நடந்த கதை.

"மிஜோராம் எங்கே இருக்கிறது?"

"பர்மாவுக்கும் பங்களாதேசத்துக்கும் இடையே ஒட்டிக் கொண்டிருக்கும் சிறிய மலைப் பிரதேசம்தான் மிஜோராம்".

"அப்படியா? அதன் தலைநகர் எது?"

"அய்ஜாவல்."

"அய்ஜாவல்.....? அதை எப்படி எழுத வேண்டும்? சரியான உச்சரிப்பு என்ன?"


• லால்டெங்காவும் மத்திய அரசின் சார்பில் ஆர்.டி. பிரதானும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகின்றனர்.



மிஜோராம்: ரத்தச் சேற்றில் விளைந்த அமைதிப் பயிர்!

முதல் இரண்டு கேள்விகளுக்குப் பொறுமையாகப் பதில் சொன்ன மிஜோக்காரர் மூன்றாவது கேள்வியை நாம் கேட்டதும் கோபித்துக் கொண்டால் அதில் நியாயம் இருக்கவே செய்கிறது. மிஜோராம் இந்தியாவின் ஒரு பகுதி என்று சொந்தம் கொண்டாடும் நமக்கு அதைப் பற்றிய அடிப்படை அறிவு கூட இல்லை!

யூனியன் பிரதேசமாக இருந்த மிஜோராமிலிருந்து அஸ்ஸாமில் உள்ள சில்சார் என்ற நகரத்துக்குச் செல்லும் சாலைதான் மிஜோவை இந்தியாவின் இதர பகுதிகளுடன் இணைக்கிறது. இந்தச் சாலையும் பருவ மழைக் காலத்தில் இருக்கும் இடம் தெரியாமல் கரைந்து போய்விடும்! மிஜோக்காரர்கள் தங்கள் குட்டிப் பிரதேசத்தைவிட்டு இந்தச் சாலை வழியே சில்சாருக்கு வந்தால் படாத பாடு படுகிறார்கள். பட்டணத்து நாகரிகம் அறியாத மலை ஜாதியினரான மிஜோக்கள் கடைத் தெருக்களில் தாட்சண்யம் இன்றி ஏமாற்றப்படுகிறார்கள். மிஜோ பெண்கள் பரிகசிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு இது ஒரு புதிய கசப்பான அனுபவம். மிஜோ நாகரிகம் பெண்களுக்குச் சம உரிமை கொடுத்துப் பழகிய நாகரிகம். திருமணத்துக்கு முன்னரே ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதும் குழந்தை பெற்றுக் கொள்வதும் அவர்களிடையே சர்வ சகஜம். பெண்களிடம் தங்கள் வீரத்தை நிரூபித்து அவர்களுடைய காதலைப் பெற மிஜோ இளைஞர்கள் தலை கொய்யும் சாகசத்தில் ஈடுபடும் பழக்கம் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர்



• மிஜோராம் தொலைக்காட்சி இல்லத்தில் பிரதமர்



• மிஜோராமுக்கு வரும் பிரயாணிகளை வரவேற்கக் காத்திருக்கும் பெண்கள்



"நீயும் உன் மனைவியும் ஹிந்தி சினிமாவுக்குத் தான் போனீங்களா?"

"ஆமா, அதில்தான் ரெண்டு பேருக்குமே சந்தேகம் வராது!"

— கதிர்வேல்

பிரிட்டிஷ் ஆட்சியின்போதுதான் தடை செய்யப்பட்டது. தலை கொய்யும் படலங்களின் காலம் முடிந்துவிட்டாலும் ஒவ்வொரு மிஜோ இளைஞனும் வீரத்தைப் போற்றி வருகிறான்; துப்பாக்கிகளோடு சகஜமாக உறவாடுகிறான்.

இத்தகைய நாகரிகத்தைச் சேர்ந்தவர்கள் புரட்சியில் ஈடுபடுகையில் கூசாமல் வன்முறைக்கு இடமளித்ததில் ஏதும் ஆச்சரியம் இல்லை. மிஜோ புரட்சிகள் பல்கிப் பெருகுவதற்கு இன்னொரு காரணமும் இருந்தது:

மிஜோ இளைஞர்கள் கூட்டாக வாழ்ந்து யுத்தப் பயிற்சியும் ஒழுக்கமும் கற்றுக் கொள்ள 'ஜாபல்க்' என்ற அமைப்புக்கள் இருந்தன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தப் பரம்பரைப் பள்ளிகள் அழிந்து போய், மிஷன் பள்ளிகள் தோன்றின. கிராமத்தலைமையின் அடிப்படையில் அமைந்திருந்த நிர்வாக அமைப்பு மாற்றப்பட்டது. இந்த மாற்றங்களினால் இளைஞர்கள் கட்டுப்பாடு இழந்தனர். ஜாபல்குகளில் தடை செய்யப்பட்டிருந்த 'ஜு' என்ற ஒருவகை மதுவுக்கு அடிமையாயினர். அமைதியின்மையும் புரட்சியும் உருவாக இந்தச் சூழ்நிலை பெரிதும் சாதகமாக அமைந்தது.

மிஜோ சரித்திரத்தின் போக்கை மாற்றியது 'மவுத்தம்' என்று அழைக்கப்படும் கடுமையான பஞ்சம். ஐம்பது வருஷங்களுக்கு ஒருமுறை பூக்கும் ஒருவகை மூங்கில் பூவைச் சாப்பிடும் எலிகள் கோடிக் கணக்கில் பல்கிப் பெருகின்றன. இவை பயிர்களை அழித்துப் பஞ்சத்தைத் தோற்றுவிக்கின்றன. 1959 இல் இத்தகைய மாபெரும் பஞ்சம் தோன்றியபோது அரசு எடுத்த நடவடிக்கைகள் வெற்றிகரமாக இருக்கவில்லை. அப்போது மாவட்ட கவுன்சிலில் கணக்கராகப் பணியாற்றிய லால்டெங்கா 'பஞ்ச நிவாரண முன்னணி' ஒன்றை அமைத்தார். லாரிகளில் ஏற்றிச் செல்லப்பட்ட தானியங்களை வழிப்பறி செய்ததற்காகக் கைதானவர்களை ஜாமீனில் வெளியேற்றினார். இந்தப் பஞ்ச நிவாரண முன்னணியே பிற்காலத்தில் மிஜோ தேசிய முன்னணியாயிற்று.

1966 முதல் மிஜோராமில் தோன்றிய எழுச்சிகளைத் தலைமை தாங்கி நடத்தியவர் லால்டெங்காதான். அறுபது ஆண்டுகளுக்கு முன் ஏழைக் குடும்பத்தில் பிறந்து, எட்டாம் வகுப்பு வரை படித்து, மேலே படிக்க வசதியில்லாமல் சீக்கிரமே அரசுத் துறையில் பணியில் சேர்ந்தார்.

மிஜோ பஞ்ச நிவாரண முன்னணியின் நடவடிக்கைகளை அரசு ஆட்சேபித்தபோது தமது அரசாங்க உத்தியோகத்தைக் கைவிட்டார் லால்டெங்கா. அப்போது முதல் இன்று முதலமைச்சர் ஆகும்வரை அவர் வேறு பணியை மேற்கொள்ளவில்லை. அஸ்ஸாமின் ஒரு பகுதியாக இருந்த மிஜோராமுக்குத் தனி நாடு அந்தஸ்து வேண்டும் என்று மிஜோ தேசிய முன்னணி (எம்.என்.எஃப்) கேட்க ஆரம்பித்தது; லால்டெங்கா சிட்டகாங் மலைப் பிரதேசத்துள் தலைமறைவாகிக் கொரில்லாப் படைகள் அமைத்துப் போராடத் தொடங்கினார். இப்போராட்டத்துக்கு இவர் பாகிஸ்தானிடமும் சீனாவிடமும் உதவி கோரியதாகச் சொல்லப்படுகிறது.

வன்முறைப்போராட்டங்களினால்மிஜோ மக்கள் அடைந்த துன்பங்களும், தொல்லைகளும் ஏராளம். 1975 இல் உயர் போலீஸ் அதிகாரிகள் மூவர் கொரில்லாக்களால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து எம்.என்.எஃப். உறுப்பினர்களை இந்திய அரசு வேட்டையாடிக் கைப்பற்றியது. இந்த வேட்டையில் கொலையில் சம்பந்தப்படாதவர்களும் உயிர் இழந்தனர். எம்.என்.எஃப். மெல்லப் பணிய ஆரம்பித்தது. லால்டெங்கா மத்திய அரசை அணுகிப் பேச்சு வார்த்தைகள் நடத்தக் கோரினார்.

1976 இல் முதல் ஒப்பந்தம் கையெழுத்தாகியது. அதன்படி மிஜோராம் இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருக்கவும், எம்.என்.எஃப். வன்முறையைக்கைவிட்டு ஆயுதங்களை மத்திய அரசிடம் ஒப்படைக்கவும் சம்மதித்தது.

ஆனால் ஒப்பந்தத்தின் மை உலர்வதற்குள் மீண்டும் புரட்சி தோன்றிவிட்டது. 1984 வரை தொடர்ச்சியாக அமைதி உடன்படிக்கைக்கான முயற்சிகள் செய்யப்பட்டுத் தோல்வியே அடைந்தன. 1984 அக்டோபர் 31 அன்று கையெழுத்திடப்படவிருந்த ஒப்பந்தம் இந்திரா காந்தியின் மரணத்தால் ஒத்திப் போடப்பட்டது. ஒருவழியாக ராஜீவ் ஆட்சியில் ஒப்பந்தம் கையெழுத்தாகி லால்டெங்கா தலைமையில் மிஜோராம் மாநிலத்தில் எம்.என்.எஃப். இ. காங்கிரஸ் கூட்டு ஆட்சி நிறுவப்பட்டுள்ளது.

ஒப்பந்தப்படி சரணடைந்த மிஜோ கொரில்லாக்கள் துப்பாக்கிகளைப் பிரிகையில் மிகவும் உணர்ச்சிவசப்பட்டுப் போனார்கள். மிஜோவின் பெரும்பான்மையினர் விரும்பியதால்தான் இந்த ஒப்பந்தம் சாத்தியமாயிற்று என்றாலும் இருபது ஆண்டுகளாகக் கொரில்லா வன்முறைக்கு இடையே வளர்ந்த ஒரு தலைமுறை, எவ்வளவு காலத்துக்கு அடங்கிக் கிடக்கும் என்பது கேள்விக்குறியாக உள்ளது. ஆனால் லால்டெங்கா 'மிஜோராமை இன்னொரு பஞ்சாப் ஆக விடமாட்டேன்' என்று உறுதி கூறியுள்ளது தைரியம் அளிக்கிறது.

நன்றி: ஃபீச்சர்ஸ் இந்தியா;
இல்லஸ்ட்ரேடட் வீக்லி

தொகுப்பு: சீதா ரவி

ஆறுயிரத்துச் சொச்சம் பெண்கள் கோபிக்கக் கூடாது...

பம்பாய்த் திரைப்படத் துறையில் கொடி கட்டிப் பறக்கும் ஹேமா, ரேகா, மீனாட்சி போன்ற தமிழ்ப் பெண்கள் தவிர பொது வாழ்வின் இதர துறைகளிலும் பல பம்பாய்த் தமிழ் மகளிர் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய பெண்களுள் ஆறு பேரை இங்கே அறிமுகப்படுத்துகிறோம். பாக்கியுள்ள ஆறுயிரத்து சொச்சப் பேர் கோபிக்கக் கூடாது.

கமலா ராமன்

மகாரா டிரா சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தென்னிந்திய எம். எல். ஏ. என்ற பெருமை கமலா ராமனுக்கு உண்டு. 1972 இல் மாதுங்கா தொகுதியிலிருந்து பெருத்த மெஜாரிட்டியுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் 1968 இல் மாதுங்கா பகுதி நகராட்சி உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

தொகுதி மக்களின் சுகாதார, சாலை வசதிகளில் முன்னேற்றம் காணக் காரணமாக இருந்தவர்.

பதவியில் இல்லாத போதும் பொதுத் தொண்டு, சமூக உழைப்பு என்று தம்மை மக்களுக்காக அர்ப்பணித்துக் கொண்டவர்.

மாதுங்கா லேடீஸ் சர்க்கிளில் இருநூறு அனாதைக் குழந்தைகளைப் பராமரிக்கும் பைராம்ஜீ ஜீஜீபாய் அனாதைகள் இல்லத்தின் தலைவராக இருக்கிறார்.

பம்பாயோடு ஒன்றிப் போன கமலா ராமன் பம்பாயின் அழகுக்காகப் பாடுபடுபவர். சுற்றுப்புற அசுத்தம், சேரி மக்களுக்குப் புனர் வாழ்வுத் திட்டம் போன்ற பணிகளில் பெரிய அளவில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

இந்திய நுகர்வோர் கவுன்ஸிலின் தலைவராகப் பணியாற்றும் கமலா ராமன், பொருட்களில் கலப்படம், எடை ஏய்ப்பு போன்றவற்றை எதிர்த்து நாடு முழுவதும் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்.

பெங்களூரில் நடந்த அகில இந்திய அமைதி, சமாதானம் மாநாட்டில் கலந்து கொண்டு பம்பாய் திரும்பிய இவர் அணு கொடுமையிலிருந்து மக்களைக் காப்பாற்ற அணு ஆயுதத் தடைக்காகக் குரல் உயர்த்தியுள்ளார்.

கமலா லக்ஷ்மண்

கணவர் ஆர். கே. லக்ஷ்மண் கார்ட்டூன்கள் மூலம் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார் என்றால் அவரது மனைவி கமலா லக்ஷ்மண் பெண்கள் மேம்பாட்டுக்காகச் சங்கம் அமைத்துப் பணியாற்றி வருகிறார்.



* கமலா ராமன்



* கமலா லக்ஷ்மண்

1965 இல் ஆரம்பிக்கப்பட்ட மகாலக்ஷ்மி லேடீஸ் கிளப்பின் நிறுவனச் செயலாளரான கமலா லக்ஷ்மண் தற்போது அதன் தலைவராகப் பணியாற்றுகிறார். தமிழ்ப் பெண்கள் மட்டுமின்றி எல்லாத் தரப்பினரும் அங்கத்தினராக உள்ள இந்த கிளப் ஒவ்வொரு புதன் கிழமையும் கூடுகிறது. லாட்டரி, கைவினைப் பொருட்கள் விற்பனை, கண்காட்சி என நடத்திப் பொருள் சேர்த்து நலிந்த பெண்களுக்கு ஆக்கபூர்வமாக உதவி வருகிறது.

இது தவிர இண்டஸ் (INDUS) என்கிற சர்வதேசப் பெண்கள் அமைப்பிலும், கமலா பொதுப் பணியாற்றி, பெண்கள் மேம்பாட்டிற்காகப் பாடுபட்டு வருகிறார்.

பூமா ராமானுஜம்

மிகச் சிறிய வயதிலேயே மணவாழ்க்கையில் அடியெடுத்து வைத்துவிட்ட பூமா ராமானுஜம் தமிழ்ச் சங்கத்தின் உபதலைவராக முப்பது வருடங்களுக்கு முன் தம் பொது வாழ்வைத் துவக்கினார். இன்று தமது அறுபத்தாறும் வயதிலும் பொதுக் கூட்டங்

களிலும் விவாத மேடைகளிலும் தவறாமல் கலந்து கொள்கிறார். இலக்கியத்தில் உள்ள அதே ஈடுபாடு இசையிலும் இவருக்கு இருக்கிறது. சில சாகித்தியங்களை இயற்றியுள்ளார். இரண்டாம் பேருக்குத் தெரியாமல் இவர் தம் பொருளாலும் உழைப்பாலும் சமூக சேவை செய்து வருகிறார்.

ஐந்து குழந்தைகளுக்கு ஒரு சிறந்த தாயாகவும் படு 'பிஸி'யாக வாழ்க்கை நடத்தும் டி.வி.ராமானுஜத்தின் (பம்பாயின் முதல் தென்னிந்திய ஷெரீஃப்) துணைவியாகவும் தமது கடமைகளைச் செம்மையாகச் செய்து வருகிறார். இவரது இல்லத்தின் விருந்தோம்பல் தமிழகத்துச் சங்கீத வித்வான்களிடையே மிகவும் பிரசித்தம்.

சரோஜா ராமாமிர்தம்

'தியாக பூமி' மற்றும் 'பால யோகினி' திரைப்படங்களில் சக்கைப் போடு போட்ட பேபி சரோஜாவை 'அந்தக் காலத்து' மனிதர்கள் மறந்திருக்கமாட்டார்கள். இன்றைக்கு இவர் சரோஜா ராமாமிர்தமாக பம்பாயின் முன்னணி மகளிருள் ஒருவராகத் திகழ்கிறார். கர்நாடக, ஹிந்துஸ்தானி இசைகளில் சிறந்த பயிற்சி, இக்பானா என்னும் ஜப்பானிய மலர் அலங்காரக் கலையில் ஒன்பது டிப்ளமாக்கள், வீணை வாசிப்பில் நல்ல தேர்ச்சி, அலுமினியத் தகட்டில் ஓவியங்கள் தயாரிக்கும் புதுமையான கலையில் ஈடுபாடு என்று சகல கலா வல்லியாகத் திகழ்கிறார். அடிக்கடி இக்பானா கண்காட்சிகளும் வகுப்புகளும் நடத்தி வரும் இவர் 'இண்டஸ்' சர்வதேசச் சங்கத்தின் தலையாய உறுப்பினர்களுள் ஒருவர்.

சரசா ராமானுஜம்

பல கோடி ரூபாய்கள் அந்நியச் செலாவணி ஈட்டித் தரும் விஜயா டேங்க்ஸ் நிறுவனத்தின் அதிபர் ஆர். ராமானுஜத்தின் அஞ்சா நெஞ்சத்துக்கும், தன்னம்பிக்கைக்கும், துணிவுக்கும் பின்னால் மலை போன்ற உறுதியுடன் துணை நிற்பவர் அவரது மனைவி சரசா ராமானுஜம் — இப்படி நம் நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுவதே ஒரு பொதுநலத் தொண்டுதானே. ஆனால் சரசா ராமானுஜம் அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை. இந்தத் தம்பதிகளை நம்பி பம்பாய்க்கு ரயிலேறிய எண்ணற்றவர்கள் இவர்கள் வீட்டில் காலவரையறையின்றித் தங்கி, இவர்தம் உறுதுணையுடன் தங்களை மேம்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மலபார் ஹில்ஸில் உள்ள இவர்கள் வீட்டிற்குச் சூட்டியுள்ள 'அட்லாஸ்' என்ற பெயர் மிகப் பொருத்தமான ஒன்று. இங்கு எத்தனை பேர்கள் வந்தாலும் எப்போதும் இடமுண்டு! 'செம்பூர் மஹிலா சமிதி' இவர்களால் செவ்வனே நடத்தப்படும் ஓர் அமைப்பு!

பத்மா ராமச்சந்திரன்

''நான் ஐ. ஜி. யின் மனைவியாக இருப்பதில் மிகவும் பெருமைப்படுகிறேன்'' என்கிறார் மஹாராஷ்டிராவின் பல பகுதிகளிலும் பணியாற்றி இன்று பம்பாய் ஐ. ஜி. ஆக உயர்ந்திருக்கும் ராமச்சந்திரனின் மனைவி. எத்தனையோ எதிர்பாராத அதிர்ச்சிகளையும் அனுபவங்களையும் சமயத்தில் ஆபத்துமிகுந்த சம்பவங்களையும் இவர் தம் கணவரோடு சேர்ந்து சந்தித்திருக்கிறார். அவற்றுள் 65 இல் இங்கு ஏற்பட்ட ''புட் ரயட்டும்'' (உணவுக் கலவரம்) 84 இல் ஏற்பட்ட ''பிவண்டி கலவரமும்'' மறக்க முடியாதவைகளாம் — கலவரப் பகுதியில் நாட்கணக்கில் இருக்க வேண்டியிருந்த கணவருடன் தொடர்பு கொள்ள முடியாத நிலை — வீட்டை விட்டு வெளியே வரவும் முடியாது. சில நாள் 'ஸஸ்பென்ஸ்'க்குப் பிறகு, கணவரே தாம் சுகமாக இருப்பதாகப் போனில் உறுதியளித்த போது ஏற்பட்ட மகிழ்ச்சியைச் சிலிர்ப்புடன் நினைவு கூருகிறார். காவல் துறை ஸ்பெஷல் கிளப்பிலும், ஒய். எம். ஸி. ஏ. விலும் முக்கிய உறுப்பினராக உள்ளார் பத்மா ராமச்சந்திரன்.

'மெயின் சிட்டி'யைத் தவிர புறநகர்ப் பகுதிகளிலும் வாழ்ந்தது, அப்பகுதி மக்களோடு (மராட்டியர்) வித்தியாசமின்றிப் பழகியது, அவர்களைப் புரிந்து கொள்ள அவர்கள் மொழியை நன்கு கற்றுப் பேசி மகிழ்ந்தது, இவை பத்மாவின் நினைவில் என்றுமிருந்து மகிழ்ச்சி தருபவை!



* பூமா ராமானுஜம்



* சரோஜா ராமாமிர்தம்



* சரசா ராமானுஜம்



* பத்மா ராமச்சந்திரன்

பேட்டி: — வித்யா

ௐ

FE என் அப்பா FTIOBFE
ஓம் சப்த விக்னேஸ்வராய நம:
''வேதோ நித்யம் அதீயதாம்''

''ஸத்யம் அத்வைதம்'' ''ஸத்யம் அத்வைதம்'' ''ஸத்யம் அத்வைதம்''

செங்கல்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, மாத்தூர் கிராமம், ''ஜமுனும் பேட்'' என்கிற இடத்தில் காஞ்சிபுரத்திலிருந்து 32 கி.மீ. தூரத்தில்

''ஓம் சப்த விக்னேஸ்வரர்''

ஆலயம் நிர்மாணிக்கப்பட உள்ளது. அன்பர்கள் யாவரும் இந்த மகத்தான புனித கைங்கர்யத்தில் பங்கேற்று பெருமளவு நிதி உதவி அளித்து தெய்வ காரியத்தை நிறைவேற்றும்படி வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எல்லாம் நன்மைக்கே! எல்லாம் நல்லதே நடக்கும்!

தங்கள் அன்புள்ள
B.R. மகாலிங்கம்

அனுப்ப வேண்டிய முகவரி:

B.R. மகாலிங்கம்,
D–16–A, உ.வே. சாமிநாத அய்யர் சாலை,
பிளாக்–27, நெய்வேலி–607 803 தமிழ்நாடு



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால் 1542ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 75 மாணுக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க சுமார் ரூ 300/– ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ 3000/– மூலதனம் ஏற்படுத்தியோ அல்லது அவ்வப்போது ரூ 300/– அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹா ராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி
D–76, மூன்றுவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்–612 001.

* தெ.பொ.மீ.



தெ.பொ.மீ: பாரதியாரைப் பால்காரனாக மாற்றியவர்!

* க.த.தி.



* மகாகவி பாரதியாரைப் போலீஸார் தேடிக் கொண்டிருந்த ஒருசமயம் அவர் யார் வீட்டில் அடைக்கலம் புகுந்திருந்தார் தெரியுமா? தமிழறிஞர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் வீட்டில்தான்! ஒரு பால்காரராக உருமாறி வீட்டின் பின்பக்கமாகச் சென்றுவிடப் பாரதியாருக்கு உதவினார் தெ.பொ.மீ.!

* ஒரு காலகட்டத்தில் திலகரின் தீவிரவாதிகள் சங்கத்தில் ஒருவராக இருந்தார் தெ.பொ.மீ. நேதாஜிக்குச் சென்னையில் மகத்தான வரவேற்பு அளித்தார், பரலி சு. நெல்லையப்பர் தலைமையில்.

* 'முரட்டுப் பிடிவாதக்காரர்' என்று தெ.பொ.மீ.யைக் கருதியவர்கள் உண்டு. ஆனால் அப்படி அவர் பலர் கண்களுக்குத் தோற்றமளிக்கக் காரணம் அவருடைய உயர்ந்த கொள்கை. 'சிந்தி.... சிந்தித்து எடுத்த முடிவில் உறுதியாக நில்' என்பதே அவர் வாழ்க்கை லட்சியம்.

* தேசியவாதி என்பதுடன் சீர்திருத்தவாதியாகவும் விளங்கினார் தெ.பொ.மீ. உயிர் பலி இடப்படுவதைத் தடுப்பதில் தீவிரம் காட்டினார். ஒரு கோவிலில் ஆடுகள் பலியிடப்படுவதாக அறிந்து அங்கு சென்று பலி பீடத்தில் தம் தலையை வைத்தார். "முதலில் என் கழுத்தை வெட்டு; பிறகு ஆட்டை வெட்டலாம்" என்றார்!

* கோவில்களில் தேவதாசி முறையை ஒழிக்கவும் பாடுபட்டார். லாந்தர் விளக்குடன் சேரிக்குச் சென்று முதியோருக்குக் கல்வி அளித்தார்; சுத்தம், சுகாதாரம் போதித்தார்.

* மாண்டிஸோரி கல்வி முறையில் ஆர்வம் கொண்டு அதற்காக ஒரு பள்ளி நடத்தினார்.

* திரு.வி.க.வுடன் இருந்த ஈடுபாட்டால் தொழிற்சங்கத் தலைவராகவும் விளங்கினார்!

* அவர் சென்னை மாநகராட்சியில் ஆல்டர்மனாக இருந்தார். பாதாளச் சாக்கடைத் திட்டம் அப்போதுதான் ஆரம்பமாயிற்று. மேயராக இவர் வரமுடியாமல் கோஷ்டி பூசல் உருவானது சென்னையின் துரதிர்ஷ்டம்.

* காலை 4.30க்கே வீட்டில் மாணவர்களுக்குப் பாடம் போதிக்க ஆரம்பித்து விடுவார்! மொழி வகுப்புக்கள் மட்டுமின்றி வேதாந்த வகுப்புக்கள்கூட நடத்தினார்.

* உளவியலை முதன்முதலாகத் தமிழில் தந்தவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்தான். பல அறிவியல் நூல்களைத் தமிழாக்கம் செய்தவர். Theory of relativity பற்றி நாற்பது நிமிஷம் தமிழில் பேசினார்!

* அவருக்குப் பன்னிரண்டு மொழிகள் தெரியும்; நான்கு மொழிகளில் சரளமாகப் பேசுவார். பிரெஞ்சில் புலமை.

* தமிழ்க் கலைக் களஞ்சியத்தில் ஒவ்வொரு தமிழ் எழுத்து வரி வடிவம் பற்றிய கட்டுரையையும் எழுதியவர் தெ.பொ.மீ.

* கோவையில் ஜி.ஆர். தாமோதரன் அளித்த ஆதரவில் கலைச் சொல்லாக்கப் பணி நடந்து கொண்டிருந்தது. Personality என்ற சொல்லுக்கு என்ன தமிழ் என்று அறிஞர்கள் பலர் மூன்று நாட்கள் விவாதித்து முடிவுக்கு வரமுடியாமல் தவித்தனர். எதேச்சையாக அங்கு வந்து சேர்ந்த தெ.பொ.மீ., "இதற்கென்ன இவ்வளவு யோசனை? 'ஆளுமை' என்று குறித்துக் கொள்ள வேண்டியதுதானே" என்று பளிச்சென்று சொன்னார்!

* * * * *

பேராசிரியர் டாக்டர் தெ.பொ.மீ. மிகச் சிறந்த தமிழறிஞர் என்பது பலரும் அறிந்ததே. ஆனால் அவர் ஒரு தேசியவாதி, சீர்திருத்தவாதி என்பதெல்லாம் இன்று சிலருக்கே தெரியும். எனவே, "இருபதாம் நூற்றாண்டின் தமிழ் வளர்ச்சிக்குத் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரின் பங்களிப்பு" என்ற தலைப்பில் மூன்று நாள் சொற்பொழிவு நிகழ்த்திய பேராசிரியர் டாக்டர் க.த. திருநாவுக்கரசு, முதல் நாளன்று தெ.பொ.மீ.யின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து பல சுவையான விஷயங்களைக் கூறியது நல்லதாகவே அமைந்தது.

இவ்வாண்டு அமரர் கல்கி நினைவுச் சொற்பொழிவை நிகழ்த்திய க.த. திருநாவுக்கரசை அறிமுகப்படுத்திய சென்னை பல்கலைக் கழகத் தமிழ்த் துறை தலைவர் சி. பாலசுப்பிரமணியன், "நாங்கள் மற்றவர்களுக்காக எழுதுகிறோம். க.த.தி. எங்களுக்காக எழுதுகிறார்!" என்றார்.


— திருபர்

• ஜின்னா: பூரண சுயாட்சி




ராஜாஜி வாழ்க்கை வரலாறு — III

ராஜ்மோகன் காந்தி



• சர்ச்சில்: "காந்தி ஏன் சாகவில்லை?"

காந்தி ஜின்னா வாக்குவாதங்கள் ①



• காந்தி: தேசப் பிணைப்பு

விடுதலைபெற்றமகாத்மாவிடம்உடனே ஓடிச் செல்ல வேண்டும் என்று ஸி. ஆரின் மனம் துடித்தது. ஆனால் அவர் தம்மைத் தாமே கட்டுப்படுத்திக் கொண்டார். காந்தி யின் உடல்நிலை அரசியல் பிரச்னைகளை அலச இடம் தரவில்லை. மேலும் காந்தி தமது கருத் துக்களைப் பகிரங்கமாக வெளியிடுவதற்கு முன்பு அவரைச் சந்திக்க ஸி. ஆர். விரும்ப வில்லை. சட்ட மறுப்பு இயக்கம் பற்றிய தமது கருத்தை மகாத்மா இன்று மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கும். 1942 நிலைமைக்கும் 1944 சூழ்நிலைக்கும் இடையில் எவ்வளவோ மாறு தல்கள். ஆனால், 'காந்தி மனம் மாறியதற்குக் காரணம் ஸி. ஆர்.தான்; காந்தி சிறையி லிருந்த போது அவரைச் சந்தித்து மனதை மாற்றிவிட்டார் ஸி. ஆர்.' என்று காங்கிரஸ் காரர்கள் தம்மைச் சந்தேகிக்கக் கூடாது என்று கருதினார் ஸி. ஆர்.

பம்பாய்க்கு அருகே ஜுஹு கடற்கரை யில் ஓய்வு எடுத்துக் கொண்ட மகாத்மாவின் உடல்நிலை தேறியது. இது பலருக்கு நிம்மதி அளித்த போதிலும் வேறு சிலருக்கு ஏமாற்ற மும் தந்தது! வைஸ்ராயின் டயரியில் ஒரு குறிப்பு இப்படி எழுதப்பட்டிருக்கிறது: "காந்தி ஏன் இன்னும் சாகவில்லை?' என்று கோபமாகக் கேட்டு வின்ஸ்டன் (சர்ச்சில்) ஒரு புகார் தந்தியை எனக்கு அனுப்பியிருக் கிறார்!"

விடுதலை பெற்று எட்டு வாரங்கள் கழித்து மகாத்மா, வைஸ்ராயைச் சந்திக்கத் தாம் தயாராக இருப்பதாக அறிக்கை விட்டார். பூனாவில் கஸ்தூர்பா பெயரில் உருவாகி யிருந்த ஒரு பெண்கள் நலன் அமைப்பின் கூட்டத்துக்குச் சென்றார். அதன் அறங்காவல ரில் ஒருவராக ஸி. ஆர். அங்கு இருந்தார். பழைய சிநேகம் உறுதியாக இருந்தது. உடம்பு சரியாகி விட்டதால் தம்மைத் தண்டனைக் காலம் முடிய மறுபடி சிறைப்படுத்தும்படி வேவலைக் கேட்பதென்று மகாத்மா யோசித்து வந்தார். அப்படிக் கேட்டுக் கொள்ள அவசியமேயில்லை என்று ஸி. ஆர். வாதாடி மகாத்மாவை வென்றார்.

தேக ஆரோக்கியத்தை வளர்த்துக் கொள்ளப் பூனா அருகே பஞ்ச் கனி என்ற மலைவாச ஸ்தலத்துக்குப் பயணப்பட்டார் காந்தி. அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, ஸி. ஆரும் அங்கே அவருடன் சேர்ந்து கொண்டார். 'வைஸ்ராயைச் சந்திக்கத் தயார்' என்று காந்தி கூறியதை வேவல் நிரா கரித்த பிறகு, ஜுலை இறுதியில் மகாத்மா ஒரு திட்டத்தைக் கடிதம் மூலம் அனுப்பினார்:

"மத்திய சட்டசபைக்குப் பதில் கூற வேண் டிய அளவில் ஒரு தேசிய அரசு அமையுமா னால் யுத்த முயற்சிகளில் பிரிட்டிஷ் அரசுக்குக் காங்கிரஸ் முழு ஒத்துழைப்பு தரும். ராணுவ நடவடிக்கைகள் முழுவதையும் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டின் கீழேயே தொடர்ந்து வைத் துக் கொள்ள காங்கிரஸ் அனுமதிக்கும்."

காந்தியைப் பொறுத்தமட்டில் இது ஒரு புதிய திருப்பம்தான் என்றாலும், காந்தியும் காங் கிரஸும் இந்த மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டும் என்றுதான் ஸி. ஆர். இத்தனை நாளாக வற்புறுத்தி வந்திருந்தார். ஆனால் வேவல் இந்தத் திட்டத்தையும் ஏற்கவில்லை.

இதுபற்றி விவாதிக்கக்கூடத் தாம் தயாராக இல்லை என்று நிராகரித்து விட்டார்.

தம்முடைய பாகிஸ்தான் திட்டத்தைப் பத்திரிகைகளுக்கு வெளியிடத் தாம் விரும்புவதாகவும் அந்தத் திட்டத்தை ஜின்னா நிராகரித்து விட்டதாகத் தாம் அறிவிப்பதில் ஆட்சேபணை உண்டா என்று கேட்டு ஜின்னாவுக்கு ஸி. ஆர். தந்தி அடித்தார். திட்டத்தைத் தாம் நிராகரித்து விட்டதாகக் கூறுவது தவறு என்று பதில் தந்தி கொடுத்தார் ஜின்னா. காந்தி நேரடியாகத் தம்மிடம் இதுபற்றிப் பேசினால் திட்டத்தை முஸ்லிம் லீகிடம் சமர்ப்பிக்கத் தாம் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

காந்தி — ஜின்னா சந்திப்பதால் கெடுதல் நேருமா? முஸ்லிம் லீக் தலைவரும் தேசிய இயக்கத்தின் வழிகாட்டியும் சந்திக்கக் கூடாதா? மகாத்மாவும் ஸி. ஆரும் பஞ்ச் கனியில் இதுபற்றி யோசித்தார்கள். "என்னை இந்திய முஸ்லிம்களின் அல்லது இஸ்லாமின் எதிரியாக எண்ணாதீர்கள்" என்று ஜின்னாவுக்குக் கடிதம் எழுதினார் காந்தி. "சந்திக்கலாம்" என்ற யோசனையையும் அதில் தெரிவித்திருந்தார். இதற்குச் சம்மதம் தெரிவித்த ஜின்னா பம்பாயில் தமது வீட்டில் சந்திக்கலாம் என்று அழைத்தார்.

காந்தியுடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்பாக — ஜூலை இறுதியில் — ராஜாஜி திட்டத்தைக் கடுமையாகச் சாடினார் ஜின்னா. 'முஸ்லிம்களுக்கு ஒரு சொந்த நாடு வேண்டும் என்ற லீகின் லாகூர் தீர்மானத்தை இந்தத் திட்டம் பூர்த்தி செய்கிறது' என்ற ராஜாஜியின் வாதத்தை அவர் மறுத்தோடு 'உண்மையில் ராஜாஜி திட்டம் தங்கள் தீர்மானத்துக்கு எதிரானது; அதனைத் தகர்த்தெறிகிற முயற்சி' என்றும் வர்ணித்தார். 'ஸி. ஆர். வழங்க முன்வருவது சின்னாபின்னப்படுத்தப்பட்ட பாகிஸ்தான்' என்றார். ஆனால், காந்தி, ஜின்னாவின் மனமாற்றத்துக்கு உழைக்கத் தயாராக இருந்தார். ஜின்னாவோ, காந்தியைத் தம் கருத்துக்கு இசைவாக மாற்றிவிடத் தாம் முயன்றதாகப் பின்னால் தெரிவித்தார்!

ஜின்னாவின் உடல்நிலை காரணமாகச் சில வாரங்கள் ஒத்திப் போடப்பட்ட பேச்சு வார்த்தை செப்டம்பர் 9 ல் தொடங்கி 27 வரை நீடித்தது. இருவரும் 14 தடவைகள் சந்தித்தனர். தங்கள் பேச்சு வார்த்தைகளைப் பல கடிதங்களில் பதிவு செய்தனர். அவற்றில் 15,000 வார்த்தைகள் இடம் பெற்றன! பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறப் பிரார்த்தித்தவர்கள் பலர். ஆனால் பிரார்த்தனை நிறைவேறவில்லை.

'ஸி. ஆர். திட்டத்தின் அடிப்படையில் காந்தி சிபாரிசு செய்ய முன்வந்த பாகிஸ்தான் கொஞ்சமும் திருப்தி அளிக்கவில்லை' என்று ஜின்னா கூறினார். அது அளவில் சிறியது. அதில் பஞ்சாபும் வங்காளமும் முழுமையாக இடம் பெறவில்லை. மேலும் காந்தியும் ஸி. ஆரும் சிபாரிசு செய்த பாகிஸ்தான், இந்தியாவிலிருந்து முழுமையாகப் பிரிந்து விடவில்லை. அயல்நாட்டு உறவுகள்; பாதுகாப்பு; ஃபோன், தபால், தந்தி போன்ற தொடர்புகள் — இவையெல்லாம் காந்தியின் கருத்துப்படி 'ஹிந்துஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நேசப் பிணைப்பாக விளங்கும்.' ஆனால் ஜின்னாவோ இந்தப் பிணைப்புக்களை பாகிஸ்தானின் சுதந்திரத்துக்கு — பூரண சுயாட்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் என்று கருதினார்.

மூன்றாவதாக ஸி. ஆரும் காந்தியும் திட்டமிட்ட பாகிஸ்தான், இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு உருவாகும். ஆனால் ஜின்னாவோ பிரிட்டிஷார் விடைபெறுமுன், பிரிட்டிஷாரின் ஆசியுடன் பாகிஸ்தான் உருவாக வேண்டும் என்று கருதினார். காங்கிரஸ் ஆட்சி நடக்கும்போது இந்தியா, வாக்குறுதியை நிறைவேற்றி பாகிஸ்தானை உருவாக்கி வைக்கும் என்று நம்ப அவர் தயாராக இல்லை!

நான்காவதாக காந்தி—ஸி. ஆரின் பாகிஸ்தான், வோட்டெடுப்பின் மூலம் பொதுஜன அபிப்பிராயத்தை அறிந்த பின் அமையும். அப்போது முஸ்லிம்கள் மட்டுமின்றி முஸ்லிம் அல்லாதாரும் வோட்டுப் போடுவார்கள்! 'முஸ்லிம்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்க முஸ்லிம் அல்லாதாருக்கு உரிமை இல்லை' என்று வாதாடினார் ஜின்னா.

(தொடரும்)

தமிழாக்கம்: கி. ராஜேந்திரன்

இளவரசர் முன் மண்டியிட மறுத்தவர்



சின்னஞ்சிறு பெண் குழந்தைகள்... ஆறு வயது, ஐந்து வயது என்று ஒரே குதூகலமாய்த் தெரு வாசலில் விளையாடிக் கொண்டிருக்கின்றன. கண்களை அகல விரித்து, இன்னும் ஓர் ஐந்து வயதுக் குழந்தை விளையாட்டில் சேர்ந்து கொள்ள ஓடி வருகிறது. மற்ற குழந்தைகள் ஆட்டத்தை அப்படியே நிறுத்திவிட்டு இந்தக் குழந்தையை விரட்டுகின்றன.

"போடி... நீயெல்லாம் எங்கூட வெளையாட வரக் கூடாது... பார்த்தியா... எங்க கழுத்திலே தாலி இருக்கு... உன்கிட்டே இல்லே..."

விவரம் புரியாமல் அழுது கொண்டே அந்தப் பெண் குழந்தை வீட்டுக்குப் போகிறது. விவரம் புரிந்தும் புரியாமலும் ஒரு பன்னிரண்டு வயதுச் சிறுமி இந்தக் காட்சியைப் பார்த்து உடைந்து போகிறாள்.

ஓர் ஆண்டுக்கு முன்னால்தான் அவளும் இப்படி ஆனாள். பதினொரு வயதில் திருமணம். புது ஆடைகள் கட்டிக் கொள்ளச் சொன்னார்கள். பூச்சூடினார்கள். இரண்டே மாதம்... புதிது, பூ எதுவும் இனிமேல் உனக்குக் கூடாது என்றார்கள்... அவள் கணவன் செத்துப் போய்விட்டானாம்...

மேலே சொல்லப்பட்ட சிறுமி விதவையாக நேர்ந்தாலும், வேறு வகையில் மிகவும் அதிர்ஷ்டசாலி. மற்ற பெற்றோர்களைப் போல அல்லாமல் வித்தியாசமாகச் சிந்தனை செய்தார் அவள் தந்தை. அதனால் அந்தப் பெண் சுபலக்ஷ்மி தொடர்ந்து மேலே படித்தாள். தாவரவியல் பட்டம் பெற்றாள். பிஞ்சு வயதில் அவளைப் பாதித்த குழந்தை விதவைகளைப் பற்றிய சிந்தனை அவளை ஒரு சமூக சேவகியாக மாற்றியது.

தன்னையொத்த பால்ய விதவைகள் பலருக்கு அவள் நேசக்கரம் நீட்டினாள். அவர்களுக்குப் படிப்புக்கும் வேலைக்கும் வழி காட்டி வாழ்க்கையில் ஒரு பிடிப்பை உண்டாக்கினாள்.

இன்று விவேகானந்தர் இல்லமாகத் திகழ்கிற ஐஸ் ஹவுஸ் கட்டடத்தில் விதவைகள் நலனுக்காக ஒரு விடுதியைத் தொடங்கி நடத்தினாள்.

'ஸிஸ்டர்' என்று பலராலும் அறியப்பட்ட இவருடைய வரலாற்றின் அடித்தளமாக நின்றவர் தந்தை ஆர். வி. சுப்பிரமணிய அய்யர். அவரது மனோதிடமும், எதிர்கால நோக்கும் தான் இந்த 'சேவைக்கு ஒரு சகோதரி'யை நமக்குத் தந்தது.

வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வந்த போது எல்லோரும் அவரைச் சந்தித்து வணங்க அனுமதிக்கப்பட்டார்கள். இடப்புற வழியாகப் போய், இளவரசர் முன் மண்டியிட வேண்டும். எழுந்து அவருடைய கையை முத்தமிட வேண்டும் என்று ஏற்பாடு. ஸிஸ்டரும் போனார். மண்டியிடவில்லை. முத்தமிடவில்லை. இருகரம் கூப்பி வணக்கம் தெரிவித்தார். இளவரசர் நீட்டிய கரத்தோடு முன்னே ஓர் அடி எடுத்து வைத்தார். ஸிஸ்டர் கூப்பிய கரத்தோடு பின்னால் நகர்ந்து கொண்டார்.

"கை குலுக்குவது எங்கள் பண்பாடல்ல. கரம் குவிப்பது மரியாதையையும் வணக்கத்தையும் தெரிவிப்பது" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார். பத்திரிகைகள் கண்டித்தன. ஸிஸ்டர் அகம்பாவக்காரர் என்பது போல் எழுதின. ஆனால், வேல்ஸ் இளவரசர் அதிகாரிகளைக் கண்டித்தார். "இவர்களிடம் அழகான ஒரு மரபு இருக்கும் போது ஏன் எனக்கு அதைத் தெரிவிக்கவில்லை?" என்று கேட்டார்.

சகோதரி சுபலக்ஷ்மி அவர்களின் தங்கை மகன் ஸ்ரீ வி. எஸ். சங்கருடன் உரையாடிய போது தகவல்களைச் சேகரித்தவர்:

— சுப்ர. பாலன்

வாழ்க்கை வாழ்வதற்கே!



உலகம் அழியப் போகிறது என்றால்...

"உலகம் இன்னும் ஐந்து நிமிஷங்களில் நிச்சயம் அழியப் போகிறது என்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று கால்பந்து ஆடிக்கொண்டிருந்தவர்களைக் கேட்டபோது ஒவ்வொருவரும் ஒரு மாதிரி பதில் சொன்னார்கள். "கோவிலுக்குப் போவேன்," "காதலியைச் சந்திப்பேன்," "தாயார் மடியில் தலை வைத்துப் படுப்பேன்" என்றெல்லாம் கூறினார்கள். ஒரே ஒருவர் மட்டும், "நான் தொடர்ந்து கால்பந்து ஆடுவேன்" என்றார்!

இந்தத் துணுக்கை எழுதி அனுப்பிய வாசகர் ஜீவா இதுபோன்ற கடமை உணர்வை எல்லோரும் பெற்று விட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்? சமுதாயப் பிரச்னைகளே குறைந்து விடுமல்லவா? என்று கேட்கிறார். தொடர்ந்து தமது நண்பர் ஒருவர் பற்றி வருத்தத்துடன் குறிப்பிடுகிறார் ஜீவா: "அவர் அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர். குடும்பத்துக்கு ஏராளப் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டிய நிலையில் உள்ளவர். ஆனால் தினமும் குடித்துக் கெட்டுப் போகிறார். கணிசமான சம்பளம்தான்; ஆனால் அதில் ஐந்தில் ஒரு பங்கை மது அரக்கன் பிடுங்கிக் கொள்கிறான். மாதக் கடைசியில் சில்லறைச் செலவுகளுக்கே லொட்டா போடுகிறார். அவ்வாறிருக்கக் குடும்பத்தின் பால் இவருக்குள்ள கடமைகளை இவரால் எப்படி நிறைவேற்ற முடியும்? இவரைச் சந்திக்கும்போது நான் எப்படி அன்புடன் பேசிப் பழக முடியும்? வாழ்க்கை வாழ்வதற்கே என்றால் வாழ்வது கடமையைச் செய்யத்தான். கடமைகளைச் சரிவரச் செய்யும் போதுதானே உண்மையான ஆனந்தம் பிறக்கிறது? இதை என் நண்பர் எப்போது புரிந்து கொள்ளப் போகிறார்?

நண்பர் ஜீவாவின் ஆதங்கம் நியாயமானது. ஆனால் அதேசமயம், ஜீவாவிடம் நான் ஒன்று கேட்டுக் கொள்வேன். குடிக்கிறார் என்பதற்காக நண்பரை ஒதுக்காதீர்கள். அவரிடம் நிறையப் பேசி, பழகி, அவர் ஏன் குடிக்கிறார், மனக்குறைகள் ஏதும் உள்ளதா என்று கண்டறியப் பாருங்கள். அவற்றை நிவர்த்திக்க வழி தேடுங்கள். யோசனை சொல்லுங்கள். மெல்ல மெல்ல நண்பரை நல்வழிப்படுத்த முயலுங்கள். இதுவும் ஒரு கடமைதான். இந்தக் கடமையும் உங்களுக்கு உண்டு. இந்தக் கடமையைச் செய்யும் போதும் நீங்கள் ஆனந்தம் அடைவீர்கள். வெற்றி பெற்றாலோ சந்தோஷத்தில் மேக மண்டலத்திலேயே மிதப்பீர்கள்.

ஆனால் ஒன்று, மிஸ்டர் ஜீவா! ஜாக்கிரதை! நண்பரை ஓர் அரக்கனின் பிடியிலிருந்து விடுவிக்கிறேன் என்று நெருங்கி, கடைசியில் அந்த அரக்கன் பிடியில் நீங்களே சிக்கிக் கொண்டு விடப் போகிறீர்கள்! அப்படி அடிமைப்படாதிருக்கக் கூடிய மனோதிடம் உங்களுக்கு இருக்குமானால் மட்டுமே நண்பனை அணுகுங்கள்; இல்லையேல் ஒதுங்கி விடுங்கள்!

"கட்டுப்பாடற்ற ஒழுக்கக் கேடான வாழ்க்கை முறை ஆரம்பத்தில் இன்பமாக இருக்கும். ஆனால் போகப் போக மனநிம்மதியை அது அடியோடு குழிதோண்டிப் புதைத்து விடும்" என்று எழுதுகிறார் சந்திரிகா கண்ணன். "முக்கியமாக இதைக் குழந்தைகளுக்கு நன்றாகப் புரிய வையுங்கள்" என்று கேட்டுக்கொள்கிறது சந்திரிகாவின் தாயுள்ளம். "அப்பா பிஸினஸ் விஷயத்திலும் அம்மா ஆபீஸ் அல்லது லேடீஸ் கிளப் விஷயத்திலும் தீவிர ஈடுபாடு கொண்டு குழந்தைகளுடன், நிறையப் பேசிப் பழகத் தவறிவிட்டால், அவர்களிடம் அன்பையும் கண்டிப்பையும் சமயத்துக்கேற்பக் காண்பிக்காதிருந்து விட்டால் அந்தக் குழந்தைகள் தீய நண்பர்களின் உறவால் நிச்சயம் தவறான பாதையைத்தான் தேர்ந்தெடுப்பார்கள்" என்று எச்சரிக்கவும் செய்கிறார் சந்திரிகா தமது கடிதத்தில்.

உண்மைதான். என் நண்பர் ஒருவரின் மகன் போதை மருந்துக்கோ மதுவுக்கோ வேறு கெட்ட பழக்கத்துக்கோ அடிமையாகவில்லை. ஆனால் கல்லூரியில் அடியெடுத்து வைத்த நாளிலேயே சிகரெட் பிடிக்கக் கற்றுக் கொண்டான். "உலகில் சிகரெட் பிடிக்காதவர்கள் தினந்தோறும் ஆயிரக்கணக்கில் கான்ஸர் வந்து செத்து மடிகிறார்கள். அல்லது, ஹார்ட் அட்டாக்கில் சாகிறார்கள்" என்று வாதம் புரிந்து கொண்டிருந்தவனைக் கல்யாணமான பிறகு மனைவி அன்பும் கண்டிப்பும் காட்டி வழிக்குக் கொணர்ந்தாள். பத்து ஆண்டுகளுக்குப்பிறகு அவனுக்குஹெர்னியா ஆபரேஷன் நடந்தது. அவனுக்கு மயக்க மருந்து கொடுத்த டாக்டர் மறுநாள் அவனைக் காண வந்தார்.

"நீ சிகரெட் பிடித்ததுண்டா?" என்று கேட்டார்.

"ஆமாம், ஹெவி ஸ்மோக்கர்! ஆனால் அதை விட்டொழித்துப் பத்து வருஷங்கள் ஆகிவிட்டதே! உங்களுக்கு எப்படித் தெரிய வந்தது?" என்று பதிலுக்குக் கேட்டான் இவன்.

"நீதான் மயக்க மருந்தைச் சுவாசிக்கும் போது ஒவ்வொரு மூச்சிலும் செத்துப் பிழைத்துக் கொண்டிருந்தாயே!" என்றார், டாக்டர்.

— ஜீவன்

மேத்தாவுக்கு விருதளித்தது நியாயமா?

* இவருக்குக் கொடுப்பதா?



* பிடித்த கதை





...ஈடு கொடுத்து...



* 'சக்கர விஜயம்'





* அறிமுகம்: ஏழு 'ஆர்'

* நெம்பர் ஒன்

* முருகதாசன், ஸ்ரீரங்கம்

? அற்புதமான பல புதுக் கவிதைகளை எழுதிய அப்துல் ரகுமானைப் புறக்கணித்து விட்டு மேத்தாவுக்கு பாரதிதாசன் விருது தருவது நியாயமா, சார்?

! பாராட்டுக்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு சிறப்பாக, அடக்கமாக, ஆக்கப்பணி புரிந்து வருகிறவர் மூத்த கவிஞரான அப்துல் ரஹ்மான். என்றாலும் புதுக்கவிதை என்றால் ஓர் இயக்கம் என்கிற அளவில் புகழ் சேர்த்திருப்பவர் மேத்தா. அவருக்குக் கணிசமான எண்ணிக்கையில் வாரிசுகள் ஏற்பட்டு இவரைத் தாத்தா ஆக்கியும் விட்டார்கள். (புதுக் கவிதையின் தந்தை என்பதை விட தாத்தாதான் மேத்தாவுடன் ஓசை நயத்துடன் இழைகிறதாம்!;) "கண்பூட் அரசனின் மனநிலையில் இருந்து நான் புதுக்கவிதை அலைகளை நிற்கச் சொல்லவில்லை; கடலிலே பொங்கி கடலிலேயே மடியும் கரை சேரா அலைகளாய் இருந்து பயனில்லை என்ற அர்த்தத்தில்தான் சொல்கிறேன்" என்ற மேத்தாவின் விளக்கத்திலும் ஒரு நியாயம் இருக்கிறது. எனவே யாருக்குக் கொடுத்த பரிசு என்றாலும் புதுக் கவிதைக்கு, தமிழ்க் கவிஞருக்குக் கொடுத்த பரிசு என்று எடுத்துக் கொண்டு எல்லோரும் மகிழ்வதுதான் முறை.

* ஆங்கரை ஆனந், ஆங்கரை.

? அரசியல் அரிச்சுவடி .... சில வரிகள்?

! அ — அடித்துப் பேசு; ஆ — ஆசைக்குத் தடை போடாதே! இ — இலஞ்சம் வாங்கு...

* கே. செல்வராஜ், கொப்பம்பட்டி

? பாரதி ராஜா அறிமுகப்படுத்திய ஏழு 'ஆர்'களில் உங்களை அதிகம் கவர்ந்த 'ஆர்' எந்த 'ஆர்'?

! முதல் 'ஆர்.'

* ஜி. ராமகிருஷ்ணன், மன்னார்குடி

? கல்லூரிகளில் மாணவர் பேரவை தேர்தல் அவசியமா?

! ரொம்ப அவசியம் — அரசியல்வாதிகளுக்கு!

* வி. முரளி, சைதை

? பு.....பு.....;உ.....ப போன்ற பாடல்களைக் கேட்கும்போது வயிற்றெரிச்சல் பற்றிக் கொண்டு வரவில்லை?

! எரிவதற்கு வயிறு பாக்கி இல்லாத அளவுக்கு ஏற்கெனவே பட்டாகி விட்டது —

நீங்கள் கேட்டவை — தாரா

'ஸ்வக்கார்தே ஆசை, வெங்காய தோசை' போன்ற அற்புதமான பாடல்களைக் கேட்டே.

* ஆர். அப்துல் சலாம், திருச்சி

? வரவர தெருக் கூத்து, சர்க்கஸ் போன்ற வற்றுக்கு மதிப்பில்லாமல் போய்விட்டதே, என்ன காரணம்?

! அரசியல்வாதிகள் இரண்டையும் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு அந்த வல்ல கலைகளைக் கேவலப்படுத்தி விட்டார்கள்.

* குரு வைத்தியநாதன், கோவிந்தபுத்தூர்

? சொர்க்கம் எங்கே இருக்கிறது?

! குரு கேட்கிற கேள்வியா இது? — நம்மிடம்தான் இருக்கிறது!

* சிவ. ராதாகிருஷ்ணன், சென்னை — 33

? ஹேமா ஆனந்த தீர்த்தனின் கதைகளில் தங்களுக்கு மிகவும் பிடித்தது எது?

! கடைசியாக அவர் கல்கியில் எழுதிய சிறுகதை: ''அபயஹஸ்தம்.'' அதிலே அவரிடத்தில் மனமாற்றம் ஏற்பட்டிருப்பது புரிந்தது. ஆனால் அதைப் புரிந்து கொள்ளாமல் அவரை மேலும் மேலும் கவர்ச்சிக் கதைகளையே எழுதப் பணித்து வருத்தினார்கள். அவரது உயர்ந்த தமிழ்த் தொண்டு, அருமையான பிற மொழி இந்தியக் கதைகளைத் தமிழாக்கம் செய்ததுதான். கடைசியாக பாப்பாரப்பட்டிக்குப் போயிருந்த போது உடுப்பி பெஜாவர் மடம் சுவாமிகளைச் சந்திக்க, அவர் தமது கீதை விளக்கத்தைத் தமிழாக்கம் செய்யப் பணித்திருக்கிறார். அதைச் சிரத்தையோடு நிறைவேற்றிய கையோடு ஆனந்த தீர்த்தனின் முடிவு சம்பவித்திருக்கிறது. அவரது இறுதி விருப்பம் என்றே கூறலாம், தமது மகனின் திருமணத்துக்கு வந்திருந்து வாழ்த்தியவர்களுக்குக் கல்கி மூலம் நன்றி கூறியது (31.8.86 இதழ்) அந்த நன்றியறிதலில் நம் நெஞ்சங்கள் என்றும் நிறைந்திருக்கும்.

* ஜி. நீலா, மன்னார்குடி

* ''இவிரபரிசோதனை செய்யப்பட்ட பிரதமர் விமானத்திலேயே பழுதென்றால் நம் நிலை என்ன?' என்று மக்கள் சிந்திக்கத் தலைப்பட்டால் ஏர் இந்தியா மீது அவர்களுக்குள்ள நம்பிக்கை தகர்ந்துவிடும்'' என்று ராஜீவ் பேசியிருப்பது பற்றி....?

! சரியான சிந்தனை. இதே எண்ணம்தான் அரசு யந்திரம் எங்கே பழுதானாலும் மக்களுக்கு ஏற்படும். அரசிடம் மக்களுக்கு நம்பிக்கை தகர்ந்து போகக்கூடாதென்றால் ஏர் இந்தியா மட்டுமல்ல. அரசு யந்திரத்தின் ஒவ்வொரு பகுதியும் சீராக, செம்மையாகச் செயல்பட வேண்டும்.

* எஸ். ராஜேந்திரன், தென்காசி

? கருணாநிதி, 'இன்னும் பத்து ஆண்டுகளில் தமிழ் அழிந்துவிடும்' என்று பேசியிருக்கிறாரே, இதற்கு என்ன சொல்கிறீர்?

! கருணாநிதி எந்தச் சந்தர்ப்பத்தில்,என்று இப்படிப் பேசினார் என்பதை நீங்கள் தெளிவுபடுத்தவில்லை. இது உண்மையானால், ஒரு வேளை ஹிந்தித் திணிப்பு அதிகரித்து வருவதையொட்டி மனம் நொந்து இப்படிப் பேசியிருக்கலாம். ஆனால் தமிழை அழிப்பது, ஒழிப்பது என்பது அத்தனை சுலபமல்ல. இருநூறு ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியே இதைச் சாதிக்க முடியாதபோது நாம் கவலைப்பட அவசியமில்லை. நாம் இந்தியின் மேலாதிக்கப் போக்கை எதிர்ப்பது தமிழ் அழிந்துவிடும் என்ற கவலையால் அல்ல. சுயமரியாதை காரணமாகத்தான்.

* ரங்கராஜன், சென்னை

? ஏன் சார், கச்சேரிக்கெல்லாம் போவதுண்டா?

! நீங்கள் எந்தக் கச்சேரியைக் குறிப்பிடுகிறீர்களோ, எனக்குத் தெரியாது. சமீபத்தில் நான் கேட்கப் போனது கிருஷ்ண கான சபையில் சேஷகோபாலன் கச்சேரி. சுவரப் பிரஸ்தாரம் செய்கிறேன் என்று அவர் சக்கர வியூகத்துக்குள் புகும்போதெல்லாம் ஒரு ராஜேஷ்குமார் ஸஸ்பென்ஸ். அவருக்கு ஏற்படுகிறதோ இல்லையோ நம்மைக் கப்பென்று பிடித்துக் கொள்கிறது. அது முடிந்ததும் 'ஹப்பா' என்று ஒரு பெருமூச்சு. வயலின் வித்வான் வேறு அவருக்கு ஈடுகொடுத்து பத்ம வியூகத்தில் புகவேண்டிய நிர்ப்பந்தம்! உருப்படியாக வெளியே வந்துசேர வேண்டுமே என்ற கவலை நமக்கு. இப்படி 'திக்திக்' என்று இருதயத்தை வேலை வாங்குகிற வித்(த்)தைகள் ஒருபக்கம் இருந்தாலும் முன்னைக்கிப் போது சேஷகோபாலன் பாடல்களை நிதானமாக, பாவ பூர்வமாக, அழுத்தமான லயிப்புடன் பாடுகிறார். உச்சரிப்போ ஸ்பஷ்டம். இதனால் நமக்கு முழுமையான ஈடுபாடு உண்டாகிறது. கார்வைகள் தங்கக்கம்பி; பிர்காக்களில் ஜிலுஜிலுப்பு. வயலின் வாசித்த சந்திரசேகர் வழக்கமாகவே ஒவ்வொரு ராகம் வாசிக்கும்போதும் அதில் நமக்குத் தெரிந்த சில பாடல்களை நினைவூட்டி விடுவார். ரசனையாக இருக்கும். அன்று 'கிறு புறு' சற்று அதிகம். அது சேஷுவுக்கே சமர்ப்பணம். பல்லவியின் ''விதரண, குண, நிபுண'' என்ற வேணுகானவர்ணனை சேஷ கோபாலனுக்கே கூடப் பொருந்தும்!

* ரூ 10 பரிசு பெறுபவர்:
ஜி. நீலா,
33, A. முதல் தெரு.
மன்னார்குடி — 614 001.

மௌனராகம்



கௌசல்யா சுப்ரஜா ராமாவுடன் ஒரு விடியல். லேட்டாய் எழுந்திருக்கும் ரேவதி. குடும்பத்தின் மற்ற அத்தனை ஜீவன்களும் குளித்துவிட்டு அவரவர் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்க, ரேவதி தங்கை, அண்ணன் அம்மா என்று வரிசை வந்து, கண்டிப்புக்கார அப்பா எதிரில் காப்பி டபராவை மறைத்துக் கொண்டு, அப்பா பேச வேண்டிய வசனத்தை அப்படியே சின்னக் குரலில் எடுத்துவிட, கண்டிப்புக்கார அப்பா சிரிக்க — கலகலப்பான தொடக்கம். தோட்டத்தில் மனைவியைக் கொஞ்சும் அண்ணன் மீது மாடியிலிருந்து தொட்டித் தண்ணீரை அப்படியே கவிழ்த்து விடும் குறும்பு. இந்தத் தொடக்கத்திற்குள் புகுந்து கொண்ட கலகல. அதற்குப் பிறகு இந்தக் குடும்பக் கதை, தண்டவாளம் மாற்றிக் கொண்டு, காதல் ட்ராக்கில் பயணம் செய்கிறது. வெகு லேட்டான ஏமாற்றம் என்றாலும், இந்தக் காதல் ட்ராக்கும் ஜோராக அமைந்துவிட்டதில் சீக்கிரமே சமாதானமாகிவிடுகிறது.

என்ன கதை?

பிடிக்காத எம்.பி.ஏ. மாப்பிள்ளைக்கு கட்டாயத்தால் (அப்பா ஹார்ட் அட்டாக்) கழுத்தை நீட்டி டெல்லியில் தனிக் குடித்தனம் தொடங்குகிறார் ரேவதி. புருஷன்காரன் வெகு ஆசையாய் என்ன வேண்டும் என்று கேட்க, 'விவாகரத்து' என்கிறார் ரேவதி. விவாகரத்திற்கு மனுப் போட்டால் கல்யாணம் ஆகி ஒரு வருடம் கழித்துத்தான் அது பரிசீலிக்கப்படும் என்று வக்கீல் சொல்லிவிட, இந்தத் தம்பதிகள் தாமரை இலைத் தண்ணீர் கணக்காய் ஒரே வீட்டில் வாழ்க்கை வைத் தொடங்கி, முடிவில் இணைகிறார்களா, பிரிகிறார்களா என்பதை வெள்ளித் திரை விவரிக்கும் கதை.

ரேவதி கோரும் விவாகரத்திற்குக் காரணம் அவரது கல்யாணத்திற்கு முந்தைய காதல் கதை. அந்தக் காதலனாக இரண்டு பாண்ட் பாக்கெட்டிலும் கைகளை நுழைத்துக் கொண்டு சூயிங்கம் மென்று கொண்டு, இப்படி ஒரு துள்ளு, அப்படி ஒரு துள்ளு என்று நடந்து, ஓடி ரேவதியின் காதலை பலவந்தமாகப் பெறும் கார்த்திக். அவர் ஃப்ரேமில் நுழைந்தது முதல் ஓய்வது வரை ஒரு புயல். ஒரு காலத்தில் தயிர் சாதமாக இருந்த கார்த்திக்கா இது?

ரேவதி, மோகன் எல்லோரையும் விழுங்கி ஏப்பம் விட்டுவிடுகிறார்கள். அபாரம்.

கல்லூரியில் அமர்ந்திருக்கும்போது ஜன்னல் வழியே தெரியும் மரங்கள், கிளைகள், இலைகள். அந்த இலைகளின் மீது வழியும் மழைத் துளிகள். டெல்லி சாலையின் இறக்கத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மேலெழுந்து வரும் ஃபியட். இதுவரை யாரும் காட்டாத கோணத்தில் காதலின் அமர சின்னமான தாஜ்மஹால். பறவைக் கோணத்தில் அந்தப் பெரிய கூடாரங்களுக்கு மேல் மெல்ல நகர்ந்து வரும் வெள்ளை ஃபியட். காமிராக்காரர் காமிராவிற்குப் பதில் மந்திரக்கோலை வைத்துக் கொண்டிருக்கிறாரா என்ன?, ஃப்ரேமுக்கு ஃப்ரேம் விளையாடி இருக்கும் அந்தக் காமிராவை இயக்கியிருப்பவர் ஸ்ரீராம். கை கொடுங்கள் ஸ்ரீராம். வெகு அழுத்தமாகக் குலுக்க வேண்டும்போல் இருக்கிறது.

ரேவதி அந்த சர்தார்ஜிக்கு சொல்லித் தரும் 'சத் தான் போடா' தமிழ், மோகன் அடிபட்டு ஆஸ்பத்திரியில் உயிருக்கு அல்லாடுவது, அந்த முதல் பாடலை படமாக்கியிருக்கும் விதம் இவை டைரக்டர் மணிரத்னம் நிறைய மூளையைக் கசக்கிக் கொண்டு பாடுபட்டிருப்பதைத் தெரிவிக்கின்றன. சீரான திரைக்கதை சிக்கலில்லாமல் விறுவிறுவென்று நகர்கிறது.

இருந்தாலுங்கூட, ஆக்ராவில் பாடப்படும் அந்தத் தமிழ்ப் பாட்டு, இடைவேளைக்குப் பின் கதையில் விழும் லேசான தொய்வு — இவை எல்லாம் உறுத்தல்கள்.

'ஸோ வாட்! எழுந்து வெளியில் வரும்போது ஏற்படும் மன நிறைவு இந்த உறுத்தல்களை எல்லாம் காணாமல் அடித்துவிடுகிறதே. அது போதாதா?

— ஜெயமன்மதன்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. (Phone: 431543).

Assistant Editor: P. S. Mani.   Editor: K. Rajendran.


உங்கள் பார்வை-
எமது புதிய சர்வதேச சூட்டிங்குகள் மீது!
பாலியெஸ்டர் வூல்,ஒர்ஸ்டெட் மற்றும் பாலியெஸ்டர் ப்ளெண்டெட் சூட்டிங்குகள்*
சேஸாரி
கலெக்ஷனின் சூட்டிங்ஸ்
பாம்பே டையிங்